# பகுதி IV

## இலங்கை மத்திய வங்கியினதும் வங்கி நிறுவனங்களினதும் கடமைகளையும் தொழிற்பாடுகளையும் பற்றிய 1987ஆம் ஆண்டின் முதன்மைச் சட்டவாக்கங்கள்


| | | பக்கம் |
|---|---|---|
| 1. | 1987 ஆம் ஆண்டின் 8 ஆம் இலக்க உண்ணாட்டரசிறை (திருத்தச்) சட்டம் | ( i ) |
| 2, | 1987 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க மொத்த விற்பனை வரவு வரி (திருத்தச்) சட்டம் | ( xxiii ) |
| 3. | 1987 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க தேசிய சேமிப்பு வங்கி (திருத்தச்) சட்டம் | ( xxx ) |
| 4. | 1987 ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்க பிணையங்கள் பேரவைச் சட்டம் | ( xxxi ) |
| 5. | 1987 ஆம் ஆண்டின் 51 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டம் | ( Lxiii ) |

# 1987 ஆம் ஆண்டின் 8 ஆம் இலக்க, உண்ணுட்டரசிறை (திருத்தம்) சட்டம்

*[1987 மார்ச் மாதம் 06 ஆம் தேதியன்று அத்தாட்சிப்படுத்தப்பட்டது]*

**1979 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க, உண்ணுட்டரசிறைச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்**

1. இச்சட்டம் 1987 ஆம் ஆண்டின் 8 ஆம் இலக்க, உண்ணுட்டரசிறை (திருத்த)ச் சட்டம் என எடுத்துக் காட்டப்படலாம்.

2. இதனகத்துப் பின்னர் ''முதன்மைச் சட்டவாக்கம்'' எனக் குறிப்பீடு செய்யப்படும், 1979 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க, உண்ணுட்டரசிறைச் சட்டத்தின் 7 ஆம் பிரிவானது இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:—

(1) அப்பிரிவின் (4) ஆம் உட்பிரிவில் (ஈ) என்னும் பந்தியில் ''ஏதேனும் ஆதனத்தின் சொத்தாண்மை மாறும் விடயத்தில்'' என்னும் சொற்களுக்குப் பதிலாக ''1986 நவம்பர் 12 ஆம் தேதிக்கு முன்னர் ஏதேனும் ஆதனத்தின் சொத்தாண்மை மாறும் விடயத்தில்'' என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலமும்;

(2) அப்பிரிவின் (4) ஆம் உட்பிரிவை உடனடுத்துப் பின்வரும் உட்பிரிவை உட்புகுத்துவதன்மூலமும்:—

''(5) 1986 நவம்பர் 12 ஆம் தேதியன்று அல்லது அதற்குப் பின்னர் எவரேனும் ஆளுக்கு எழுகின்ற ஏதேனும் மூலதன வருமான மிகையொன்று தொடர்பில், (3) ஆம் உட்பிரிவில் அல்லது (4) ஆம் உட்பிரிவில் உள்ள ''1957 ஏப்பிறில் 1 ஆம் தேதி'' பற்றிய குறிப்பீடு ஒவ்வொன்றும், ''1977 ஏப்பிறில் 1 ஆம் தேதி'' பற்றிய குறிப்பீடு ஒன்ருக வாசித்துப் பொருள் கொள்ளப்படுதல் வேண்டும்''.

3. முதன்மைச் சட்டவாக்கத்தின் 8 ஆம் பிரிவு அப்பிரிவின் (அ) என்னும் பந்தியில் இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:—

(1) அப்பந்தியின் (XLIX) ஆம் உட்பந்தியில், ''1978 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, சனுதிபதி நிதியச் சட்டத்தினுல் தாபிக்கப்பட்ட சனுதிபதி நிதியத்தின்'' என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக ''1978 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க சனுதிபதி நிதியச் சட்டத்தினுல் தாபிக்கப்பட்ட சனுதிபதி நிதியத்தின்; அத்துடன்'' என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலமும்; அத்துடன்

(2) அப்பந்தியின் முடிவில் பின்வரும் உட்பந்தியைச் சேர்ப்பதன்மூலமும்:—

''(L) 1985 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க, தேசிய பாதுகாப்பு நிதியச் சட்டத்தினுல் தாபிக்கப்பட்ட தேசியப் பாதுகாப்பு நிதியத்தின்;''

4. முதன்மைச் சட்டவாக்கத்தின் 9 ஆம் பிரிவு, அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் (ஔ) என்னும் பந்தியின் (1) ஆம் உட்பந்தியில் இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:—

(1) அவ்வுட்பந்தியின் (ஆ) என்னும் விடயத்தில் ''ஏதேனும் வரி மதிப்பீட்டாண்டில்'' என்னும் சொற்களுக்குப் பதிலாக, வரி மதிப்பீட்டாண்டில்'' என்னும் சொற்களை இடுவதன் மூலமும்; அத்துடன்

(2) அவ்வுட்பந்தியின் முடிவில் பின்வருவதனைச் சேர்ப்பதன்மூலமும்:—

''(இ) 1987 ஏப்பிறில் 1 ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்கும் ஏதேனும் வரி மதிப்பீட்டாண்டில் நாற்பத்தையாயிரம் ரூபாவுக்கு,''

5. முதன்மைச் சட்டவாக்கத்தின் 10 ஆம் பிரிவு, அப்பிரிவின் (உ) என்னும் பந்தியை நீக்கிவிட்டு, அதற்குப் பதிலாகப் பின்வரும் பந்தியை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது:—

''(உ) இலங்கை மத்திய வங்கியின் அங்கீகாரத்துடன் வர்த்தக வங்கி எதிலும், எவரேனும் ஆளினால் அல்லது அவர் சார்பில் திறக்கப்பட்ட ஏதேனும் கணக்கில் வெளிநாட்டு நாணயத்தில் அவரின் வரவிலுள்ள பணங்கள்மீது, அவருக்குச் சேர்ந்த வட்டியும்;''

6. முதன்மைச் சட்டவாக்கத்தின் 14 ஆம் பிரிவு அதன் (அ) என்னும் பந்தியில் இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:—

(1) (1) ஆம், (11) ஆம் உட்பந்திகளை, நீக்கிவிட்டு, அவற்றிற்குப் பதிலாகப் பின்வருவனவற்றை இடுவதன்மூலமும்:—

''(1) எவரேனும் தனியாளினால் நிருமாணிக்கப்பட்டதும், வதிவு நோக்கங்களுக்காக மாத்திரம் பயன்படுத்தப்படுவதுமான ஏதேனும் வீடு, முதன் முதலாக அத்தகைய தனியாளினால் விற்கப்படின் அத்தகைய விற்பனைமீதும் அல்லது முதன் முதலாக அரசினால் அவ்வீடு கொள்ளப்படுவதன்மீதும்;

(11) எவரேனும் தனியாள், (1) ஆம் உட்பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்ட வீடொன்று தவிர்ந்த வீடு எதனையும், 1978 ஏப்பிறில் 1 ஆம் தேதியன்று அல்லது அதற்குப் பின்னர் விற்றில்லாவிடில், அல்லது அரசினால் அத்தகைய வீடு எதுவும் அவரிடமிருந்து கொள்ளப்பட்டில்லாவிடில், அத்தகைய தனியாள் எவரினாலும் சொந்தமாக வைத்திருக்கப்படுவதும், வதிவு நோக்கங்களுக்காக மாத்திரம் பயன்படுத்தப்படுவதுமான ஏதேனும் வீடு அத்தகைய தனியாளினால் விற்பனை செய்யப்படுவதன்மீது அல்லது அரசினால் கொள்ளப்படுவதன்மீதும்,'';

(2) அதன் (IV) ஆம் உட்பந்தியை நீக்குவதன்மூலமும் அதற்குப் பதிலாகப் பின்வரும் உட்பந்தியை இடுவதன்மூலமும்:—

"(IV) (அ) எவரேனும் ஆளினுல் கொண்டு நடாத்தப்பட்ட அல்லது அவரால் பிரயோகிக்கப்பட்ட ஏதேனும் வியாபாரத்திலிருந்து, தொழிலிலிருந்து, உயர் தொழிலிலிருந்து, வாழ்க்கைத் தொழிலிலிருந்து அல்லது ஊழியத்திலிருந்து வருமானத்தை உண்டாக்குவதில் அவரால் பயன்படுத்தப்பட்டதும் இச் சட்டத்தின் 23 ஆம் பிரிவின்கீழ் அல்லது 1963 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க உண்ணுட்டரசிறைச் சட்டத்தின் 10 ஆம் பிரிவின்கீழ் அல்லது வருமானவரிக் கட்டளைச் சட்டத்தின் 11 ஆம் பிரிவின்கீழ் பெறுமானத் தேய்வுக்காகக் கழிப்பனவு அனுமதிக்கப்படுவதுமான ஏதேனும் ஆதனத்தின் 1987 ஏப்பிறில் 1 ஆம் தேதிக்கு முன்னரான விற்பனை மீதும்;

(ஆ) எவரேனும் ஆளினுல் கொண்டு நடாத்தப்படும் அல்லது பிரயோகிக்கப்படும் ஏதேனும் வியாபாரத்திலிருந்து, தொழிலிலிருந்து, உயர்தொழிலிலிருந்து, வாழ்க்கைத் தொழிலிலிருந்து அல்லது ஊழியத்திலிருந்து வருமானத்தை உண்டாக்குவதில் அவரால் பயன்படுத்தப்பட்டதும், 23 ஆம் பிரிவின்கீழ்ப் பெறுமானத் தேய்வுக்கான கழிப்பனவு அனுமதிக்கப்பட்டதுமான ஏதேனும் ஆதனத்தினை 1987 ஏப்பிறில் 1 ஆம் தேதியன்று அல்லது அதற்குப் பின்னர் விற்பனை செய்து பெறப்பட்ட முழு வரும்படிகளும் அவ் விற்பனையிலிருந்து ஓராண்டுக்குள், அவரால் கொண்டு நடாத்தப்படும் அல்லது புரியப்படும் ஏதேனும் வியாபாரத்திலிருந்து, தொழிலிலிருந்து, உயர் தொழிலிலிருந்து, வாழ்க்கைத் தொழிலிலிருந்து அல்லது ஊழியத்திலிருந்து, வருமானத்தை உண்டாக்குவதில் அவரால் பயன்படுத்தப்பட வேண்டிய ஏதேனும் ஆதனத்தை மாற்றீடு செய்வதற்குப் பயன்படுத்தப்படின், அத்தகைய விற்பனையின் மீதும்".

(3) அதன் (XIII) ஆம் உட்பந்தியில் "1979 நவம்பர் 15 ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர்" என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக "1979 நவம்பர் 15 ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர் ஆனுல் 1986 நவம்பர் 12 ஆம் தேதிக்கு முன்னர்" என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலமும்;

(4) (XIV) என்னும் உட்பந்தியின் முடிவில் பின்வரும் உட்பந்திகளைச் சேர்ப்பதன்மூலமும்;

"(XV) (அ) 1987 ஏப்பிறில் 1 ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர்; அத்துடன்

(ஆ) தனியாள் ஒருவரினல் ஒன்றில் தனித்து அல்லது வேறு ஆட்களுடன் பங்குடைமையாகக் கொண்டு நடாத்தப் பட்ட ஒரு தொழிலே, (XIV) ஆம் பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்ட கம்பனியொன்றில்லாத பொறுப்பு வரை யறுக்கப்பட்ட கம்பனியொன்ருக மாற்றியதன் மேல்,

அத்தகைய பொறுப்பு வரையறுக்கப்பட்ட கம்பனியின் பங்கு களுள் எண்பது சதவீதத்திற்குக் குறையாதவை,

(இ) அத்தகைய தொழில் தனித்த உரித்தாண்மையாகவிருக் கும் ஏதேனும் விடயத்தில், முன்னைய உரிமையாளர் களால் வைத்திருக்கப்படின் வைத்திருக்கப்பட்டால் மட் டுமே; அல்லது

(ஈ) அத்தகைய தொழில் ஒரு பங்குடைமையாகவிருக்கும் ஏதேனும் விடயத்தில் பங்குடைமையின் இலாபங்கள் என்ன விகிதாசாரத்தில் பங்கிடப்பட்டிருக்கக் கூடுமோ அதே விகிதாசாரத்தில் முன்னைய பங்காளர்களால் வைத் திருக்கப்பட்டால் மட்டுமே,

அத்தகைய தொழிலின் மூலதனச் சொத்துக்கள் அத்தகைய கம்பனிக்கு கைமாற்றப்படுவதன்மீதும்,

(XVI) ஆள் ஒருவரினல், ஏதேனும் ஆதனம் 1986 நவம்பர் 12 ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர், அது அத்தகைய ஆளினல் கொள்ளப்பட்டதன் பின்னர் இருபத்தைந்து ஆண்டுகளுக்குக் குறையாதவாறு விற்பனை செய்யப்படுவதன்மீதும்''.

7. முதன்மைச் சட்டவாக்கத்தின் 15 ஆம் பிரிவு, இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:—

(1) அப்பிரிவின் (இஇ) என்னும் பந்தியை உடனடுத்துப் பின்வரும் பந்தியை உட்புகுத்துவதன்மூலமும்:—

''(இஇஇ) ''இலங்கையில் வதிவுள்ள எவரேனும் தனியாளினல் அல்லது ஒரு பங்குடைமையினல்'' உயர் தொழிலொன்றை அல்லது வாழ்க்கைத் தொழிலொன்றைப் பிரயோகிக்கின்ற அல்லது கொண்டு நடாத்துகின்ற வேளையில் இலங்கைக்கு வெளியே யுள்ள எவரேனும் ஆளுக்காக அல்லது பங்குடைமைக்காக இலங்கையில் அவரால் அல்லது பங்குடைமையினல் அளிக் கப்பட்ட சேவைகள் தொடர்பில் வெளிநாட்டு நாணயத்தில் ஏதேனும் வரி மதிப்பீட்டாண்டில் உழைக்கப்பட்ட வேதன திகளும், கட்டணங்களும் (அத்தகைய வேதனதிகளும் கட் டணங்களும் வங்கியொன்றுக்கூடாக அவருக்கு அல்லது பங் குடைமைக்கு இலங்கைக்கு அனுப்பப்படின், அத்தகைய ஆளின் அல்லது பங்குடைமையின் கீழான ஊழிய நெறியின் போதல்ல);

(2) அப்பிரிவின் (ஔ), (ய) ஆகிய பந்திகளை நீக்குவதன் மூலமும்;

(3) அப்பிரிவின் (ந) என்னும் பந்தியில் ''ஆளொருவரால் பெறப்பட்ட ஏதேனும் பணத்தொகை,'' என்னும் சொற்களுக்குப் பதிலாக, ''ஆளொருவரால் பெறப்பட்ட ஏதேனும் பணத்தொகையும்'' என்னும் சொற்களை இடுவதன் மூலமும்;

(4) அப்பிரிவின் முடிவில் பின்வருவதனைச் சேர்ப்பதன்மூலமும்:—

''(ப) 1985 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்கத் தேசியப் பாதுகாப்பு நிதியச் சட்டத்தினல் தாபிக்கப்பட்ட தேசியப் பாதுகாப்பு நிதியத்திலிருந்து ஆளொருவரினல் பெறப்பட்ட ஏதேனும் பணத்தொகையும்,''

8. முதன்மைச் சட்டவாக்கத்தின் 20 ஆம் பிரிவு, அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் (ஆ) என்னும் பந்தியில் ''அக்கம்பனியானது வெளிநாட்டுச் செலாவணியில் கொடுப்பனவு செய்வதற்காக'' என்பதிலிருந்து ''கணக்கிடப்பட்ட ஐந்தாண்டுக் காலப்பகுதிக்கு'' என்பது வரையிலான எல்லாச் சொற்களையும் நீக்கிவிட்டு, அவற்றிற்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது:—

''அக்கம்பனியானது முதன் முதலாக இலாபம் ஈட்ட ஆரம்பித்த வரி மதிப்பீட்டாண்டிலிருந்து கணக்கிடப்பட்ட ஐந்தாண்டுக் காலப்பகுதிக்கு அந்த ஆண்டில் அதன் கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பில்;''

9. முதன்மைச் சட்டவாக்கத்தின் 20அ என்னும் பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவு இத்தால் உட்புகுத்தப்படுகின்றதென்பதுடன், இது 20ஆ என்னும் பிரிவாகப் பயனுறுதலும் வேண்டும்:—

20ஆ. எந்தப் பொருட்களின் அல்லது எந்த ஆளின் இலாபங்களுக்கும் வருமானத்திற்கும் 20 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் கீழ் அல்லது 20அ என்னும் பிரிவின் கீழ் வருமான வரியிலிருந்து விலக்களிக்கப்பட்டுள்ளதோ அந்த எவையேனும் பொருட்களை அந்த எவரேனும் ஏற்றுமதியாளருக்கு உற்பத்தி செய்து வழங்குவதிலிருந்து எழும் இலாபங்களையும் வருமானத்தையும் கொண்டிருப்பதான ஓர் ஆளின் அல்லது பங்குடைமையின் (மூலதனச் சொத்துக்களின் விற்பனையிலிருந்தான எவையேனும் இலாபங்களும் வருமானமும் அல்லாத) 3 ஆம் பிரிவின் (அ) என்னும் பந்தியின் கருத்தெல்லைக்குட்பட்ட இலாபங்களினதும் வருமானத்தினதும் அத்தகைய பாகமானது அத்தகைய வழங்கல் தொடர்புபட்ட ஏற்றுமதிகளின் வெளிநாட்டுச் செலாவணிப், பெறுமதியை இலங்கைக்கு அனுப்புவதற்கான சருவதேச நாணய மாற்றுக் கடிதத்திற்கு எதிராக, உத்தரவாதத்திற்கு உத்தரவாதம் என்ற அடிப்படையில் இலங்கையிலுள்ள வங்கியொன்றில் திறக்கப்பட்ட நாணயமாற்றக் கடிதமொன்றினல் அத்தகைய வழங்கல் மேவப்பட்டிருப்பின், வருமானவரியிலிருந்து விலக்களிக்கப்படுவதாதல் வேண்டும்''.

10. முதன்மைச் சட்டவாக்கத்தின் 23 ஆம் பிரிவு, இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:—

(1) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில்—

(அ) பந்தி (உ) வில் ''அத்தகைய ஆளினுல் கொள்ளப்பட்ட'' என்னும் சொற்களுக்குப் பதிலாக ''1987 ஏப்பிறில் 1 ஆம் தேதிக்கு முன்னர் அத்தகைய ஆளினுல் கொள்ளப்பட்ட'' என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன்மூலமும்;

(ஆ) பந்தி (உஉ) என்பதனை உடனடுத்துப் பின்வரும் பந்தியை உட்புகுத்துவதன்மூலமும்:—

''(உஉஉ) (I) உட்பந்தி (1) இல் குறிப்பீடு செய்யப்படும் பொறித்தொகுதி, எந்திரத்தொகுதி அல்லது பொருத்திகள் அல்லாதவையும், 1987, ஏப்பிறில் 1 ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர் அத்தகைய ஆளினுல் கொள்ளப்பட்டவையுமான ஏதேனும் பொறித்தொகுதி, எந்திரத்தொகுதி அல்லது பொருத்திகள், அவரால் கொண்டு நடாத்தப்பட்ட அல்லது புரியப்பட்ட ஏதேனும் வியாபாரத்தில், தொழிலில், உயர் தொழிலில் அல்லது வாழ்க்கைத் தொழிலில் அவரால் பயன்படுத்தப்பட்டதன் காரணமாக, சேதாரத்தினுலும் தேய்மானத்தினுலும் எழுகின்ற அத்தகைய மதிப்பிறக்கத்துக்காக, அவற்றின் கொள்ளலுக்கான விலையின்மீது ஆண்டொன்றுக்கு முப்பத்திமூன்றெடு மூன்றிலொரு சதவீதத்திலான விடுதொகையொன்று;

(II) 1987 ஏப்பிறில் 1 ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர் அத்தகைய ஆளினுல் கொள்ளப்பட்ட ஏதேனும் மோட்டார் வாகனம், லொறி, வசு, உழவு இயந்திரம், இழுவை வண்டி அல்லது அலுவலகத் தளபாடம், அவரால் கொண்டு நடாத்தப்பட்ட அல்லது புரியப்பட்ட ஏதேனும் வியாபாரத்தில், தொழிலில், உயர் தொழிலில் அல்லது வாழ்க்கைத் தொழிலில் அவரால் பயன்படுத்தப்பட்டதன் காரணமாக, சேதாரத்தினுலும் தேய்மானத்தினுலும் எழுகின்ற அத்தகைய மதிப்பிறக்கத்துக்காக, அவற்றின் கொள்ளலுக்கான விலையின்மீது ஆண்டொன்றுக்கு இருபத்தைந்து சதவீதத்திலான விடுதொகையொன்று;

(III) அதன் நிருமாணம் 1987 ஏப்பிறில் 1 ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர் முடிவடைந்ததான ஏதேனும் தகைமை பெற்ற கட்டிடம், அவரால் கொண்டு நடாத்தப்பட்ட அல்லது ஏதேனும் வியாபாரததில், தொழிலில், உயர் தொழிலில் அல்லது வாழ்க்கைத்தொழிலில் பயன்படுத்தப்பட்டதன் காரணமாகச் சேதாரத்தினு

லும் தேய்மானத்தினுலும் எழுகின்ற அத்தகைய மதிப் பிறக்கத்துக்காக, அதன் நிருமாணச் செலவின்மீது ஆண்டொன்றுக்குப் பத்துச் சதவீதத்திலான விடு தொகையொன்று,''.

(இ) பந்தி (ண) வை உடனடுத்துப் பின்வரும் பந்திகளை உட்புகுத்து வதன்மூலமும்:—

''(த) அத்தகைய ஆளினுல் வேறெவரேனும் ஆளுக்கு முதலாவ தாகக் குறிப்பிடப்பட்ட ஆளுக்கு ஏதேனும் வர்த்தக வளவு வாடகைக்கு அல்லது குத்தகைக்குக் கொடுக்கப் பட்டது தொடர்பில் 1986 ஏப்பிறில் 1 ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர் செய்யப்பட்ட குவியற் பணத் தொகைக் கொடுப்பனவின், குத்தகை வாடகை செலுத் தப்படற்பாலதாகவுள்ள ஆண்டிலுள்ள மாதங்களின் எண் ணிக்கை அக்குத்தகையில் அடங்கியுள்ள மாதங்களின், மொத்த எண்ணிக்கைக்கு என்ன விகிதாசாரத்தைக் கொண்டுள்ளதோ அதே விகிதாசாரத்தை மொத்தக் குவி யற் பணத்தொகைக்குக் கொண்டுள்ள அத்தகைய பாகம்,''

(ந) 1987 ஏப்பிறில் 1 ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்கும் ஏதேனும் வரி மதிப்பீட்டாண்டு தொடர்பில், ஒரு பகிரங்கக் கூட்டுத்தாபனத்தினுல் அல்லது அரசாங்கத்துக்குச் சொந்தமான தொழிற் பொறுப்பு முயற்சியினுல் சிறப்பு அற வீடொன்ருக அரசாங்கத்துக்குச் செலுத்தப்பட்ட ஏதேனும் பணத் தொகை.''.

(2) அப்பிரிவின் (3) ஆம் உட்பிரிவில்—

(அ) பந்தி (ஆ) வை உடனடுத்துப் பின்வரும் பந்திகளை உட்புகுத்து வதன்மூலமும்:—

''(ஆஆ) இவ்வுட்பிரிவின் முற்போந்த ஏற்பாடுகளில் உள்ள எது வும், எவரேனும் ஆளினுல் கொண்டு நடாத்தப்படும் அல்லது புரியப்படும் ஏதேனும் வியாபாரத்தின், தொழி லின், உயர்தொழிலின் அல்லது வாழ்க்கைத் தொழி லின் இலாபங்களையும் வருமானத்தையும் ஈட்டுவதில் அவரால் பயன்படுத்தப்படுவதான ஏதேனும் மூலதனச் சொத்து 1987 ஏப்பிறில் 1 ஆம் தேதிக்குப் பின்னர் அவரால் கையுதிர்க்கப்படுவது தொடர்பில் ஏற்புடைய தாதலாகாது;

(ஆஆஆ) (1) எவரேனும் ஆள், அவரால் கொண்டு நடாத்தப் படும் அல்லது பிரயோகிக்கப்படும் ஏதேனும் வியா பாரத்தின், தொழிலின், உயர் தொழிலின் அல்லது வாழ்க்கைத் தொழிலின் இலாபங்களையும் வருமான த்தையும் ஈட்டுவதில் அவரால் பயன்படுத்தப்பட்ட

ஏதேனும் மூலதனச் சொத்தை 1987 ஏப்பிறில் 1 ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர் கையுதிர்க்குமிடத்தும், அந்த மூலதனச் சொத்து தொடர்பில் (1) ஆம் உட்பிரிவின் கீழ் அத்தகைய மூலதனச் சொத்தின், கொள்ளலுக்கான செலவுக்குச் சமமான தேய்மானத்திற்கான விடுதொகையொன்று வழங்கப்பட்டுள்ளவிடத்தும், அத்தகைய மூலதனச் சொத்தின் கொள்ளலுக்கான செலவை விஞ்சாததாகவுள்ளவாறுன கையுதிர்த்தலினுலான வரும்படிகளின் அத்தகைய பாகம், அத்தகைய வியாபாரத்தின், தொழிலின், உயர்தொழிலின் அல்லது வாழ்க்கைத் தொழிலின் இலாபங்களேயும், வருமானத்தையும் 3 ஆ பிரிவின் (அ) என்னும் பந்தியின் கருத்தெல்லேக்குட்பட நிச்சயிப்பதில், அத்தகைய கையுதிர்த்தல், அத்தகைய வியாபாரம், தொழில்,உயர் தொழில் அல்லது வாழ்க்கைத்தொழில் தொடர்ந்து நடைபெறும் போது நிகழினுஞ்சரி அல்லது அது இல்லாதொழிந்ததன் பின்னர் நிகழினுஞ்சரி அத்தகைய வியாபாரத்தின், தொழிலின், உயர்தொழிலின் அல்லது வாழ்க்கைத்தொழிலின் வரவொன்ருகக் கருதப்படல் வேண்டும்.

(II) எவரேனும் ஆள், அவரால் கொண்டு நடாத்தப்படும் அல்லது பிரயோகிக்கப்படும் ஏதேனும் வியாபாரத்தின், தொழிலின், உயர்தொழிலின் அல்லது வாழ்க்கைத், தொழிலின் இலாபங்களேயும் வருமானத்தையும் ஈட்டுவதில் அவரால் பயன்படுத்தப்பட்ட ஏதேனும் மூலதனச் சொத்தை 1987 ஏப்பிறில் 1 ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர் கையுதிர்க்குமிடத்தும், அந்த மூலதனச் சொத்துத் தொடர்பில் தேய்மானத்திற்கான விடுதொகையொன்று வழங்கப்பட்டுள்ளவிடத்தும், ஆனல் அத்தகைய விடுதொகையின் மொத்தத் தொகை அத்தகைய மூலதனச் சொத்தின் கொள்ளலுக்கான செலவுக்குக் குறைவாகவுள்ளவிடத்தும், அத்தகைய மூலதனச் சொத்தின் கொள்ளலுக்கான செலவுக்கும் அத்தகைய மூலதனச் சொத்துத் தொடர்பில் வழங்கப்பட்ட தேய்மானத்துக்கான மொத்த விடுதொகைக்கும் இடையேயான வித்தியாசத்துக்கு மேலாக அத்தகைய மூலதனச் சொத்தின் கொள்ளலுக்கான செலவை விஞ்சாததாகவுள்ள கையுதிர்ப்பு வரும்படிகள், அத்தகைய கையுதிர்ப்பு அத்தகைய வியாபாரம், தொழில், உயர் தொழில் அல்லது வாழ்க்கைத் தொழில் தொடர்ந்து

நடைபெறும்போது நிகழினுஞ் சரி அல்லது அது இல்லா தொழிந்த பின்னர் நிகழினுஞ் சரி 3 ஆம் பிரிவின் (அ) என்னும் பந்தியின் கருத்துக்குட்பட்ட, அத்தகைய வியாபாரத்தின், தொழிலின், உயர்தொழிலின் அல்லது வாழ்க்கைத் தொழிலின் இலாபங்களேயும், வருமான த்தையும் நிச்சயிப்பதில், அத்தகைய வியாபாரத்தின், தொழிலின், உயர்தொழிலின் அல்லது வாழ்க்கைத், தொழிலின் வரவொன்ருகக் கருதப்படுதல் வேண்டும்:

ஆயின், இப்பந்தியில் உள்ள எதுவும் பின்வருவனவற்றிற்கு ஏற்புடையனவாதல் ஆகாது:—

(அ) தனியாள் ஒருவரினுல் ஒன்றில் தனித்தோ பங்குடைமை யிலோ கொண்டு நடாத்தப்பட்ட தொழிலொன்று, 14 (XV) ஆம் பிரிவில் குறிப்பீடு செய்யப்படும் கம் பெனியொன்ருக மாற்றப்படுவதன்மீது, அத்தகையமூல தனச் சொத்து எதனேயும் 1987 ஏப்பிறில் 1 ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர் அத்தகைய கம் பெனிக்குக் கைமாற்றுதல்; அல்லது

(ஆ) அத்தகைய ஏதேனும் மூலதனச் சொத்தைக் கையுதிர்ப் பதன்மூலம் எவரேனும் ஆளினுல் பெறப்படும் முழு வரும்படிகள், அவரால் கொண்டு நடாத்தப்படும் அல் லது புரியப்படும் ஏதேனும் வியாபாரத்தில், தொழி லில், உயர்தொழிலில், வாழ்க்கைத் தொழிலில் அல்லது ஊழியத்தில் வருமானத்தை உண்டாக்குவதற்கு அவ ரால் பயன்படுத்தப்பட வேண்டிய அத்தகைய மூல தனச் சொத்து எதனேயும் மாற்றீடு செய்வதற்கென, கையுதிர்க்கப்பட்ட ஓராண்டுக்குள் அத்தகைய ஆளி ஞல் பயன்படுத்தப்படின், அத்தகைய கையுதிர்ப்பு.''.

(ஆ) பந்தி (இ) யிலும், பந்தி (ஈ) யிலும் ''(அ) என்னும் பந்தியின்கீழ் அல்லது (ஆ) என்னும் பந்தியின் கீழ்'' என்னும் சொற்கள் இடம்பெறும் இடங்களிலெல்லாம் அச்சொற்களுக்குப் பதிலாக ''(அ) என்னும் பந்தியின்கிழ் அல்லது (ஆ) என்னும் பந்தியின்கீழ் அல்லது (ஆஆ) என்னும் பந்தியின் கீழ்'' என்னும் சொற்களே இடுவதன்மூலமும்;

(3) அப்பிரிவின் (7) ஆம் உட்பிரிவின் (உ) என்னும் பந்தியை உடனடுத்துப் பின்வரும் பந்தியை உட்புகுத்துவதன்மூலமும்:—

''(ஊ) இப்பிரிவின் நோக்கங்களுக்காக—

(I) ஓராம் உட்பிரிவின்கீழ் விடுதொகையொன்று அது தொட ர்பில் வழங்கப்பட்டிருக்கின்றதான ஏதேனும் மூலதனச் சொத்து எவரேனும் ஆளினுல் 1987 ஏப்பிறில் 1 ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர் விற்கப்பட்டு, விற்

பனையிலான வரும்படிகள், அத்தகைய ஆளினுல் கொண்டு நடாத்தப்படும் அல்லது புரியப்படும் ஏதேனும் வியாபாரத்தில், தொழிலில், உயர்தொழிலில் அல்லது வாழ்க்கைத் தொழிலில் பயன்படுத்தப்பட வேண்டிய அத்தகைய மூலதனச் சொத்தை மாற்றீடு செய்வதற்கென விற்பனையிலிருந்து ஓராண்டுக்குள் பயன்படுத்தப்படுகின்றவிடத்து, மாற்றீடு செய்யப்பட்ட மூலதனச் சொத்தின் கொள்ளப்பட்ட விலையானது மாற்றீடு செய்யப்பட்ட மூலதனச் சொத்தின் உண்மையான கொள்ளப்பட்ட விலைக்கும் அத்தகைய விற்பனையிலான வரும்படிகளுக்கும் இடையிலான விற்பனையிலான வரும்படிகளுக்கும் இடையிலான வித்தியாசமெனக் கருதப்படுதல் வேண்டும்;

(ii) எவரேனும் ஆளினுல் கொண்டு நடாத்தப்படும் அல்லது புரியப்படும் ஏதேனும் வியாபாரத்தில், தொழிலில், உயர் தொழிலில் அல்லது வாழ்க்கைத் தொழிலில் பயன்படுத்தப்படுவதற்கென ஏதேனும் பொறித்தொகுதி, எந்திரத் தொகுதி அல்லது பொறித்தொகுதிகள் கொள்வனையென்ற வகையாகவன்றி வேறு வகையில் அவரால் கொள்ளப்படுமிடத்து, அத்தகைய பொறித் தொகுதியின், எந்திரத் தொகுதியின் அல்லது பொருத்திகளின் கொள்ளப்பட்ட விலையானது, அத்தகைய கொள்ளல் தேதியன்று அத்தகைய பொறித்தொகுதிக்கு, எந்திரத் தொகுதிக்கு அல்லது பொருத்திகளுக்குள்ள சந்தைப் பெறுமதியாதல், வேண்டும்;

(iii) தனியாளொருவரினுல் ஒன்றில் தனித்தோ, ஏனையோருடன் பங்குடைமையிலோ கொண்டு நடாத்தப்படும் ஒரு தொழிலின் மூலதனச் சொத்துக்கள், *1987* ஏப்பிறில் *1* ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர், 14 (XV) என்னும் பிரிவிற் குறிப்பீடு செய்யப்பட்ட ஒரு கம்பனிக்கு கைமாற்றப்படுகின்றவிடத்து, அத்தகைய கம்பெனியினுல் அத்தகைய மூலதனச் சொத்து கொள்ளப்பட்டதற்கான விலையானது, அத்தகைய தனியாளினுல் அல்லது பங்குடைமையினுல் அத்தகைய மூலதனச் சொத்து கொள்ளப்பட்ட விலையிலிருந்து அத்தகைய தனியாளுக்கு அல்லது பங்குடைமைக்கு *(1)* ஆம் உட்பிரிவின்கீழ் வழங்கப்பட்ட மதிப்பிறக்கத்துக்கான ஏதேனும் விடுதொகையைக் கழித்துவரும் தொகையெனக் கருதப்படுதல் வேண்டும் என்பதுடன், அத்தகைய மூலதனச் சொத்தின் கொள்ளல் தேதியானது, அத்தகைய தனியாளினுல் அல்லது பங்குடைமையினுல் அத்தகைய மூலதனச்சொத்து கொள்ளப்பட்ட தேதியெனக் கருதப்படுதலும் வேண்டும்''.

11. முதன்மைச் சட்டவாக்கத்தின் 24 ஆம் பிரிவு, இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:—

''(1) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (ரு) என்னும் பந்தியில் ''1984 சனவரி 1 ஆம் தேதியன்று அல்லது அதற்குப் பின்னர்'' என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக ''1984 சனவரி 1 ஆம் தேதியன்று அல்லது அதற்குப் பின்னர் ஆனல் 1987 மார்ச் 31 ஆந் தேதியன்று அல்லது அதற்கு முன்னர்'' என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன்மூலமும்; அத்துடன்'';

(2) (ரு) என்னும் பந்தியை உடனடுத்துப் பின்வரும் பந்தியை உட்புகுத்துவதன் மூலமும்:—

''(ருரு) (அ) பந்தி (ஆ) வில் குறிப்பீடு செய்யப்பட்ட பொறித்தொகுதி எந்திரத் தொகுதி அல்லது பொருத்திகள் அல்லது சாதனம் அல்லாத ஏதேனும் பொறித்தொகுதி, எந்திரத்தொகுதி, பொருத்திகள் அல்லது சாதனம் தொடர்பில் ஏதேனும் ஆண்டில், 1987 ஏப்பிறில் 1 ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர் அவரால் செய்து கொள்ளப்பட்ட ஏதேனும் உடன்படிக்கையின்கீழ்ச் செலுத்தப்படற்பாலதான மொத்த வாடகையின் மூன்றிலொரு பங்குக்குச் சமமாகவுள்ள ஒரு தொகையை விஞ்சுவதாக அத்தகைய உடன்படிக்கையின்கீழ் அவரால் செலுத்தப்பட்ட வாடகையின் அத்தகைய பாகம்; அத்துடன்

(ஆ) மோட்டார் வாகனங்கள், லொறி, வசு, உழவு இயந்திரம், இழுவை வண்டி அல்லது அலுவலகத் தளபாடம் தொடர்பில் ஏதேனும் ஆண்டில், 1987 ஏப்பிறில் 1 ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர் அவரால் செய்து கொள்ளப்பட்ட ஏதேனும் உடன்படிக்கையின் கீழ்ச் செலுத்தப்படற்பாலதான மொத்த வாடகையின் நான்கிலொரு பங்குக்குச் சமமாகவுள்ள ஒரு தொகை விஞ்சுவதாக, அத்தகைய உடன்படிக்கையின் கீழ் அவரால் செலுத்தப்பட்ட வாடகையின் அத்தகைய பாகம்''.

12. முதன்மைச் சட்டவாக்கத்தின் 29 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:—

(1) அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியின் (11) ஆம் உட்பந்தியில் ''எந்தக் கம்பெனியில்'' என்னும் சொற்களிலிருந்து ''கழிப்பனவு எதுவும் செய்யப்படுதலாகாது''. என்பது வரையிலான சொற்களை நீக்கிவிட்டு அவற்றிற்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன்மூலமும்:—

''எந்தக் கம்பெனியில், 1985 நவம்பர் 15 ஆம் தேதியன்று அல்லது அதற்குப் பின்னர், மரணசாதனமூலமான வழியுரிமை அல்லது மரணசாதனமற்ற வழியுரிமை என்ற வகையிலல்லாத வேறு வகையில் சொத்தாண்மையில் மாற்றமொன்று ஏற்பட்டுள்ளதோ, அந்தக் கம்பெனியால் உறப்பட்ட நட்டமொன்று தொடர்பாக இப்பந்தியின்கீழ் அல்லது (3) (ஆ) என்னும் உட்பிரிவின்கீழ் அல்லது (4) (ஆ) என்னும்

உட்பிரிவின்கீழ் அல்லது (4) (இ) என்னும் உட்பிரிவின்கீழ், எந்தக் கம்பெனியில் நட்டம் உறப்பட்டதால் அந்தக் கம்பெனியினது அத்தகைய வியாபாரத்தின் அல்லது தொழிலின் நியதிச்சட்ட வருமானத்திற்கெதிராகத் தவிரக் கழிப்பனவு எதுவும் செய்யப்படுதலாகாது''.

(2) அப்பிரிவின் (6) ஆம் உட்பிரிவின் (அ) என்னும் பந்தியின் முடிவில் பின்வருவதனைச் சேர்ப்பதன் மூலமும்:—

(III) 1987 ஏப்பிறில் 1 ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர் ஏதேனும் வரி மதிப்பீட்டாண்டில், எவரேனும் ஆளின் வருமானம் ஒன்றுக்கு மேற்பட்ட மூலதன வருமான மிகையை உள்ளடக்குமிடத்து, அத்தகைய கழிப்பானது, 32 ஆம் பிரிவின் (3அ), (3ஆ) ஆகிய உட்பிரிவுகளில் குறித்துரைக்கப்பட்ட ஆகக் குறைந்த வீதத்தில் (ஏற்புடைத்தாயின்) வரி விதிக்கற்பாலதான மூலதன வருமான மிகையிலிருந்தும், அதன் பின்னர் அடுத்து உயர்ந்த வீதத்தில் (ஏற்புடைத்தாயின்) வரி விதிக்கற்பாலதான மூலதன வருமான மிகையிலிருந்தும், இவ்வாறாகத் தொடர்ந்தும் செய்யப்படுதல் வேண்டும்.''.

13. முதன்மைச் சட்டவாக்கத்தின் 30 ஆம் பிரிவு, அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் முடிவில் பின்வரும் காப்பு வாசகத்தைச் சேர்ப்பதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது:—

''ஆயின், மேலும் உதவுதொகைகள் ஊழியர்களினால் மட்டுமே செலுத்தப்படுவனவான ஏதேனும் சிக்கன, சேமிப்பு அல்லது கட்டிடச் சங்கத்தின் அல்லது சேமநல நிதியத்தின், 1987 ஏப்பிறில் 1 ஆம் தேதியன்று அவ்வரி அதன் பின்னர் தொடங்கும் ஏதேனும் வரி மதிப்பீட்டாண்டிற்கான வரி விதிக்கற்பாலதான வருமானமானது, இருபத்தேழாயிரம் ரூபாவிலான விடுதொகையொன்றைக் கழித்த பின்னர் அவ்வரிமதிப்பீட்டாண்டிற்கான அச்சங்கத்தின் அல்லது நிதியத்தின் வரி மதிப்பிடற்குரிய வருமானமாகவிருத்தல் வேண்டும்.''.

14. முதன்மைச் சட்டவாக்கத்தின் 31 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:—

(1) அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவில்—

(அ) பந்தி (ஏஏ) என்பதை உடனடுத்துப் பின்வரும் பந்தியை உட்புகுத்துவதன் மூலமும்:—

''(ஏஏஏ) 1987 ஏப்பிறில் 1 ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்கும் ஏதேனும் வரி மதிப்பீட்டாண்டில், அத்தகைய நோக்கத்துக்கு ஆணையாளர் தலைமையதிபதியினால் அங்கீகரிக்கப்பட்டதான, சுயதொழில் பார்க்கும் ஆட்களுக்கான சகாய நிதியமொன்றுக்கு உதவுதொகையாகத் தனியாள் ஒருவரினால் செலுத்தப்பட்ட ஏதேனும் பணத்தொகை,'';

(ஆ) பந்தி (ச) என்பதை உடனடுத்துப் பின்வரும் பந்தியை உட்புகுத்துவதன் மூலமும்:—

''(ஞ) 1987 ஏப்பிறில் 1 ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்கும் ஏதேனும் வரி மதிப்பீட்டாண்டில், ஓர் ஆசுப்பத்திரியில் அல்லது சிகிச்சை நிலையத்தில் அவர் தொடர்பில், அவரது வாழ்க்கைத் துணை, பிள்ளை அல்லது பெற்றோர் தொடர்பில் உள்ளக சிகிச்சைக்கான மருத்துவச் செலவுகளாகத் தனியாளொருவரினால் செலவழிக்கப்பட்ட ஏதேனும் பணத்தொகை.''.

(2) அப்பிரிவின் (7) ஆம் உட்பிரிவில், அவ்வுட்பிரிவுக்கான காப்பு வாசகத்தை நீக்குவதன் மூலமும், அதற்குப் பதிலாகப் பின்வரும் காப்பு வாசகத்தை இடுவதன்மூலமும்:—

''ஆயின், அவரின் வரி மதிப்பிடற்குரிய வருமானத்திலிருந்து அத்தகைய விடுதொகை கழிக்கப்பட்டவரான எவரேனும் ஆள் தொடர்பாக, அத்தகைய ஆள்—

(அ) அத்தகைய பங்குகளை விற்று; அல்லது

(ஆ) அவரது கட்டுப்பாட்டுக்கு அப்பாற்பட்ட சந்தர்ப்பங்களில் அத்தகைய பங்குகள் தொடர்பில் பணத்தொகை எதனையும் மீளப்பெற்று, தேறிப்பெற்று அல்லது கிடைக்கப்பெற்று,

அத்தகைய விற்பனையின் வரும்படிகளை அல்லது மீளப் பெற்ற, தேறிப்பெற்ற அல்லது கிடைக்கப்பெற்ற பணத்தொகையை—

(1) அத்தகைய விற்பனை மீளப்பெறல், தேறிப்பெறல் அல்லது கிடைக்கப்பெறல் 1986 நவம்பர் 12 ஆம் தேதிக்கு முன்னதாகவிருக்கும் ஏதேனும் விடயத்தில், விற்பனைத் தேதியிலிருந்து, மீளப் பெற்ற தேறிப்பெற்ற அல்லது கிடைக்கப்பெற்ற தேதியிலிருந்து மூன்று மாதங்களுக்குள்,

(11) அத்தகைய விற்பனை, மீளப்பெறல், தேறிப்பெறல் அல்லது கிடைக்கப்பெறல் 1986 நவம்பர் 12 ஆம் தேதியன்று அல்லது அத்தேதிக்குப் பின்னரானதாகவிருக்கும் ஏதேனும் விடயத்தில் விற்பனைத் தேதியிலிருந்து, மீளப் பெற்ற, தேறிப்பெற்ற அல்லது கிடைக்கப்பெற்ற தேதியிலிருந்து ஓராண்டுக்குள்,

அங்கீகரிக்கப்பட்ட பொறுப்பு முயற்சி எதிலும், (ஏலவேயுள்ள பங்குகள் அல்லாத) சாதாரண பங்குகளைக் கொள்வனவு செய்வதற்குப் பயன்படுத்தியிருந்தால், மேலதிக மதிப்பீடு எதுவும் செய்யப்படுதல் ஆகாது''

(3) அப்பிரிவின் (7அ) என்னும் உட்பிரிவை நீக்குவதன்மூலமும் அதற்குப் பதிலாகப் பின்வரும் புதிய உட்பிரிவை இடுவதன்மூலமும்:—

''(7அ) ஏதேனும் கம்பனியின் எவையேனும் பங்குகளைக் கொள்வனவு செய்தமை தொடர்பில் (1) ஆம் உட்பிரிவின்கீழ் அவரது வரி மதிப்பிடற்குரிய வருமானத்திலிருந்து கழிப்பனவுக்கு உரித்துடையவராகவுள்ள எவரேனும் ஆள், அத்தகைய பங்குகளை விற்பனை செய்து அல்லது அவரது கட்டுப்பாட்டுக்கப்பாற்பட்ட சந்தர்ப்பங்களில் அத்தகைய பங்குகள் தொடர்பில் பணத்தொகை எதனையும் மீளப் பெற்று, தேறிப்பெற்று அல்லது கிடைக்கப்பெற்று, அத்தகைய விற்பனையின் வரும்படிகளை அல்லது மீளப் பெற்ற, தேறிப்பெற்ற அல்லது கிடைக்கப் பெற்ற பணத்தொகையை—

(அ) அத்தகைய விற்பனை, மீளப்பெறல், தேறிப்பெறல் அல்லது கிடைக்கப்பெறல் 1986 நவம்பர் 12 ஆம் தேதிக்கு முன்னரானதாக இருக்கும் ஏதேனும் விடயத்தில் அத்தகைய விற்பனைத் தேதியிலிருந்து, மீளப்பெற்ற, தேறிப்பெற்ற, அல்லது கிடைக்கப்பெற்ற தேதியிலிருந்து மூன்று மாதங்களுக்குள், அல்லது

(ஆ) அத்தகைய விற்பனை, மீளப்பெறல், தேறிப்பெறல் அல்லது கிடைக்கப்பெறல் 1986 நவம்பர் 12 ஆம் தேதிக்குப் பின்னரானதாகவிருக்கும் ஏதேனும் விடயத்தில் அத்தகைய விற்பனைத் தேதியிலிருந்து, மீளப்பெற்ற, தேறிப்பெற்ற அல்லது கிடைக்கப்பெற்ற தேதியிலிருந்து ஓராண்டுக்குள்,

அந்த உட்பிரிவின்கீழ் எந்தச் சாதாரண பங்குகள் தொடர்பில் அவர் தமது வரி மதிப்பிடற்குரிய வருமானத்திலிருந்து செய்யப்படும் கழிப்பனவொன்றிற்கு உரித்துடையவராகவுள்ளாரோ அந்த வேறு சாதாரணப் பங்குகளைக் கொள்வனவு செய்துள்ளவிடத்து இரண்டாவதாகக் குறிப்பிடப்பட்ட பங்குகளைக் கொள்வனவு செய்ததன் விளைவாக வருமானவரியிலிருந்தான எந்தக் கழிப்பனவுக்கு அவர் உரித்துடையவராகவுள்ளாரோ அந்தக் கழிப்பனவானது, முதலாவதாகக் குறிப்பிடப்பட்ட பங்குகளைக் கொள்வனவு செய்ததன் விளைவாக வருமானவரியிலிருந்தான எந்தக் கழிப்பனவுக்கு அவர் உரித்துடையவராகவிருந்தாரோ அந்தக் கழிப்பனவுத் தொகையினால் குறைக்கப்படுதல் வேண்டும்''.

15. முதன்மைச் சட்டவாக்கத்தின் 32 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:—

''(1) அப்பிரிவின் (3) ஆம் உட்பிரிவில் ''ஆள் ஒருவரின் வரி விதிக்கற்பாலதான வருமானம், ஏதேனும் மூலதன வருமான மிகையை உள்ளடக்கியிருந்து'' என்னும் சொற்களுக்குப் பதிலாக, ''ஆளொருவரின் வரி விதிக்கற்பாலதான வருமானம் ஏதேனும் ஆதனத்தின் சொத்தாண்மை மாற்றத்திலிருந்து 1986 நவம்பர் 12 ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர் எழும் மூலதன வருமான மிகையொன்றாகவிராத ஏதேனும் மூலதன வருமான மிகையை உள்ளடக்கியிருந்து'' என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன்மூலமும்;''

(2) அப்பிரிவின் (3) ஆம் உட்பிரிவை உடனடுத்துப் பின்வரும் உட்பிரிவு களை உட்புகுத்துவதன்மூலமும்:—

''(3அ) ஆளொருவரின் வரி விதிக்கற்பாலதான வருமானமானது அத்தகைய ஆளினால் ஏதேனும் ஆதனம் கொள்ளப்பட்ட பின்னர் இரண்டு ஆண்டுகளுக்கு மேற்பட்டு அல்லது ஐந்து ஆண்டுகளுக்குக் குறைவாக அத்தகைய ஆதனத்தின் சொத்தாண்மை மாற்றப்பட்டதி லிருந்து, 1986 நவம்பர் 12 ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர் எழுவதான மூலதன வருமானமிகை எதனையும் உள்ளடக்கியிருக்கு மிடத்தும், அத்துடன் அத்தகைய வருமானத்தின் அத்தகைய பாகத் தின்மீது (இதனகத்துப் பின்னர் இவ்வுட்பிரிவில் ''வருமானத்தின் இயைபான பாகம்'' எனக் குறிப்பீடு செய்யப்படும்) செலுத்தற் படற்பாலதான வருமானவரி வீதம் இருபத்தைந்து சதவீதத்தை விஞ்சுகின்றவிடத்தும், வருமானத்தின் இயைபான பாகம் தொடர் பாக வரியானது பின்வருமாறு கணிக்கப்படுதல் வேண்டும்:—

(அ) வருமானத்தின் இயைபான பாகம் அத்தகைய மூலதன வருமான மிகை தொகையை விஞ்சினால்—

(1) வருமானத்தின் இயைபான பாகத்தின் அத்தகைய மூலதன வருமான மிகைத் தொகைக்குச் சமமாகவுள்ளவாறான அத்தகைய பாகம் மீது செலுத்தப்படற்பாலதான வரி யானது, இருபத்தைந்து வீதமாக இருத்தல் வேண்டும்; அத்துடன்

(11) வருமானத்தின் இயைபான பாகத்தின் மீதியின் மேல் செலுத்தப்படற்பாலதான வரியானது, இச்சட்டத்தின்கீழ் அதற்கு ஏற்புடையதாகின்றவாறு, இருபத்தைந்து வீதத் துக்கு மேற்பட்ட அத்தகைய வீதங்களுக்கிணங்கக் கணிக் கப்படும்; அத்துடன்

(ஆ) வருமானத்தின் இயைபான பாகமானது தேறிய மூலதன வரு மானமிகைத் தொகையை விஞ்சாதுவிட்டால், வருமானத்தின் இயைபான பாகத்தின் முழுத் தொகை மீதும் செலுத்தற்படற் பாலதான வரியானது, இச்சட்டத்தில் முரணாக எது எவ்வா றிருப்பினும் இருபத்தைந்து வீதமாகவிருத்தல் வேண்டும்.

(3ஆ) ஆளொருவரின் வரி விதிக்கப்பாலதான வருமானமானது, இதற்கான 1 ஆம் நிரையிற் குறிப்பீடு செய்யப்பட்டவாறான அந்த ஆளினால் அந்த ஆதனம் கொள்ளப்பட்ட பின்னரான அத்தகைய காலப்பகுதிக்குள் ஏதேனும் சொத்தாண்மை மாற்றப்பட்டதிலிருந்து 1986 நவம்பர் 12 ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர் எழுந்துள்ள மூலதன வருமான மிகை எதனையும் உள்ளடக்கியிருக்கு மிடத்து, (3அ) என்னும் உட்பிரிவின் ஏற்பாடுகள், அந்த உட்பிரிவில் உள்ள ''இருபத்தைந்து வீதம்'' என்பதற்கான குறிப்பீடுகளுக்குப் பதிலாக இதற்கான 11 ஆம் நிரையிலுள்ள நேரொத்த பதிவில் குறித்துரைக்கப்பட்ட குறிப்பீடுகள் இடப்பட்டுள்ளனவென்றாற் போன்று அத்தகைய மூலதன வருமான மிகை மீதான வருமானக் கணிப்புக்கு ஏற்புடையனவாதல் வேண்டும்.

| | நிரை 1 | நிரை 11 |
|---|---|---|
| | ஐந்தாண்டுகளுக்கு மேற்பட்ட ஆனல் 15 ஆண்டுகளுக் குக் குறைவாக | $17\frac{1}{2}$ வீதம் |
| | பதினைந்து ஆண்டுகளுக்கு மேற்பட்ட, ஆனல் இருபது ஆண்டுகளுக்குக் குறையாத | $12\frac{1}{2}$ வீதம் |
| | இருபது ஆண்டுகளுக்கு மேற்பட்ட ஆனல் இருபத் தைந்து ஆண்டுகளுக்குக் குறைவாக | 5 வீதம்'' |

(3) அப்பிரிவின் (4) ஆம் உட்பிரிவில், ''நிதியத்தினைக் கொண்டு நடாத்து வதாக அல்லது செயற்படுத்துவதாக'' என்னும் சொற்களுக்குப் பதிலாக'' நிதியத்தினை 1987 ஏப்பிறில் 1 ஆம் தேதிக்கு முன்னரான ஏதேனும் வரி மதிப்பீட்டாண்டில் கொண்டு நடாத்துவதாக அல்லது செயற்படுத்துவதாகவிருந்து'' என்னும் சொற்களையும், எண்களையும் இடுவதன் மூலமும்;

(4) அப்பிரிவின் (4) ஆம் உட்பிரிவை உடனடுத்துப் பின்வரும் உட்பிரிவு களை உட்புகுத்துவதன் மூலமும்:—

''(5) 1987 ஏப்பிறில் 1 ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்கும் ஒவ்வொரு வரி மதிப்பீட்டாண்டிற்கும், ஒவ் வொரு சகாய அல்லது ஒய்வூதிய நிதியத்தினதும் முதலீட்டு வருமானத்தின்மீது, அரசாங்கம் பிணைப் பொறுப்புக்களில் அல்லாது, அங்கீகரிக்கப்பட்ட சகாய அல்லது ஒய்வூதிய நிதி யத்தினல் செய்யப்பட்ட முதலீடுகளிலிருந்து, அவ் வரி மதிப் பீட்டாண்டிற்கு, அதனல் பெறப்படும் வருமானத்தின் இருபது சதவீதம் என்ற வீதப்படி வரி விதிக்கப்படுதல் வேண்டும்.

(6) 1987 ஏப்பிறில் 1 ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்கு வதான ஒவ்வொரு வரி மதிப்பீட்டாண்டிற்கும், உறுப்பினர் களால் உதவு தொகைகள் செலுத்தப்படுவதான ஒவ்வொரு சிக்கன, சேமிப்பு அல்லது கட்டிட சங்கத்தினதும் அல்லது சேமநல நிதியத்தினதும் முதலீட்டு வருமானத்தின்மீது, இரு பத்தேழாயிரம் ரூபாவை விஞ்சுவதாக அச்சங்கத்தினல் செய் யப்படும் முதலீடுகளிலிருந்து அந்த வரி மதிப்பீட்டாண்டிற்கு அதனல் பெறப்படும் வருமானத்தின் அத்தகைய பாகத்தின் பத்துச் சதவீதம் என்ற வீதப்படியான வருமானவரி விதிக்கப் படுதல் வேண்டும்.''.

16. முதன்மைச் சட்டவாக்கத்தின் 32அ என்னும் பிரிவு, அப்பிரிவின் (3) ஆம் உட்பிரிவில் உள்ள ''பகிரங்கக் கூட்டுத்தாபனம்'' என்பதற்கான வரைவிலக்கணத்தை நீக்குவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

17. முதன்மைச் சட்டவாக்கத்தின் 33 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:—

(1) (அ) அப்பிரிவின் (1ஆ) என்னும் உட்பிரிவின் (அ) என்னும் பந்தியில் ''1979 ஏப்பிறில் 1 ஆம் தேதியன்று அல்லது அதற்குப் பின்னர்'' என்ற சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக ''1979 ஏப்பிறில் 1 ஆம் தேதியன்று அல்லது அதற்குப் பின்னர் ஆனால் 1986 நவம்பர் 12 ஆம் தேதிக்கு முன்னர் என்ற சொற்களையும் எண்களை யும் இடுவதன்மூலமும்; அத்துடன்

(ஆ) அப்பிரிவின் (1ஆ) என்னும் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியில் ''1979 ஏப்பிறில் 1 ஆம் தேதியன்று அல்லது அதற்குப் பின்னர்'' என்ற சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக'' 1979 ஏப்பிறில் 1 ஆம் தேதியன்று அல்லது அதற்குப் பின்னர் ஆனால் 1986 நவம்பர் 12 ஆம் தேதிக்கு முன்னர் என்ற சொற்களையும் எண்களை யும் இடுவதன் மூலமும்;

(2) அப்பிரிவின் (1ஆ) என்னும் உட்பிரிவை உடனடுத்துப் பின்வரும் உட்பிரிவை உட்புகுத்துவதன் மூலமும்:—

''(1இ) 1986 நவம்பர் 12 ஆம் தேதியன்று தொடங்குகின்ற காலப் பகுதிக்குக் கம்பெனியொன்றின் வரி மதிப்பிடற்குரிய வருமானம் ஏதேனும் மூலதன வருமான மிகையை உள்ளடக்குமிடத்து, 32 ஆம் பிரிவின் (3அ), (3ஆ) ஆகிய உட்பந்திகளின் ஏற்பாடுகளை அம்மூலதன வருமான மிகையின் வரி விதிப்புக்கு ஏற்ற மாற்றங் களுடன் ஏற்புடையனவாதல் வேண்டும்''.

(3) அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் (அ) என்னும் பந்தியை உடனடுத்துப் பின்வரும் பந்தியை உட்புகுத்துவதன் மூலமும்:—

''(அஅ) வரி மதிப்பீட்டாண்டு ஒன்று தொடர்பில், ''விலைகோரிப் பெறப்பட்ட பங்குடை பகிரங்கக் கம்பெனி'' என்பது, இலங்கை யில் வதிவுள்ளதும், அத்துடன் எந்தக் கம்பெனியின் பங்குகள் வரி மதிப்பீட்டாண்டு முழுவதும் அல்லது கம்பெனி கூட்டிணைக்கப் பட்ட தேதியிலிருந்து அந்த வரி மதிப்பீட்டாண்டு முடிவு வரை யிலும் விலைகோரிப் பெறப்படக்கூடுமோ அந்தக் கம்பெனியொன் றென வரி மதிப்பீட்டாளர் திருப்திப்படுகின்றதுமான ஒரு கம் பெனியெனப் பொருளாகும்''.

18. முதன்மைச் சட்டவாக்கத்தின் 42 ஆம் பிரிவு, அப்பிரிவின் (தத) என்னும் பந்தியை உடனடுத்துப் பின்வரும் பந்தியை உட்புகுத்துவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது:—

''(தததத) 1985 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்கத் தேசியப் பாதுகாப்பு நிதியச் சட்டத்தினல் தாபிக்கப்பட்ட தேசியப் பாதுகாப்பு நிதியம்,''.

19. முதன்மைச் சட்டவாக்கத்தின் 45 ஆம் பிரிவு, அப்பிரிவின் (ம) என்னும் பந்தியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பந்தியை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது:—

''(ம) பத்து (உ) என்னும் பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்டவாறான அத் தகைய ஏதேனும் கணக்கில் அவரது வரவில் இருக்கும் பணங்கள்.''.

20. முதன்மைச் சட்டவாக்கத்தின் 54 ஆம் பிரிவு, அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (உ) என்னும் பந்தியில் ''அரசாங்கத்துக்கு அல்லது 1978 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க சனுதிபதி நிதியச் சட்டத்தினல் தாபிக்கப்பட்ட சனுதிபதி நிதியத்திற்கு அல்லது ஏதேனும் உள்ளூரதிகார சபைக்கு'' என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக ''அரசாங்கத்துக்கு அல்லது 1978 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்கச் சனுதிபதி நிதியச் சட்டத்தினல் தாபிக்கப்பட்ட சனுதி பதி நிதியத்துக்கு அல்லது 1985 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்கத் தேசியப் பாது காப்பு நிதியச் சட்டத்தினல் தாபிக்கப்பட்ட தேசியப் பாதுகாப்பு நிதியத்திற்கு அல்லது ஏதேனும் உள்ளூரதிகார சபைக்கு'' என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

21. முதன்மைச் சட்டவாக்கத்தின் 81 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:—

(1) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில், ''இச்சட்டத்தின் ஆரும் அட்டவணை யில் குறித்துரைக்கப்பட்ட தோதான வீதத்தில்'' வருமான வரி கழிப் பதற்கு'' என்னும் சொற்களுக்குப் பதிலாக ''இச்சட்டத்தின் ஆரும் அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட தோதான வீதத்தில் அல்லது இலங்கை அரசாங்கத்திற்கும் அத்தகைய ஆள் அல்லது பங்குடைமை வதியும் ஏதேனும் ஆள்புலத்தின் அரசாங்கத்திற்கும் இடையில் இர ட்டை வரி விதிப்பு நிவாரணத்திற்கான உடன்படிக்கையொன்று வலு விலிருக்குமிடத்து, அத்தகைய உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட தோதான வீதத்தில் வருமான வரி கழிப்பதற்கு'' என்னும் சொற்களை இடுவதன்மூலமும்; அத்துடன்

(2) அவ்வுட்பிரிவுக்கான காப்பு வாசகத்தில் ''ஆரும் அட்டவணையில் குறித் துரைக்கப்பட்ட'' என்னும் சொற்களுக்குப் பதிலாக விடயத்திற்கேற்ப ''இச்சட்டத்திற்கான ஆருவது அட்டவணையில் அல்லது இரட்டை வரி மதிப்பு நிவாரணத்துக்கான உடன்படிக்கையில் குறித்துரைக்கப் பட்ட'' என்னும் சொற்களை இடுவதன் மூலமும்.

22. முதன்மைச் சட்டவாக்கத்தின் 85அ என்னும் பிரிவு இத்தால் பின் வருமாறு திருத்தப்படுகின்றது:—

(1) ''பெறுமதியின் எழுபத்தைந்து சதவீதமாக அல்லது'' என்னும் சொற் களுக்குப் பதிலாக ''பெறுமதியின், 1987 ஏப்பிறில் 1 ஆம்தேதிக்கு முன்னர் தொடங்கும் வரி மதிப்பீட்டாண்டின் விடயத்தில் எழுபத் தைந்து சதவீதமாக அல்லது 1987 ஏப்பிறில் 1 ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்கும் வரி மதிப்பீட்டாண்டின் விடயத் தில் ஐம்பது சதவீதமாக அல்லது'' என்னும் சொற்களை இடுவதன் மூலமும்;

(2) ''பின்னுறும் பத்தாண்டுக் காலப் பகுதியொன்றிற்கு'' என்னும் சொற்களுக்குப் பதிலாக ''பின்னுறுவதாக, 1987 ஏப்பிறில் 1 ஆம் தேதிக்கு முன்னர் தொடங்கும் வரி மதிப்பீட்டாண்டொன்றின் விடயத்தில் பத்தாண்டு காலப் பகுதியொன்றிற்கு அல்லது 1987 ஏப்பிறில் 1 ஆம் தேதியன்று அல்லது அதற்குப் பின்னர் தொடங்கும் வரி மதிப்பீட்டாண்டொன்றின் விடயத்தில் ஐந்தாண்டுக் காலப் பகுதியொன்றுக்கு'' என்னும் சொற்களை இடுவதன் மூலமும்;

(3) ''மேற்குறிப்பிடப்பட்ட. பத்தாண்டுகள் எதற்கும்,'' என்னும் சொற்களுக்குப் பதிலாக ''மேற்குறிப்பிடப்பட்ட பத்தாண்டுகள் அல்லது ஐந்து ஆண்டுகள் எதற்கும்'' என்னும் சொற்களை இடுவதன்மூலமும்.

23. முதன்மைச் சட்டவாக்கத்தின் 96 ஆம் பிரிவு. அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் ''ஐயாயிரம் ரூபாவுக்கு'' என்னும் சொற்களுக்குப் பதிலாக ''ஐம்பதினாயிரம் ரூபாவுக்கு'' என்னும் சொற்களை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

24. முதன்மை சட்டவாக்கத்தின் 99 ஆம் பிரிவு, அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவை நீக்கிவிட்டு, அதற்குப் பதிலாகப் பின்வரும் உட்பிரிவை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது:—

''(1) (அ) மாதம் ஒன்றுக்கு இரண்டாயிரத்து இருநூற்றைம்பது ரூபாவுக்கு அல்லது ஆண்டொன்றுக்கு இருபத்தேழாயிரம் ரூபாவுக்குக் கூடுதலான ஊதியத்தைப் பெறும் எவரேனும் தனியாளை, அல்லது

(ஆ) இலங்கையில் செய்த சேவைகளுக்காக மாதம் ஒன்றுக்கு எண்பத்தைந்து ரூபாவுக்கு அல்லது ஆண்டொன்றுக்கு ஆயிரம் ரூபாவுக்குக் கூடுதலான ஊதியத்தைப் பெறுகின்ற வதிவற்ற ஆளெவரையும்,

தொழிலுக்கமர்த்தியுள்ளவரும், 1963 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க உண்ணாட்டரசிறைச் சட்டத்தின் 107இ (1) என்னும் பிரிவின் கீழும், இச்சட்டத்தின் இப்பாகத்தின் கீழும் ஆணையாளர் தலைமையதிபதிக்கு அறிவித்தலளித்திருக்காத வருமான தொழில்தருநர் ஒவ்வொருவரும், (இவ்வத்தியாயத்தில் இதனகத்துப் பின்னர் ''குறித்துரைக்கப்பட்ட ஊழியர்'' எனக் குறிப்பீடு செய்யப்படும்) அத்தகைய ஆளைத் தொழிலுக்கமர்த்தியுள்ளாரென 1987 ஆம் ஆண்டு யூன் மாதம் 15 ஆம் தேதிக்குப் பிந்தாமல் ஆணையாளர் தலைமையதிபதிக்கு அறிவித்தல் கொடுத்தல் வேண்டும்.''.

25. முதன்மைச் சட்டவாக்கத்தின் 113அ என்னும் பிரிவு, அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் ''இப்பிரிவின் கீழ்க் கழிப்பனவு ஒன்றைச் செய்யும் நோக்கங்களுக்காக'' என்பதிலிருந்து ''அத்தகைய பாகம் என்று பொருளாகும்'' என்பது வரையிலான எல்லாச் சொற்களையும் நீக்கிவிட்டு அவற்றிற்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது:—

''இப்பிரிவின்கீழ் கழிப்பனவு ஒன்றைச் செய்யும் நோக்கங்களுக்காக வட்டி என்பது, ஏதேனும் வரி மதிப்பீட்டாண்டில் வருமான வரியிலிருந்து

விலக்களிக்கப்படாததான அல்லது 81 ஆம் பிரிவின் கீழ்க் கழிப்பனவு எதுவும் செய்யப்பட்டிராததான;—

(அ) வங்கி ஒன்றிலிருந்து அல்லது நிதி நிறுவனம் ஒன்றிலிருந்து, வருமானவரி விதிக்கப்படுதற்குரியவரான ஆளொருவரினுல் பெறப்பட்ட வட்டியின்; அத்துடன்

(ஆ) வங்கியினுல் அல்லது நிதி நிறுவனத்தினுல் வழங்கப்பட்ட அரசாங்கப் பிணைப் பொறுப்பு ஒன்றல்லாததான முறிகள் தொடர்பில் வட்டியாக அல்லது கழிவாக அத்தகைய ஆளினுல் பெறப்பட்ட பணத்தொகையின்,

அத்தகைய பாகம் என்று பொருளாகும்.''.

26. முதன்மைச் சட்டவாக்கத்தின் 117 ஆம் பிரிவு, அப்பிரிவின் முடிவில் பின்வரும் உட்பிரிவுகளைச் சேர்ப்பதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றன:—

''(12) இப்பிரிவின் கீழ், 1987 ஏப்பிறில் 1 ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர் செய்யப்படும் ஒவ்வொரு மேன்முறையீட்டு மனுவும் அத்தகைய மேன்முறையீட்டு மனு ஆணையாளர் தலைமையதிபதியினுல் பெற்றுக் கொள்ளப்பட்ட தேதியிலிருந்து ஈராண்டுகளுக்குள் அத்தகைய மேன்முறையீடு உடன்பட்டுக் கொள்ளப்படாதிருக்குமிடத்து அல்லது தீர்மானிக்கப்படாதிருக்குமிடத்து, அத்தகைய மேன்முறையீட்டின் உடன்பாடு அல்லது தீர்மானம் மேன்முறையீட்டாளர் அல்லது ஆணையாளர் தலைமையதிபதி அல்லது வரிமதிப்பீட்டாளர் ஒருவர் அல்லாத எவரேனும் ஆளினுல் ஆவணம் எதுவும் கொடுத்துதவப்படுவதை அல்லது ஏதேனும் நடவடிக்கை எடுக்கப்படுவதைப் பொறுத்ததாகவிருந்தாலேயொழிய, அத்தகைய சொல்லப்பட்ட காலப்பகுதிக்குள் உடன்பட்டுக் கொள்ளப்பட வேண்டும் அல்லது தீர்மானிக்கப்படல் வேண்டும். அத்தகைய காலப்பகுதிக்குள் அத்தகைய மேன்முறையீடு உடன்பட்டுக் கொள்ளப்படாதவிடத்து அல்லது தீர்மானிக்கப்படாதவிடத்து, அதற்கிணங்க மேன்முறையீடு அனுமதிக்கப்பட்டிருக்கின்றதெனவும் வரி விதிக்கப்பட்டுள்ளதெனவும் கருதப்படுதலும் வேண்டும். இப்பிரிவின்கீழ் பெறப்பட்ட ஒவ்வொரு மேன்முறையீடும் கிடைக்கப்பெற்றமை ஒப்புக் கொள்ளப்படுதல் வேண்டும் என்பதுடன், ஒப்புக்கோடல் கடிதத் தேதியானது, இப்பிரிவின் நோக்கங்களுக்காக, அத்தகைய மேன்முறையீடு கிடைக்கப்பெற்ற தேதியெனக் கருதப்படுதல் வேண்டும்.

(13) இவ்வத்தியாயத்தின் நோக்கங்களுக்காக, அமைச்சரினுல் நீதித் தீர்ப்பாளர்கள் குழாமொன்று நியமிக்கப்படுதல் வேண்டும். நீதித் தீர்ப்பாளர்கள் குழாத்து உறுப்பினர்கள் ஊதியமானது அமைச்சரினுல் தீர்மானிக்கப்படுதல் வேண்டும். ஆணையாளர் தலைமையதிபதியானவர், இவ்வத்தியாயத்தின் கீழ்த் தமக்கு உரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களுள் எதனையும், அத்தகைய அதிகாரவளிப்பில் அவர் குறித்துரைக்கக்கூடியவாறுகப் பிரயோகிப்பதற்கு அத்தகைய நீதித் தீர்ப்பாளர் எவருக்கும் அதிகாரமளிக்கலாம்.''.

27. முதன்மைச் சட்டவாக்கத்தின் 151 ஆம் பிரிவு, அதன் (1) ஆம் உட்பிரிவில், ''ஏழாயிரத்தைந்நூறு ரூபாவுக்கு மேற்படாத குற்றப்பணத்திற்கு'' என்னும் சொற்களுக்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது:—

''92 (1) ஆம் பிரிவுக்கு அல்லது 92 (2) ஆம் பிரிவின் கீழ் கொடுக்கப்பட்ட அறிவித்தலொன்றின் தேவைப்பாட்டிற்கு இணங்கியொழுகத் தவறுகின்ற விடயத்தில் ஐம்பதினாயிரம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றிற்கும், வேறேதேனும் விடயத்தில் ஏழாயிரத்தைந்நூறு ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றிற்கும்.''.

28. முதன்மைச் சட்டவாக்கத்தின் 163 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:—

(1) ''அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதி'' என்பதன் வரைவிலக்கணத்தின் (2) ஆம் பந்தியை நீக்கிவிட்டு, அதற்குப் பதிலாகப் பின்வரும் பந்தியை இடுவதன் மூலமும்:—

''(2) அதிகாரமளிப்பில் குறித்துரைக்கப்படுகின்றவாறான அத்தகைய வரி மதிப்பீட்டாண்டு தொடர்பிலான கருமங்கள் சம்பந்தமாக இச்சட்டத்தின் நோக்கங்களுக்காக ஆள் ஒருவரது சார்பில் செயலாற்றவென அவ்வாளினால் காலத்திற்குக் காலம் எழுத்தில் அதிகாரமளிக்கப்பட்டவராகவும்,

(1) கம்பனிகள் (கணக்காய்வாளர்) ஒழுங்கு விதிகளின் கீழ் கணக்காய்வாளர் ஒருவராகப் பதிவு செய்யப்பட்ட தனியாளொருவராகவிருந்து ஆணையாளர் தலைமையதிபதியினால் அங்கீகரிக்கப்பட்டவராகவும், அல்லது

(2) அதன் சார்பில் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகளின் கீழ் ஆணையாளர் தலைமையதிபதியினால் அங்கீகரிக்கப்பட்டவராகவும்,

இருக்கும் தனியாள் ஒருவர் என்று,'' அத்துடன்,

(2) ''ஆணையாளர் தலைமையதிபதி என்னும் சொல்லின் வரைவிலக்கணத்தை நீக்கிவிட்டு, அதற்குப் பதிலாகப் பின்வரும் புதிய வரைவிலக்கணத்தை இடுவதன் மூலமும்:—

''ஆணையாளர் தலைமையதிபதி'' என்பது இச்சட்டத்தின் கீழ் நியமிக்கப்படும் அல்லது நியமிக்கப்பட்டதாகக் கருதப்படும் உண்ணாட்டரசிறை ஆணையாளர் தலைமையதிபதி எனப் பொருளாவதுடன்—

(அ) இச்சட்டத்தின் ஏதேனும் ஏற்பாடு தொடர்பில், ஆணையாளர் தலைமையதிபதியின் சார்பில் ஒன்றில் பொதுவாக அல்லது குறித்துரைக்கப்பட்ட சில நோக்கங்களுக்காகச் செயலாற்றவென ஆணையாளர் தலைமையதிபதியினால் சிறப்பாக அதிகாரமளிக்கப்பட்டுள்ளவரான ஆணையாளர் ஒருவரையும் அல்லது பிரதி ஆணையாளர் ஒருவரையும் உள்ளடக்கும்;

(ஆ) XVIII ஆம் அத்தியாயம் தொடர்பில் அமைச்சரினுல் நியமிக்கப் பட்டவரும், அந்த அத்தியாயத்தின் கீழ் ஆணையாளர் தலைமை யதிபதியினுல் அதிகாரமளிக்கப்பட்டவருமான நீதித் தீர்ப்பாளர் ஒருவரையும் உள்ளடக்கும்.

(3) ''ஆதனம்'' என்பதற்கான வரைவிலக்கணத்தை உடனடுத்துப் பின் வரும் வரைவிலக்கணத்தை உட்புகுத்துவதன்மூலமும்:—

''பகிரங்கக் கூட்டுத்தாபனம்'' என்பது, 1982 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்கக் கம்பெனிச் சட்டம் தவிர்ந்த வேறு ஏதேனும் எழுத்தி லான சட்டத்தினுல் அல்லது சட்டத்தின் கீழ்த் தாபிக்கப்பட் டுள்ளதும் அல்லது தாபிக்கப்படுவதும், மானியக்கொடையென்ற வகையில், கடன் என்ற வகையில் அல்லது வேறு வகையில் அரசாங்கத்தினுல் முழுவதாகவோ பகுதியளவிலோ மூலதனத்தை ஏதேனும் கூட்டுத்தாபனம், சபை அல்லது வேறு குழு எனப் பொருளாகும்.''.

29. முதன்மைச் சட்டவாக்கத்திற்கான இரண்டாம் அட்டவணை அதன் முடிவில் பின்வரும் பகுதியைச் சேர்ப்பதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது:—

''பாகம் VIII

பகிரங்கக் கூட்டுத்தாபனம் 50 வீதம்.''

30. முதன்மைச் சட்டவாக்கத்திற்கான மூன்றும் அட்டவணை அதன் 10 ஆம் விடயத்தை நீக்குவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

31. இச்சட்டத்தின் 3 ஆம், 7 (4) ஆம், 18 ஆம் அத்துடன் 20 ஆம் பிரிவினுல் முதன்மைச் சட்டவாக்கத்திற்குச் செய்யப்பட்ட திருத்தங்கள், எல்லா நோக்கங்களுக்காகவும் 1985 மார்ச்சு 21 ஆம் தேதியன்று வலுவுக்கு வந்துவிட் டனவாகக் கருதப்படுதல் வேண்டும்.

# 1987 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க மொத்த விற்பனை வரவு வரி (திருத்தச்) சட்டம்

1981 ஆம் ஆண்டின் 69 ஆம் இலக்க, மொத்த விற்பனை வரவு வரிச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்

1. இச்சட்டம் 1987 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க, மொத்த விற்பனை வரவு வரி (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

2. (இதனகத்துப் பின்னர் ''முதன்மைச் சட்டவாக்கம்'' எனக் குறிப்பீடு செய்யப்படும்) 1981 ஆம் ஆண்டின் 69 ஆம் இலக்க, மொத்த விற்பனை வரவு வரிச் சட்டத்தின் 5 ஆம் பிரிவானது, அப்பிரிவின் முடிவில் பின்வரும் உட்பிரிவைச் சேர்ப்பதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது:—

''(4) காலாண்டொன்றுக்காக ஒரு தொழிலின் மொத்த விற்பனை வரவை நிச்சயிப்பதில், அவ்வாண்டின்போது அறவிடமுடியாக் கடனென்ருக வந்துள்ளதாய் அத்தொழிலினுல் உறப்பட்ட ஏதேனும் அறவிடமுடியாக் கடனுக்குச் சமமானதும், முன்னையவொரு காலாண்டுக்கு அத்தொழிலின் மொத்த விற்பனை வரவில் உள்ளடக்கப்பட்டுள்ளதும், எத்தொகை தொடர்பில் மொத்த விற்பனை வரவு வரி செலுத்தப்பட்டுள்ளதோ அத்தொகையாகவுள்ளதுமான ஒரு தொகை கழிக்கப்படுதல் வேண்டும்:

ஆயின், அறவிடமுடியாக் கடனென்று தொடர்பில் இவ்வுட்பிரிவின் கீழ் முன்னர் கழிக்கப்பட்ட ஒரு தொகையின் கணக்கால் அத்தொழிலினுல் ஏதேனும் காலாண்டில் பெறப்படும் ஏதேனும் பணத் தொகை, அப்பணத் தொகை எக்காலாண்டிற்கெனப் பெறப்படுகின்றதோ அக்காலாண்டிற்கு அத்தொழிலின் மொத்த விற்பனை வரவில் உள்ளடக்கப்படுதல் வேண்டும்''.

3. முதன்மைச் சட்டவாக்கத்தின் 6 ஆம் பிரிவானது இத்தால் நீக்கப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பிரிவு இடப்படுகின்றது:—

வெவ்வேறு தொழில்கள் ஒரு தொழிலாகக் கருதப்படுதல்.

6. மூன்ரும் பிரிவின் அல்லது 10 ஆம் பிரிவின் நோக்கங்களுக்காக ஒரு தொழிலின் மொத்த விற்பனை வரவைத் தீர்மானிக்கையில்—

(அ) ஆளொருவரினுல் ஒரே இடத்தில் அல்லது வெவ்வேறு இடங்களில் கொண்டு நடாத்தப்படுபவையும் ஒரே தன்மைத்தானவையுமான தொழில்கள் ஒரு தொழிலாகக் கருதப்படுதல் வேண்டும்; அத்துடன்

(ஆ) ஓர் இடத்தில் அதே ஆளினுல் கொண்டு நடாத்தப்படும் வெவ்வேறு தொழில்கள் ஒரு தொழிலாகக் கருதப்படுதல் வேண்டும்''.

4. முதன்மைச் சட்டவாக்கத்தின் 7 ஆம் பிரிவானது, அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் ''தொடர்பில் தீர்மானிக்கப்பட்டு'' என்ற சொற்களுக்குப் பதிலாக ''தொடர்பில் அமைச்சரினல் தீர்மானிக்கப்பட்டு'' என்ற சொற்களை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

5. முதன்மைச் சட்டவாக்கத்தின் 9 ஆம் பிரிவானது, அப்பிரிவின் முடிவில் பின்வரும் உட்பிரிவுகளைச் சேர்ப்பதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது:—

''(9) எவரேனும் ஆள், (2) ஆம் உட்பிரிவின் கீழ் வரிமதிப்பீட்டாளர் ஒருவரினல் அவருக்குக் கொடுக்கப்பட்ட அறிவித்தலொன்றின் தேவைப்பாடுகளுக்கு இணங்கியொழுகத் தவறுமிடத்து, ஆணையாளர் தலைமையதிபதி, எழுத்திலான அறிவித்தலொன்றின் மூலம்—

(அ) அத்தகைய ஆளின்மீது ஐம்பதாயிரம் ரூபாவை விஞ்சாத ஒரு தண்டத்தைச் சுமத்தலாம்; அத்துடன்

(ஆ) (1) அத்தகைய தண்டத்தைச் செலுத்துமாறும்; அத்துடன்

(2) வரிமதிப்பீட்டாளரினல் அவருக்குக் கொடுக்கப்பட்ட அறிவித்தலில் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள விவரத் திரட்டை ஆணையாளர் தலைமையதிபதியின் அறிவித்தலிற் குறித்துரைக்கப்படக்கூடிய வாறன அத்தகைய காலத்தினுட் கொடுத்துதவுமாறும்,

அத்தகைய ஆளைத் தேவைப்படுத்தலாம்.

(10) எவரேனுமாள் விவரத்திரட்டொன்றைக் கொடுத்துதவுவதற்குத் தவறியமை தமது கட்டுப்பாட்டுக்கு அப்பாற்பட்ட சூழ்நிலைகளின் காரணமானதென்றும், தண்டம் சுமத்தப்பட்ட பின்னர் தாம் அத்தகைய விவரத் திரட்டைக் கொடுத்துதவியுள்ளாரென்றும் ஆணையாளர் தலைமையதிபதியின் திருப்திக்கு அத்தகைய ஆள் எண்பிப்பாராயின், ஆணையாளர் தலைமையதிபதி இப்பிரிவின் கீழ் எவரேனுமாள்மீது சுமத்தப்பட்ட ஏதேனும் தண்டத்தைக் குறைக்கலாம் அல்லது விட்டுவிடலாம்.

(11) ஒன்பதாம் உட்பிரிவின் கீழ் எவரேனுமாள்மீது தண்டமொன்று சுமத்தப்படுமிடத்து, அவ்வறிவித்தல் தொடர்பாக 53 ஆம் பிரிவின் கீழான தவறென்றுக்கான குற்ற வழக்கொன்றுக்கு அவர் ஆளாதலாகாது''.

6. முதன்மைச் சட்டவாக்கத்தின் 12 ஆம் பிரிவானது, அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் உட்பிரிவை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது:—

''(1) இச்சட்டத்தில் எது எப்படியிருப்பினும், (8 ஆம் பிரிவின் கருத்துக்குட்பட விலக்கப்பட்ட ஒரு பொருளாகவிராததும்), இலங்கைக்கு வெளியே உற்பத்தி செய்யப்பட்டதுமான ஏதேனும் பொருளை இறக்குமதி செய்கின்ற ஒவ்வோர் ஆளிடமிருந்தும், அவரது மொத்த விற்பனை வரவு தொடர்பிலான மொத்த விற்பனை வரவு வரியானது ஏதேனும் காலாண்டிற்

கான அவரது மொத்த விற்பனை வரவு 3 ஆம் பிரிவிற் குறித்துரைக்கப்பட்ட தொகையிலும் பார்க்கக் குறைவானதாகவிருப்பினுஞ்சரி அல்லாவிடினுஞ் சரி, 7 ஆம் பிரிவின் கீழ் அமைச்சரினால் குறித்துரைக்கப்பட்ட வீதங்களில் விதிக்கப்படுதல் வேண்டுமென்பதுடன், பிரதான சுங்கச் சேகரிப்பாளரினால் சேகரிக்கப்படுதலும் வேண்டும். இப்பிரிவின் கீழ் சுமத்தப்படும் வரியானது, சுங்கக் கட்டளைச் சட்டத்தின் கீழ் விதிக்கப்படும் வேறேதேனும் வரியுடன், தீர்வையுடன் அல்லது விதிப்புடன் சேர்த்து மேலதிகமானதாகவிருத்தல் வேண்டும்''.

7. முதன்மைச் சட்டவாக்கத்தின் 13 ஆம் பிரிவானது, அதன் (1) ஆம் உட்பிரிவில், ''வரிமதிப்பீட்டாளரின் அபிப்பிராயப்படி'' என்பதிலிருந்து ''வரி செலுத்தத் தவறுமிடத்து'' என்பது வரையிலான எல்லாச் சொற்களையும் எண் களையும் நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது:—

''வரிமதிப்பீட்டாளரொருவரின் அபிப்பிராயப்படி, மொத்த விற்பனை வரவு வரி இறுக்கப்படற்பாலரான எவரேனுமாள் ஏதேனும் காலாண்டிற்காக 9 ஆம் பிரிவின் கீழ் விவரத் திரட்டொன்றினைக் கொடுத்துதவத் தவறு மிடத்தும் அக்காலாண்டிற்கான வரியைச் செலுத்தத் தவறுமிடத்தும்,''.

8. முதன்மைச் சட்டவாக்கத்தின் 17 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:—

(1) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் ''அத்தகைய வரி மதிப்பீட்டினால்'' என்பதிலிருந்து ''செலுத்துதல் வேண்டும்'' என்பது வரையிலான சொற்களுக்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன்மூலம்:—

''மொத்த விற்பனை வரவு வரியின் அல்லது அதன் ஏதேனும் பாகத்தின் கொடுப்பனவு அத்தகைய மேன்முறையீடு தீர்மானிக்கப் படும்வரை பிடித்துவைக்கப்படுதல் வேண்டுமென ஆணையாளர் தலைமை யதிபதி கட்டளையிட்டாலொழிய, அத்தகைய வரி மதிப்பீட்டினால் அல்லது மேலதிக வரி மதிப்பீட்டினால் இறுக்கப்பட்டதான மொத்த விற்பனை வரவு வரியினை இச்சட்டத்தினால் அவர்மீது விதிக்கப்பட்ட தான ஏதேனும் தண்டத்துடன் சேர்த்துச் செலுத்துதல் வேண்டும். அத்தகைய கட்டளையாக்கப்பட்டதன்மேல் பிடித்து வைக்கப்பட்ட, மொத்த விற்பனை வரவு வரியின் அல்லது அதன் பாகத்தின் தொகை தவணை தவறியதாகக் கருதப்படலாகாது:''; அத்துடன்

(2) அப்பிரிவின் முடிவில் பின்வரும் உட்பிரிவுகளைச் சேர்ப்பதன்மூலம்:—

''(12) மேன்முறையீடொன்றின் இறுதித் தீர்மானத்தின்மேல் அல்லது ஆணையாளர் தலைமையதிபதியினால் ஆக்கப்பட்ட கட்டளை யொன்றின்மேல், (1) ஆம் உட்பிரிவின் கீழ்ப் பிடித்து வைக்கப்பட்ட ஏதேனும் மொத்த விற்பனை வரவு வரி செலுத்தப்படற்பாலதாக வருமிடத்து, அல்லது மூல வரிமதிப்பீட்டினால் இறுக்கப்பட்ட மொத்த விற்பனை வரவு வரி அதிகரிக்கப்படுமிடத்து, ஆணையாளர் தலைமையதி பதி, எத்தேதியன்று அல்லது எத்தேதிக்கு முன்னர் அத்தகைய ஏதே

னும் மொத்த விற்பனை வரவு வரி அல்லது மொத்த விற்பனை வரவு வரியின் மீதி செலுத்தப்படவேண்டுமோ அத்தேதியை நிர்ணயித்து எழுத்திலான ஓர் அறிவித்தல் மேன்முறையீட்டாளருக்குக் கொடுத்தல் வேண்டும். அவ்வாறு செலுத்தப்படாத மொத்த விற்பனை வரவு வரி எதுவும் தவணை தவறியதாகக் கருதப்படுதல் வேண்டும்.

(13) வரிமதிப்பீட்டொன்றுக்கெதிராக மேன்முறையீடொன்று இருக்குமிடத்தும், வரிமதிப்பீட்டறிவித்தலில் குறித்துரைக்கப்பட்ட ஏதேனும் மொத்த விற்பனை வரவு வரிக் கொடுப்பனவு (1) ஆம் உட்பிரிவின் கீழ்ப் பிடித்து வைக்கப்படுமிடத்தும், ஆணையாளர் தலைமை யதிபதி, அவ்வரி மதிப்பீடு தொடர்பில் மொத்த விற்பனை வரவு வரி யாகக் குறித்தவொரு பணத்தொகை வருமதியாகவுள்ளது அல்லது வருமதியாகவிருக்கும் சாத்தியம் உண்டு என அம்மேன்முறையீடுபற்றிய விசாரணையின்போது அல்லது கேட்பின்போது மேன்முறையீட்டாளர் உடன்பட்டால், மேன்முறையீட்டாளருக்குக் கொடுக்கப்படும் எழுத்தி லான அறிவித்தல்மூலம், அவ்வறிவித்தலில் குறித்துரைக்கப்பட்டுள்ள தேதியன்று அல்லது அதற்கு முன்னர் அத்தகைய பணத்தொகையைச் செலுத்தும்படி அவரைப் பணிக்கலாம். அவ்வாறு செலுத்தப்படாத பணத்தொகை எதுவும் தவணை தவறியதாகக் கருதப்படுதல் வேண் டும்''.

9. முதன்மைச் சட்டவாக்கத்தின் 20 ஆம் பிரிவு, ''மொத்த விற்பனை வரவு வரி தொடர்பிலான'' என்பதிலிருந்து ''இறுதியானவையும் முடிவானவையு மாதல் வேண்டும்.'' என்பது வரையிலான எல்லாச் சொற்களுக்கும் பதிலாகப் பின்வருவனவற்றை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது:—

''மொத்த விற்பனை வரவு வரி தொடர்பான வரிமதிப்பீடொன்றுக் கெதிராக இச்சட்டத்தில் குறித்துரைக்கப்பட்ட காலத்தினுள் செல்லுபடி யான மேன்முறையீடு எதுவும் செய்யப்படாதவிடத்து அல்லது அத்தகைய வரித்தொகை 17 (5) ஆம் பிரிவின் கீழ் உடன்பட்டுக்கொள்ளப்பட்டுள்ள விடத்து, அல்லது மேன்முறையீட்டின்மீது தீர்மானிக்கப்பட்டுள்ளவிடத்து, விடயத்திற்கேற்ப, மேன்முறையீட்டின்மீது செய்யப்பட்டவாறான அல்லது உடன்பட்டுக் கொள்ளப்பட்டவாறான அல்லது குறைக்கப்பட்டவாறான அல் லது அதிகரிக்கப்பட்டவாறான அல்லது உறுதிப்படுத்தப்பட்டவாறான வரி மதிப்பீடு, இச்சட்டத்தின் எல்லா நோக்கங்களுக்காகவும் அத்தகைய வரித் தொகை தொடர்பாக இறுதியானதும் முடிவானதுமாதல் வேண்டும்''.

10. முதன்மைச் சட்டவாக்கத்தின் 29 ஆம் பிரிவை உடனடுத்துப் பின் வரும் புதிய பிரிவு இத்தால் உட்புகுத்தப்படுகின்றதென்பதுடன், இது அச் சட்டவாக்கத்தின் 29அ என்னும் பிரிவாகப் பயனுறுதலும் வேண்டும்:—

''குறித்த சில கொடுக்கல் வாங்கல்களும் கையுதிர்ப்பு களும் புறக் கணிக்கப்படுதல்

29அ. எவரேனுமாளினால் செலுத்தப்படற்பாலதான மொத்த விற்பனை வரவு வரித்தொகையைக் குறைக்கும், அல்லது குறைக்கும் பயனைக் கொண்டதாகவிருக்கும் ஏதேனும் கொடுக்கல் வாங்கல் அல்லது கையுதிர்ப்பு செயற்கையானது அல்லது கற்பித மானது என்றும் ஏதேனும் கொடுக்கல் வாங்கலுக்கு அல்லது கையுதிர்ப்புக்கு உண்மையில் பயன் கொடுக்கப்படவில்லை என்றும்

வரிமதிப்பீட்டாளர் அபிப்பிராயப்படுமிடத்து, அவர் அத்தகைய ஏதேனும் கொடுக்கல் வாங்கலை அல்லது கையுதிர்ப்பைப் புறக் கணித்து அதற்கிணங்க அத்தகைய கொடுக்கல் வாங்கலுக்கான அல்லது கையுதிர்ப்புக்கான திறத்தவர்களை வரிமதிப்பீடு செய்ய லாம்.

இப்பிரிவில், ''கையுதிர்ப்பு'' என்பது, ஏதேனும் நம்பிக் கைப் பொறுப்பை, மானியக் கொடையை, உடன்பாட்டை, உடன்படிக்கையை அல்லது ஒழுங்கேற்பாட்டை உள்ளடக்கும்''.

11. முதன்மைச் சட்டவாக்கத்தின் 32 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:—

(1) அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் உட்பிரிவை இடுவதன்மூலமும்:—

''(2) தவணை தவறியதாகவுள்ள மொத்த விற்பனை வரவு வரியானது, எவ்வரி மதிப்பீட்டுக்கெதிராகத் தவணை தவறியவர் செல்லுபடியான மேன்முறையீடொன்றைச் செய்யவில்லையோ அவ்வரிமதிப்பீடு தொடர்பிலானதாக அல்லது தவணை தவறிய வரியினால் கொடுத்துதவப்பட்ட விவரத் திரட்டொன்றுக்கிணங்கச் செலுத்தப்படற்பாலதான ஏதேனும் பணத்தொகை தொடர்பிலானதாக இருப்பின், தவணை தவறியவர், அத்தகைய அறிவித்தலிலிருந்து முப்பது நாட்களுக்குள், இறுக்கப்பட்ட வரிக்கெதிராக ஆணையாளர் தலைமையதிபதிக்கு ஆட்சேபனை தெரிவிக்கலாம்; அத்துடன் ஆணையாளர் தலைமையதிபதி, 20 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் எப்படியிருப்பினும், அத்தகைய ஆட்சேபனைகளைப் பரிசீலனை செய்து அவற்றின்மீது அவரது முடிவைக் கொடுத்தல் வேண்டும்; அம்முடிவு இறுதியானதாதல் வேண்டும்'';

(2) அப்பிரிவின் (3) ஆம் உட்பிரிவை நீக்குவதன்மூலம்.

12. முதன்மைச் சட்டவாக்கத்தின் 36 ஆம் பிரிவு, அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில், ''அவர்மீது வரிமதிப்பிடப்பட்டதான'' என்ற சொற்களுக்குப் பதிலாக, ''அவரினால் செலுத்தப்படற்பாலதான'' என்ற சொற்களை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

13. முதன்மைச் சட்டவாக்கத்தின் 44 ஆம் பிரிவு, ''உற்பத்தியாளர் ஒருவரைத் தவிர'' என்ற சொற்களுக்குப் பதிலாக ''பிரிவு 46 (2) இல் குறிப்பீடு செய்யப்பட்ட கொடுக்கல் வாங்கலொன்று தொடர்பில் தவிர,'' என்ற சொற்களையும் எண்களையும் இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

14. முதன்மைச் சட்டவாக்கத்தின் 46 ஆம் பிரிவை உடனடுத்துப் பின்வரும் தலையங்கத்தை உட்புகுத்துவதன்மூலம் அச்சட்டவாக்கம் இத்தால் திருத்தப்படுகின்றது:—

''அத்தியாயம் XIV அ

வரவுகளும் மீளளிப்புகளும்''

15. முதன்மைச் சட்டவாக்கத்தின் 47 ஆம் பிரிவு, ''முதற் கூறப்பட்ட பதிவு செய்யப்பட்ட உற்பத்தியாளரால் அந்தக் காலாண்டிற்கெனச்'' என்ற சொற்களுக்குப் பதிலாக, ''உற்பத்தியாளர் என்ற தொழில் தொடர்பில் முதற் கூறப்பட்ட பதிவு செய்யப்பட்ட உற்பத்தியாளரால் அந்தக் காலாண்டிற்கெனச்'' என்ற சொற்களை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

16. முதன்மைச் சட்டவாக்கத்தின் 50 ஆம் பிரிவு, அப்பிரிவின் (4) ஆம் உட்பிரிவில், அவ்வுட்பிரிவின் (IV) ஆம் பந்தியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வரும் பந்தியை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது:—

''(IV) களியாட்டக்காரர் அல்லது கலைத்தொழிலர் ஒருவரின் சேவைகளை ஏற்பாடு செய்வதற்கான ஒப்பந்தமொன்று உட்பட்டதும், ஆனால் ஊழிய ஒப்பந்தமொன்று உட்படாததும் ஆன சேவைகளை ஏற்பாடு செய்வதற்கான ஏதேனும் ஒப்பந்தம்''.

17. முதன்மைச் சட்டவாக்கத்தின் 53 ஆம் பிரிவு, ''குற்றத்தீர்ப்பளிக்கப் பட்டதன்மேல்'', என்பதிலிருந்து ''ஆளாதலும் வேண்டும்'' என்பது வரையிலான எல்லாச் சொற்களுக்கும் பதிலாகப் பின்வருவதனை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது:—

''குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல், 9 ஆம் பிரிவின்கீழ் வழங்கப்பட்ட அறிவித்தலொன்றின் தேவைப்பாடுகளுக்கிணங்கியொழுகத் தவறியமை என்ற தவறின் விடயத்தில் ஐம்பதாயிரம் ரூபாவுக்கு மேற்படாதவொரு குற்றப்பணத்திற்கு அல்லது ஆறு மாதங்களுக்கு மேற்படாதவொரு காலத் திற்கு இருவகையிலொருவகையான மறியற்றண்டனைக்கு, அல்லது அத் தகைய குற்றப்பணம், மறியற்றண்டனை ஆகிய இரண்டிற்கும், அத்துடன் வேறேதேனும் விடயத்தில் ஐம்பதாயிரம் ரூபாவுக்கு மேற்படாதவொரு குற்றப்பணத்திற்கு அல்லது ஆறு மாதங்களுக்கு மேற்படாதவொரு காலத் திற்கு இருவகையிலொருவகையான மறியற்றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம், மறியற்றண்டனை ஆகிய இரண்டிற்கும் ஆளாதலும் வேண் டும்''.

18. முதன்மைச் சட்டவாக்கத்தின் 59 ஆம் பிரிவு, இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:—

(1) ''வரிமதிப்பீட்டாளர்'' என்பதன் வரைவிலக்கணத்தை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் வரைவிலக்கணத்தை இடுவதன்மூலம்:—

''வரிமதிப்பீட்டாளர்'' என்பது, 1979 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க, உண்ணாட்டரசிறைச் சட்டத்தின் நோக்கங்களுக் காக நியமிக்கப்பட்ட உண்ணாட்டரசிறை வரிமதிப்பீட்டாள ரொருவர் என்று பொருள்படுமென்பதோடு, அச்சட்டத்தின், நோக்கங்களுக்காக நியமிக்கப்பட்ட உண்ணாட்டரசிறை சிரேட்ட வரிமதிப்பீட்டாளர் ஒருவரையும் உள்ளடக்கும்;''

(2) ''அதிகாரம் பெற்ற பிரதிநிதி'' என்பதன் வரைவிலக்கணத்தின் (2) ஆம் பந்தியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பந்தியை இடுவதன்மூலம்:—

''(2) அதிகாரவளிப்புத் தொடர்பான அத்தகைய கருமங்கள் தொடர்பில் இச்சட்டத்தின் நோக்கங்களுக்காகத் தமது சார்பில் செயலாற்றவென ஆளொருவரினுல் காலத்துக்குக் காலம் எழுத்தில் அதிகாரமளிக்கப்பட்டவரும், 1979 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க, உண்ணுட்டரசிறைச் சட்டத்தின் நோக்கங்களுக்காக ஆணையாளர் தலைமையதிபதியினுல் அங்கீகரிக்கப்பட்ட தனியாளொருவராக உள்ளவருமான எவரேனும் தனியாள் என்று பொருள்படும்;'';

(3) ''கம்பெனி'' என்பதன் வரைவிலக்கணத்தில் ''எனப் பொருள்படும்;'' என்ற சொற்களுக்குப் பதிலாக ''எனப் பொருள்படும் என்பதோடு, பகிரங்கக் கூட்டுத்தாபனம் ஒன்றையும் உள்ளடக்கும்,'' என்ற சொற்களை இடுவதன்மூலம்; அத்துடன்

(4) ''ஆள்'' என்பதன் வரைவிலக்கணத்தில் ''ஆட்கள் குழுவொன்றையும்'' என்ற சொற்களுக்குப் பதிலாக ''ஆட்கள் குழுவொன்றையும் அல்லது ஏதேனும் அரசாங்கத் திணைக்களத்தையும்'' என்ற சொற்களை இடுவதன்மூலம்.''.

## 1971 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க, தேசிய சேமிப்பு வங்கி திருத்துவதற்கானதொரு சட்டம்

1. இச்சட்டம் 1987 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க, தேசிய சேமிப்பு வங்கி (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

2. ஆயிரத்துத் தொளாயிரத்து எழுபத்தோராம் ஆண்டின் 30 ஆம் இலக்க, தேசிய சேமிப்பு வங்கிச் சட்டத்தின் 87 ஆம் பிரிவு, ''பணிப்பாளர்'' என்பதன் வரைவிலக்கணத்தை உடனடுத்துப் பின்வரும் வரைவிலக்கணத்தை உட்புகுத்துவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது:—

'பராயமடையாதவர் ஒருவர் தொடர்பாக ''பாதுகாவலர்'' என்பது, பராயமடையாதவரின் தகப்பன் அல்லது தாய் எனவும், தாயும் தகப்பனும் உயிருடன் இல்லாதபோது, பராயமடையாதவரின் பாட்டன் அல்லது பாட்டி அல்லது அப்போதைக்குப் பராயமடையாதவர் எந்த ஆளின் கவனிப்பிலும் கட்டுக்காப்பிலும் இருக்கின்றாரோ அந்த எவரேனும் ஆள் எனவும் பொருள்படும்'.

# 1987 ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்க, பிணையங்கள் பேரவைச் சட்டம்

இலங்கையின் பிணையங்கள் சந்தையை ஒழுங்குபடுத்தும் நோக்கத்துக்காக பிணையங்கள் பேரவையைத் தாபிப்பதற்கும், பிணையங்களில் வர்த்தகஞ் செய்தல் என்னும் தொழிலில் ஈடுபட்டுள்ள பங்குத்தொகுதி தரகர்களுக்கும் பங்குத்தொகுதி வியாபாரிகளுக்கும் பங்குத்தொகுதி பரிவர்த்தனை நிலையங்களுக்குமான உரிமம் வழங்குவதற்கும் நட்டஈட்டு நிதியமொன்றை நிறுவுவதற்கும், அவற்றுடன் தொடர்புபட்ட அல்லது அவற்றின் இடைநேர்விளைவான கருமங்களுக்கு ஏற்பாடு செய்வதற்குமானதொரு சட்டம்

1. இச்சட்டம் 1987 ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்க, பிணையங்கள் பேரவைச் சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம் என்பதுடன், கசெற்றில் வெளியிடப்படும் கட்டளைமூலம் அமைச்சரால் நியமிக்கப்படக்கூடியவாறான (இதனகத்துப் பின்னர் ''நியமித்த தேதி'' எனக் குறிப்பீடு செய்யப்படும்) அத்தகைய தேதியன்று நடைமுறைக்கு வருதலும் வேண்டும்.

## பாகம் I

### பிணையங்கள் பேரவையைத் தாபித்தலும் அதன் அமைப்பும்

2. (1) பிணையங்கள் பேரவை, (இதனகத்துப் பின்னர் இது ''பேரவை'' எனக் குறிப்பீடு செய்யப்படும்) என அழைக்கப்படவேண்டிய பேரவையொன்று, 3 ஆம் பிரிவின்கீழ் அதன் உறுப்பினர்களாகவுள்ள ஆட்களைக் கொண்டிருப்பதாகத் தாபிக்கப்படுதல் வேண்டும்.

(2) பேரவையானது, (1) ஆம் உட்பிரிவினுல் அதற்குக் குறித்தொதுக்கப்பட்ட பெயரின்கீழ், கூட்டிணைக்கப்பட்ட குழுவொன்றுதல் வேண்டுமென்பதுடன் இடையறு வழியுரிமையையும் பொது இலச்சினையொன்றையும் கொண்டிருத்தலும் வேண்டும்; அத்துடன் அது அத்தகைய பெயரில் வழக்குத் தொடரலாம் என்பதுடன், அதற்கெதிராக வழக்குத் தொடரவும் படலாம்.

3. (1) பேரவையானது பின்வரும் உறுப்பினர்களைக் கொண்டிருத்தல் வேண்டும்:—

(அ) (இதனகத்துப்பின்னர் ''நியமிக்கப்பட்ட உறுப்பினர்கள்'' எனக் குறிப்பீடு செய்யப்படும்) அமைச்சரால் நியமிக்கப்படவேண்டிய பின்வரும் உறுப்பினர்கள்—

(1) மத்திய வங்கியின் ஆளுநரால் பெயர்குறித்து நியமிக்கப்படும் அத்தகைய வங்கியின் ஒரு பிரதி ஆளுநர்; அத்துடன்

(2) சட்ட, நிதி, தொழில் அல்லது நிர்வாக விடயங்களில் பரந்த அனுபவத்தையுடையவர்களும் திறமைகளை வெளிப்படுத்தியுள்ளவர்களும் என அமைச்சருக்குத் தோன்றும் ஆறு ஆட்கள் ; அத்துடன்

(ஆ) பின்வரும் பதவிவழி உறுப்பினர்கள்—

(1) திறைசேரிக்கான பிரதிச் செயலாளர் பதவியை அப்போதைக்கு வகிக்கும் ஆள்;

(2) கம்பெனிகள் பதிவாளர் பதவியை அப்போதைக்கு வகிக்கும் ஆள்; அத்துடன்

(3) 1959 ஆம் ஆண்டின் 23 ஆம் இலக்க, வரைவு பெற்ற கணக்காளர் நிறுவகச் சட்டத்தினுல் தாபிக்கப்பட்ட வரைவு பெற்ற கணக்காளர் நிறுவகத்தின் தலைவர் பதவியை அப்போதைக்கு வகிக்கும் ஆள்;

(2) அமைச்சரானவர், பேரவையின் தவிசாளராயிருப்பதற்கெனப் பேரவையின் உறுப்பினர்கள் மத்தியிலிருந்து உறுப்பினரொருவரை நியமித்தல் வேண்டும்.

4. பேரவையின் நியமிக்கப்பட்ட உறுப்பினர் ஒவ்வொருவரும் அவர் இறப்பினுல், பதவிதுறப்பினுல் அல்லது பதவியிலிருந்து அகற்றப்படுவதனுல் முன்னராகவே தமது பதவியை வறிதாக்கினுலொழிய, மூன்று ஆண்டுகளைக் கொண்டவொரு காலப்பகுதிக்குப் பதவி வகித்தல் வேண்டும் என்பதுடன், மீள நியமிக்கப்படுவதற்குத் தகவுடையவராதல் வேண்டும்.

5. (1) பேரவையின் நியமிக்கப்பட்ட எவரேனும் உறுப்பினர் அமைச்சருக்கு முகவரியிட்டனுப்பும் அப்பயன்பட அமைந்த கடிதத்தின் மூலம் எந்த நேரத்திலும் தமது பதவியைத் துறக்கலாம் என்பதுடன், அத்தகைய பதவி துறத்தல், எழுத்தில் அமைச்சரால் ஏற்றுக்கொள்ளப்படுவதன்மேல் பயனுறுவதாதலும் வேண்டும்.

(2) அமைச்சர், கசெற்றில் வெளியிடப்படும் கட்டளை மூலம் அதற்கான காரணம் எதுவும் காட்டாமலே எவரேனும் நியமிக்கப்பட்ட உறுப்பினரைப் பதவியிலிருந்து அகற்றலாம், அத்துடன் அத்தகைய பதவியகற்றல் ஏதேனும் நீதிமன்றத்தில் கேள்விக்குட்படுத்தப்படலாகாது;

(3) பேரவையில் நியமிக்கப்பட்ட உறுப்பினரொருவர், அவரது இறப்பின் மூலம், அவர் பதவி துறப்பதன்மூலம் அல்லது பதவியிலிருந்து அகற்றப்படுவதன் மூலம் பதவியை வறிதாக்குமிடத்து அமைச்சரானவர் 3 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (அ) என்னும் பந்தியின் ஏற்பாடுகளைக் கவனத்திற் கொண்டு வேருேர் ஆளை, அவர் எவ்வுறுப்பினரை அடுத்துறுகின்ருரோ அந்த நியமிக்கப்பட்ட உறுப்பினரின் பதவிக் காலத்தின் முடிவுருதெஞ்சியுள்ள காலப் பகுதிக்குப் பதவி வகிப்பதற்கென நியமிக்கலாம்.

(4) நியமிக்கப்பட்ட பேரவை உறுப்பினரொருவர், சுகவீனம் காரணமாக அல்லது இலங்கையில் இல்லாமை காரணமாக அல்லது வேறு ஏதேனும் காரணமாக, தமது பதவிக்குரிய கடமைகளை ஏதேனும் காலத்தின்போது தற்காலிகமாகப் புரிய இயலாதவராயிருப்பின் அமைச்சரானவர், அத்தகைய காலப்பகுதியின் போது அவரது இடத்தில் பதில் செயலாற்றுவதற்கென வேருேர் ஆளை 3 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (அ) என்னும் பந்தியின் ஏற்பாடுகளைக் கவனத்திற் கொண்டு நியமிக்கலாம்.

28. உரிமம் பெற்ற பங்குத்தொகுதிப் பரிவர்த்தனையொன்றில் நிரற்படுத்தப்பட்ட பகிரங்க கம்பெனியொன்றில் பங்குகள் வைத்திருக்கும் ஆள் எவரும் அத்தகைய உரிமம் பெற்ற பங்குத்தொகுதிப் பரிவர்த்தனையினால் மேற்கொள்ளப்படும் வியாபார நடவடிக்கை முறைக்கு இணங்கியொழுகுவதாகவல்லாது அத்தகைய பங்குகளை விற்பனை செய்தல் ஆகாது.

29. உரிமம் பெற்ற பங்குத்தொகுதித் தரகர் அல்லது பங்குத்தொகுதி வியாபாரி எவரும், அவர் உறுப்பினராகவுள்ள உரிமம் பெற்ற பங்குத்தொகுதி பரிவர்த்தனைக்கு வெளியே நிரற்படுத்தப்பட்ட பிணையங்களில் வியாபாரஞ் செய்தல் ஆகாது.

30. (1) நியமிக்கப்பட்ட தேதியிலிருந்தும் அதன் பின்னரும் கூட்டிணைக்கப்பட்ட குழு எதுவும் அல்லது தனியாள் எவரும் விடயத்திற்கேற்றாற்போல், அத்தகைய கூட்டிணைக்கப்பட்ட குழுவுக்கு அல்லது தனியாளுக்கு இச்சட்டத்தின் கீழ் பேரவையினால் பங்குத்தொகுதிப் பரிவர்த்தனையொன்றாக, பங்குத்தொகுதித் தரகரொருவராக அல்லது பங்குத்தொகுதி வியாபாரி ஒருவராக உரிமம் அளிக்கப்பட்டாலொழிய, விடயத்துக்கேற்றாற்போல் ''பங்குத்தொகுதி பரிவர்த்தனை'' அல்லது ''பங்குத்தொகுதித் தரகர்'' அல்லது ''பங்குத்தொகுதி வியாபாரி'' என்ற சொற்களைப் பயன்படுத்துதல் ஆகாது.

(2) நியமிக்கப்பட்ட தேதியிலிருந்தும் அதன் பின்னரும், கூட்டிணைக்கப்பட்ட குழு எதுவும் அல்லது தனியாள் எவரும், விடயத்திற்கேற்றாற்போல், பங்குத்தொகுதி பரிவர்த்தனையொன்றாக, பங்குத்தொகுதித் தரகராக அல்லது பங்குத்தொகுதி வியாபாரியாக இச்சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் வழங்கப்பட்ட உரிமமொன்றின் கீழ் அவ்வாறு செய்வதற்கு அதிகாரமளிக்கப்பட்டாலேயொழிய, தொழில் கொண்டு நடாத்துதல் ஆகாது.

ஆயின் எவ்வாறாயினும், நியமிக்கப்பட்ட தேதிக்கு நேர் முன்னர், பங்குத்தொகுதிப் பரிவர்த்தனையாக, பங்குத்தொகுதித் தரகராக அல்லது பங்குத்தொகுதி வியாபாரியாகத் தொழில் கொண்டு நடாத்திய கூட்டிணைக்கப்பட்ட குழு எதுவும் அல்லது தனியாள் எவரும், இச்சட்டத்தின் கீழ் உரிமம் ஒன்று கிடைக்கப்பெறாமலேயே,

(அ) நியமிக்கப்பட்ட தேதியிலிருந்து மூன்று மாத காலப்பகுதிக்கு; அத்துடன்

(ஆ) அக்காலப்பகுதி முடிவடையுமுன்னர் இச்சட்டத்தின் கீழான உரிமமொன்றுக்கு ஆளொருவர் விண்ணப்பிப்பாராயின், உரிமம் வழங்கப்படுகின்றவரையில் அல்லது இறுதியாக மறுக்கப்படுகின்ற வரையில் அல்லது விண்ணப்பம் மீளப் பெறப்படுகின்ற வரையில்,

அத்தகைய தொழிலைக் கொண்டு நடாத்துவதற்கு உரித்துடையதாதல் அல்லது உரித்துடையவராதல் வேண்டும்.

(3) ஒராம் உட்பிரிவின் அல்லது (2) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளை மீறிச் செயலாற்றும் கூட்டிணைக்கப்பட்ட குழு எதுவும் ஆள் எவரும், தவறொன்றுக்கு குற்றவாளியாதல் வேண்டும் என்பதுடன் குற்றத் தீர்ப்பளிக்கப்பட்டதன் மேல் இரண்டரை இலட்சம் ரூபாவை விஞ்சாத குற்றப் பணமொன்றுக்கு ஆளாதலும் வேண்டும்.

31. இச்சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ், விடயத்திற்கேற்றுற்போன்று, பங்குத்தொகுதித் தரகரொருவராக அல்லது பங்குத்தொகுதி வியாபாரியொருவராக உரிமமளிக்கப்பட்ட கூட்டிணைக்கப்பட்ட குழு எதுவும் அல்லது ஒரு தனியாள் எவரும் அல்லது அத்தகைய உரிமமளிக்கப்பட்டவரின் ஏதேனும் கொளித் துணை நிலைக்கம்பெனி அல்லது இணைக்கம்பெனி எதுவும் அல்லது அத்தகைய உரிமமளிக்கப்பட்டவரின் பணிப்பாளர் எவரும்—

(அ) அத்தகைய கூட்டிணைக்கப்பட்ட குழு அல்லது தனியாள் ஒருவர் பங்குத் தொகுதித் தரகராக உரிமமளிக்கப்பட்டுள்ளவிடத்து, பங்குத்தொகுதி வியாபாரியொருவராக உரிமமளிக்கப்படுதலாகாது; அத்துடன்

(ஆ) அத்தகைய கூட்டிணைக்கப்பட்ட குழு அல்லது தனியாள், பங்குத் தொகுதி வியாபாரியொருவராக உரிமமளிக்கப்பட்டுள்ளவிடத்து, பங்குத்தொகுதித் தரகரொருவராக உரிமமளிக்கப்படுதலாகாது.

## பகுதி IV

### உள்ளாட்கள் கையாளுகை

32. (1) எட்டாம் உட்பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய, கம்பெனியொன்றுடன் மனதறியத் தொடர்பு கொண்டுள்ள அல்லது நியமிக்கப்பட்ட தேதிக்கு நேர் முந்திய ஆறு மாதங்களின்போது ஏதேனும் நேரத்தில் கம்பெனியொன்றுடன் மனதறியத் தொடர்பு கொண்டிருந்த தனியாள் ஒருவர்—

(அ) கம்பெனியுடன் தொடர்பு கொண்டிருப்பதன் பயன் கொண்டு அவர் வைத்திருக்கின்ற தகவலைக் கொண்டிருப்பாராயின்;

(ஆ) அவ்வாறு தொடர்பு கொண்டுள்ளவரும் எந்தப் பதவியின் பயன் கொண்டு அவர் அவ்வாறு தொடர்பு கொண்டுள்ளாரோ அந்தப் பதவியிலிருக்கின்றவருமான ஆளொருவர், எந்தத் தகவலை அப்பதவியைச் சார்ந்த பணிகளைத் தகுந்த முறையில் நிறைவேற்றுதற்காகவன்றி வெளிவிடக் கூடாதென எதிர்பார்ப்பது நியாயமானதாக இருக்குமோ அந்தத் தகவலைக் கொண்டிருப்பாராயின், அத்துடன்

(இ) அப்பிணைப்பொறுப்புக்களின் தொடர்பிலே உடனடியாகப் பின் விளைவுகளை ஏற்படுத்தும் தகவல் வெளியிடப்படாத விலையாகும் என அவர் அறிந்திருக்கின்ற தகவலைக் கொண்டிருப்பாராயின்,

அவர், அக்கம்பெனியின் நிரற்படுத்தப்பட்ட பிணைப்பொறுப்புக்களில் வியாபாரம் செய்தலாகாது.

(2) எட்டாம் (9) ஆம் உட்பிரிவுகளின் ஏற்பாடுகளுக்கமைய, கம்பெனியொன்றுடன் மனதறியத் தொடர்பு கொண்டுள்ள அல்லது நியமிக்கப்பட்ட தேதிக்கு நேர்முந்திய ஆறு மாதங்களின்போது ஏதேனும் நேரத்தில் கம்பெனியொன்றுடன் மனதறியத் தொடர்பு கொண்டிருந்த தனியாள் ஒருவர்—

(அ) முதலாவதாகக் குறிப்பிடப்பட்ட கம்பனியுடன் தொடர்பு கொண்டிருப்பதன் பயன்கொண்டு அவர் வைத்திருக்கின்ற தகவலைக் கொண்டிருப்பாராயின்;

(ஆ) அவ்வாறு தொடர்பு கொண்டுள்ளவரும் எந்தப் பதவியின் பயன்கொண்டு அவர் அவ்வாறு தொடர்பு கொண்டுள்ளாரோ அந்தப் பதவியிலிருக்கின்றவருமான ஆளொருவர், எந்தத் தகவலை அப்பதவியைச் சார்ந்த பணிகளைத் தகுந்த முறையில் நிறைவேற்றுவதற்காகவன்றி வெளியிடுமாறு எதிர்பார்ப்பது நியாயமாயிருக்குமோ அந்தத் தகவலைக் கொண்டிருப்பாராயின்;

(இ) அந்த வேறு கம்பெனியின் அப்பிணைப்பொறுப்புக்களின் தொடர்பில் உடனடியான பின்விளைவுகளை ஏற்படுத்தும் தகவல், வெளிபிடப்படாத விலையாகும் என அவர் அறிந்திருக்கின்ற தகவலைக் கொண்டிருப்பாராயின்; அத்துடன்

(ஈ) உள்ளபடியாகவாயினுஞ்சரி, சிந்திக்கப்பட்டதாயினுஞ்சரி முதலாவதாகக் குறிப்பிடப்பட்ட கம்பெனி, அந்த வேறு கம்பெனி ஆகிய இரண்டையும் ஈடுபடுத்துகின்ற அல்லது அவற்றுள் ஒன்றையும் மற்றதன் பிணைப்பொறுப்புகளையும் ஈடுபடுத்துகின்ற ஏதேனும் கொடுக்கல் வாங்கலுடன் தொடர்புபட்ட அல்லது அத்தகைய ஏதேனும் கொடுக்கல் வாங்கல் இனிமேலும் சிந்திக்கப்படவில்லை என்ற நிகழ்வுடன் தொடர்புபட்ட தகவலைக் கொண்டிருப்பாராயின்,

அவர் ஏதேனும் பிற கம்பெனியின் நிரற்படுத்தப்பட்ட பிணைப்பொறுப்புக்களில் வியாபாரம் செய்தலாகாது.

(3) எட்டாம் (9) ஆம் உட்பிரிவுகளின் ஏற்பாடுகளுக்கமைய—

(அ) தனியார் எவரேனும், நேரடியாகவாயினுஞ்சரி, மறைமுகமாகவாயினுஞ்சரி குறித்த ஒரு கம்பெனியுடன் தொடர்பு கொண்டிருக்கின்றவரும் அல்லது தகவலைப் பெற்றுக் கொண்ட தேதிக்கு நேர் முந்திய ஆறு மாதங்களுக்குள் ஏதேனும் நேரத்தில் அவ்வாறு தொடர்பு கொண்டிருந்தவரும் அத்துடன் அவ்வாறு தொடர்பு கொண்டிருந்ததன் பயன் கொண்டு தகவலை வைத்திருக்கின்றாரென முன்னைய தனியாளால் அறியப்பட்டவரும் அல்லது எவரை அவ்வாறு நம்புவதற்கு நியாயமான காரணமிருக்கின்றதோ அவருமாகிய வேறோர் தனியாளிடமிருந்து மனதறியப் பெற்றுக்கொண்ட தகவல் வைத்திருக்குமிடத்தும்; அத்துடன்

(ஆ) பின்னையவரின் தொடர்பு காரணமாகவும் பதவி காரணமாகவும் அப்பதவியைச் சார்ந்த பணிகளைத் தகுந்த முறையில் நிறைவேற்றுவதற்காகவன்றித் தகவலை வெளிவிடக்கூடாதென அவரை எதிர்பார்ப்பது நியாயமானதாகும் என முன்னைய தனியாள் அறிந்திருக்குமிடத்து அல்லது அவ்வாறு நம்புவதற்கு அவருக்கு நியாயமான காரணமிருக்குமிடத்தும்,

முன்னைய தனியாள், அப்பொழுது—

(1) அப்பிணைப்பொறுப்புக்களின் தொடர்பில் உடனடியான பின் விளைவுகளை ஏற்படுத்தும் தகவல் வெளியிடப்படாத விலையாகும் என அவர் அறிந் திருப்பாராயின், அக்கம்பெனியின் நிரற்படுத்தப்பட்ட பிணைப்பொறுப் புக்களில் தாமாக வியாபாரம் செய்தலாகாது; அத்துடன்

(2) அப்பிணைப்பொறுப்புக்களின் தொடர்பில் உடனடியான பின்விளைவுகளை ஏற்படுத்தும் தகவல், வெளியிடப்படாத விலையாகும் என்பதனையும் அது உள்ளபடியாகவாயினுஞ் சரி சிந்திக்கப்பட்டதாயினுஞ் சரி, முத லாவதாகக் குறிப்பிடப்பட்ட கம்பெனி, அந்த வேறு கம்பெனி ஆகிய இரண்டையும் ஈடுபடுத்துகின்ற அல்லது அவற்றுள் ஒன்றையும் மற்ற தன் பிணைப்பொறுப்புக்களையும் ஈடுபடுத்துகின்ற ஏதேனும் கொடுக்கல் வாங்கலின் அல்லது அந்தகைய ஏதேனும் கொடுக்கல் வாங்கல் இனி மேல் சிந்திக்கப்படவில்லை என்ற நிகழ்வின் தொடர்பிலானது என் பதனையும் அறிந்திருப்பாராயின், வேறு ஏதேனும் கம்பெனியின் நிரற் படுத்தப்பட்ட பிணைப்பொறுப்புக்களில் தாமாகவோ வியாபாரம் செய்தலாகாது.

(4) எட்டாம், (9) ஆம் உட்பிரிவுகளின் ஏற்பாடுகளுக்கமைய, தனியார் ஒருவர், வேறோர் ஆளுடனுயினுஞ்சரி, அல்லாவிடினுஞ்சரி, குறித்த ஒரு தன்மை யில் கம்பெனியொன்றிற்குக் கையேற்றல் முனைவொன்றைச் செய்வதற்குச் சிந்திக் குமிடத்து அல்லது சிந்தித்துள்ளவிடத்து, அந்தத் தனியாள், முனைவு சிந்திக்கப் படுகிறது என்ற அல்லது இனி மேலாகச் சிந்திக்கப்படவில்லை என்ற தகவல், அப்பிணைப்பொறுப்புக்களின் தொடர்பில் உடனடியாகப் பின்விளைவுகளை ஏற் படுத்துகின்ற வெளிப்படாத விலை என்பதனை அறிந்திருப்பாராயின், அவர் வேறோர் தன்மையில் அக்கம்பெனியின் நிரற்படுத்தப்பட்ட பிணைப்பொறுப்புக் களில் வியாபாரம் செய்தலாகாது.

(5) எட்டாம், (9) ஆம் உட்பிரிவுகளின் ஏற்பாடுகளுக்கமைய, தனியா ளொருவர், நேரடியாகவாயினுஞ்சரி, மறைமுகமாகவாயினுஞ்சரி, (4) ஆம் உட் பிரிவின் ஏற்பாடுகள் எந்தத் தனியாளுக்கு ஏற்புடையனவாகின்றனவோ அந்தத் தனியாளொருவரிடமிருந்து, (4) ஆம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட முனைவு சிந்திக்கப்பட்டு வருகிறது அல்லது இனி மேலாகச் சிந்திக்கப்படவில்லை என்ற தகவலை மனதறியப் பெற்றுக்கொண்டுள்ளவிடத்து, முதலாவதாகக் குறிப்பிடப்பட்ட தனியாள் அப்பிணைப் பொறுப்புக்களின் தொடர்பில் அத் தகவல் உடனடியான பின்விளைவை ஏற்படுத்துகின்ற வெளிப்படாத விலை என்று அவர் அறிந்திருப்பாராயின் அக்கம்பெனியின் நிரற்படுத்தப்பட்ட பிணைப்பொறுப் புக்களின் தாமாகவே வியாபாரம் செய்தலாகாது.

(6) எட்டாம், (9) ஆம் உட்பிரிவுகளின் ஏற்பாடுகளுக்கமைய, நிரற்படுத்தப் பட்ட பிணைப்பொறுப்புக்கள் வியாபாரம் செய்வதிலிருந்து இப்பிரிவின் ஏதேனும் ஏற்பாட்டினுல் அப்போதைக்குத் தடைசெய்யப்பட்டுள்ள தனியாளொருவர், அப்பிணைப்பொறுப்புக்களைக் கையாள்வதற்கு, வேறு எவரேனும் ஆளுக்கு எவ்வாள் அத்தகைய நிரற்படுத்தப்பட்ட பிணைப்பொறுப்புக்களில் வியாபாரம் செய்பவர் எனத் தெரிந்திருந்தும் அல்லது அவ்வாறு நம்புவதற்கு நியாயமான காரணத்தைக் கொண்டிருந்தும் அறிவுறுத்துதலோ அல்லது அவற்றைப் பெற்றுக்கொடுத்தலோ ஆகாது.

(7) எட்டாம், (9) ஆம் உட்பிரிவுகளின் ஏற்பாடுகளுக்கமைய, எந்தத் தனியாள் ஏதேனும் தகவலை வைத்திருக்கின்றார் என்ற காரணத்தினால் நிரற்படுத்தப்பட்ட பிணைப்பொறுப்புக்களில் வியாபாரம் செய்வதிலிருந்து அப்போதைக்கு மேலே சொல்லப்பட்டுள்ளவாறு தடைசெய்யப்பட்டுள்ளாரோ அந்தத் தனியாளொருவர் அத்தகவலை, எவரேனும் ஆளாவது அத்தகைய நிரற்படுத்தப்பட்ட பிணைப்பொறுப்புக்களில் வியாபாரம் செய்வதற்கு வேறு எவரேனும் ஆளுக்கு அறிவுறுத்தும் அல்லது ஆளைப்பெற்றுக் கொடுக்கும் நோக்கத்துக்குப் பயன்படுத்துபவர் என அறிந்திருப்பாராயின் அல்லது அவ்வாறு நம்புவதற்கு நியாயமான காரணத்தைக் கொண்டிருப்பாராயின், தெரிவித்தல் ஆகாது.

(8) இப்பிரிவின் ஏற்பாடுகள், தனியாளொருவரை, அவர் ஏதேனும் தகவலை வைத்திருக்கின்றார் என்ற காரணத்தினால்—

(அ) தமக்காகவாயினுஞ்சரி, வேறோர் ஆளுக்காகவாயினுஞ்சரி இலாபமொன்றை அடையும் நோக்குடனன்றி அல்லது நட்டமொன்றைத் தவிர்க்கும் நோக்குடனன்றி வேறு வகையில் அத்தகவலைப் பயன்படுத்துவதன் மூலம் ஏதேனும் குறித்த விடயத்தைச் செய்வதினின்றும்;

(ஆ) ஒழிப்போனாகை, பெறுநராக அல்லது வங்கி முறியில் நம்பிக்கைப் பொறுப்பாளராக அவரது பணிகளை நல்லெண்ணத்துடன் நிறைவேற்றுகையில் கொடுக்கல் வாங்கலொன்றில் ஈடுபடுவதினின்றும் அல்லது

(இ) தகவல்—

(1) அவர், ஈடுபட்டிருந்த அல்லது தொழிலுக்கமர்ந்திருந்த பங்குத் தொகுதித் தரகர் அல்லது பங்குத்தொகுதி வியாபாரி ஒருவரின் தொழில் நெறியின்பொழுது அவரால் பெறப்பட்டிருந்தவராயின்; அத்துடன்

(2) அத்தொழிலின் சாதாரண நெறியின்பொழுது பெறவேண்டும் எனவும் அவர் அதனை அத்தொழில் நெறியின்பொழுது நல்லெண்ணத்துடன் புரிகிறார் எனவும் எதிர்பார்ப்பது நியாயமானதாகத் தோன்றுகின்ற விவரமொன்றைச் சேர்ந்ததாயின், குறித்த ஏதேனும் விடயத்தைப் புரிவதினின்று,

தடைசெய்தல் ஆகாது. அத்துடன் அவர் அக்காரியத்தை அத்தொழில் நெறியின்போது நன்னம்பிக்கையுடன் செய்திருத்தல் வேண்டும்.

(9) தனியாள் ஒருவர், ஏதேனும் குறித்த கொடுக்கல் வாங்கலின் தொடர்பில் தகவல் வைத்துள்ளார் என்ற காரணத்தினால் மாத்திரம்—

(அ) இரண்டாம் உட்பிரிவில், (3) ஆம் உட்பிரிவின் (11) ஆம் பந்தியின், (4) ஆம் உட்பிரிவின் அல்லது (5) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளினால் நிரற்படுத்தப்பட்ட பிணைப்பொறுப்புக்கள் வியாபாரம் செய்வதிலிருந்து; அல்லது

(ஆ) ஆறும் உட்பிரிவின் அல்லது (7) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளினுல் (அ) எனும் பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்ட ஏதேனும் ஏற்பாடு களினுல் அவர் எந்நிரற்படுத்தப்பட்ட பிணைப்பொறுப்புக்களை வியா பாரம் செய்வதிலிருந்து தடை செய்யப்படுகின்ருரோ அந்நிரற்படுத் தப்பட்ட பிணைப்பொறுப்புக்களின் தொடர்பில் வேறு ஏதேனும் விட யத்தைப் புரிவதிலிருந்து,

கொடுக்கல் வாங்கலை நிறைவு செய்வதை அல்லது கொண்டு நடாத்துவதை வசதிப்படுத்துவதற்கென அவர் அவ்விடயத்தைச் செய்வாராயின், தடை செய்யப் படுதலாகாது.

(10) எட்டாம் உட்பிரிவின் (அ) என்னும் பந்தியின் ஏற்பாடுகளைவிட இப்பிரிவின் ஏற்பாடுகளினுல் நிரற்படுத்தப்பட்ட பிணைப்பொறுப்புக்களில் வியா பாரம் செய்வதிலிருந்து அல்லது வியாபாரம் செய்யுமாறு வேறு எவரேனும் ஆளுக்கு அறுவுறுத்துவதிலிருந்து அல்லது ஆளைப் பெற்றுக்கொடுப்பதிலிருந்து தடை செய்யப்படுபவராயிருக்கும் நம்பிக்கைப் பொறுப்பாளர் ஒருவர் அல்லது சட்டமுறையான பிரதிநிதியொருவர் அல்லது நம்பிக்கைப் பொறுப்பாளராவது அல்லது சட்டமுறையான பிரதிநிதியாவது கூட்டிணைக்கப்பட்ட ஒரு குழுவாக இருக்குமிடத்து, அந்த நம்பிக்கைப் பொறுப்பாளரின் அல்லது சட்டமுறையான பிரதிநிதியின் சார்பில் செயலாற்றும் தனியாளொருவர் அந்நிரற்படுத்தப்பட்ட பிணைப்பொறுப்புக்களில் வியாபாரம் செய்யுமிடத்து அல்லது அவற்றில் வியா பாரம் செய்யுமாறு வேறு எவரேனும் ஆளுக்கு அறிவுறுத்துமிடத்து, அல்லது ஆளைப் பெற்றுக்கொடுக்குமிடத்து, அவர்—

(அ) அத்தகைய அறிவுரையைப் பெறுவதற்குத் தோதான ஆளொருவராக அவருக்குத் தோன்றியவரும்; அததுடன்

(ஆ) அந்தப் பிணைப்பொறுப்புக்களைக் கையாள்வதிலிருந்து இப்பிரிவினுல் தடைசெய்யப்பட்டவராக அவருக்குத் தோன்ருதவருமான ஆளொரு

வரின் அறிவுரையின்மீது செயலாற்றினுராயின், அப்பந்தியில் குறிப்பீடு செய்யப் பட்டவாறு அவர் செயலாற்றியிருப்பதாகவே ஊகிக்கப்படுதல் வேண்டும்.

33. (1) இப்பிரிவின் ஏற்பாடுகள்—

(அ) பகிரங்க சேவையாளர் ஒருவரால் அல்லது முன்னைய பகிரங்க சேவை யாளர் ஒருவரால் ஒரு சேவையாளர் என்ற தன்மையிலான அவரது பதவியின் அல்லது முன்னைய பதவியின் பயன் கொண்டு வைத்திருக்கப் பட்ட அல்லது பகிரங்க சேவையாளர் என்ற பதவியின் பயன் கொண்டு தகவலை வைத்திருக்கின்ருர் என அல்லது வைத்திருக்கின்ருரென நம்பு வதற்கு நியாயமான காரணமிருக்கின்றதென அறிந்திருக்கும் பகிரங்க சேவையாளர் அல்லது முன்னைய பகிரங்க சேவையாளர் ஒருவரிட மிருந்து (நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ) தனியாளரொரு வரால் மனதறியப்பட்ட தகவலுக்கும்;

(ஆ) ஒரு பகிரங்க சேவையாளரின் பதவியில் அல்லது முன்னைய பகிரங்க சேவையாளரின் முன்னைய பதவியில் இருக்கும் தனியாளொருவர், எத்தகவலை, அப்பதவியைச் சார்ந்த பணிகளைத் தகுந்த முறையில் நிறைவேற்றுவதற்காகவன்றி வெளியிடக்கூடாதென எதிர்பார்ப்பது, நியாயமாகுமோ அத்தகவலுக்கும் அத்துடன்

(இ) குறித்த ஒரு கம்பெனியின் (இதனகத்துப் பின்னர் இப்பிரிவில் ''இயைபான பிணையங்கள்'' எனக் குறிப்பீடு செய்யப்படும்) நிரற்படுத்தப்பட்ட பிணையங்கள் தொடர்பில், எத்தகவல் உடனடியான பின்விளைவுகளை ஏற்படுத்தும் வெளியிடப்படாத விளைவு என்பது அதனை வைத்திருக்கும் தனியாளுக்குத் தெரிந்திருக்கின்றதோ அத்தகவலுக்கும்,

ஏற்புடையனவாதல் வேண்டும்.

(2) இப்பிரிவின் ஏற்பாடுகள் எத்தகவலுக்கு இப்பிரிவு ஏற்புடையதாகின்றதோ, அத்தகவல் வைத்திருக்கும் பகிரங்க சேவையாளர் ஒருவருக்கும் அல்லது முன்னைய பகிரங்க சேவையாளர் ஒருவருக்கும் அத்துடன் எப்பகிரங்க சேவையாளர் அல்லது முன்னைய பகிரங்க சேவையாளர் பகிரங்க சேவையாளராக அவரது பதவியின் அல்லது முன்னைய பதவியின் பயன் கொண்டு தகவலை வைத்திருக்கின்றாரெனத் தனியாள் ஒருவர் அறிந்திருக்கின்றாரோ, அல்லது அவ்வாறு நம்புவதற்கு நியாயமான காரணங்களைக் கொண்டிருக்கின்றாரோ அப்பகிரங்க சேவையாளரிடமிருந்து அல்லது முன்னைய சேவையாளரிடமிருந்து (நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ) அத்தகைய ஏதேனும் தகவலை மனதறியப் பெற்றுக் கொண்ட எவரேனும் தனியாளுக்கும் ஏற்புடையனவாதல் வேண்டும்.

(3) இப்பிரிவின் ஏற்பாடுகள், எந்தத் தனியாளுக்கு ஏற்புடையதாயிருக்கின்றதோ அந்தத் தனியாள் ஒருவர்—

(அ) ஏதேனும் இயைபான பிணையங்களில் வியாபாரம் செய்தலாகாது.

(ஆ) வேறு ஆள் அவற்றில் வியாபாரம் செய்வார் என அறிந்திருந்தும் அல்லது அவ்வாறு நம்புவதற்கு நியாயமான காரணங்களைக் கொண்டிருந்தும் அத்தகைய ஏதேனும் இயைபான பிணையங்களில் வியாபாரம் செய்யுமாறு வேறு எவரேனும் ஆளுக்கு அறிவுறுத்தவோ அல்லது அவற்றைப் பெற்றுக்கொடுத்தலேனும் ஆகாது; அத்துடன்

(இ) வேறு எவரேனும் ஆளுக்கு அத்தகைய இயைபான பிணையங்களில் வியாபாரம் செய்யும் நோக்கத்துக்கு அல்லது வியாபாரம் செய்யுமாறு வேறு எவரேனும் ஆளுக்கு அறிவுறுத்தும் அல்லது அவ்வாளைப் பெற்றுக் கொடுக்கும் நோக்கத்துக்கு அந்த வேறு ஆள் அல்லது எவரேனுமோர் ஆள் பயன்படுத்துவார் என (அத்தனியாள்) அறிந்திருப்பாராயின் அல்லது அவ்வாறு நம்புவதற்கு நியாயமான காரணத்தைக் கொண்டிருப்பாராயின், அவர் வைத்திருக்கின்ற அல்லது விடயத்துக்கேற்றவாறு (2) ஆம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்டுள்ளவாறான தகவலைத் தெரிவித்தல் ஆகாது.

(4) தனியாளொருவர், குறித்த ஒரு கொடுக்கல் வாங்கல் தொடர்பிலான தகவலை வைத்திருக்கின்றார் என்ற காரணத்தினால் மாத்திரம், அக்கொடுக்கல் வாங்கலை நிறைவு செய்வதை அல்லது கொண்டு நடாத்துதலை வசதிப்படுத்துவதற் காக அவர் ஏதேனும் காரியத்தைச் செய்வாராயின் அதனைச் செய்வதினின்று இப்பிரிவில் ஏதேனும் ஏற்பாடுகளினால் தடைசெய்யப்படுதல் ஆகாது.

34. (1) இச்சட்டத்தின் இப்பாகத்தின் நோக்கங்களுக்காக, தனியாளொரு வர்—

(அ) அவர் கம்பெனியொன்றின் அல்லது சார்புடைய கம்பெனியொன்றின் பணிப்பாளராக இருப்பாராயின்; அல்லது

(ஆ) அவர், அக்கம்பெனியின் அல்லது சார்புடைய ஒரு கம்பெனியின் பணிப்பாளராக அல்லாத அலுவலர் ஒருவரின் அல்லது ஊழியர் ஒருவரின் பதவியொன்றை வகிப்பவராயின் அல்லது அவருக்கும் (அல்லது அவரது தொழில் தருநருக்கும் அல்லது அவர் எக்கம்பெனியில் பணிப்பாளராக இருக்கின்றாரோ அக்கம்பெனிக்கும்) முதலாவது கம் பெனிக்கும் அல்லது சார்புடைய கம்பெனியொன்றுக்கும் இடையில் உயர் தொழில் அல்லது தொழில் உறவொன்றை ஈடுபடுத்தும் பதவி யொன்றை வகிப்பவராயின், (இப்பதவிகளுள் எந்தவொன்றும் இரண்டி லொரு கம்பெனியின் பிணையங்கள் தொடர்பில் உடனடியான பின் விளைவை ஏற்படுத்துகின்ற வெளியிடப்படாத விலையாக இருக்கின்றதும் ஆளொருவர் தமது பதவியைச் சார்ந்த பணிகளைத் தகுந்த முறையில் நிறைவேற்றுவதற்காகவன்றி வெளியிடக்கூடாதென எதிர்பார்ப்பது நியாயமானதாயிருக்கின்றதுமான தகவலைப் பெறும் வாய்ப்பை அவ ருக்குத் தருமென நியாயமாக எதிர்பார்க்கப்படக்கூடியதாகவிருக்க வேண்டும், அவ்வாறு வகித்தால் மட்டுமே கம்பெனியொன்றுடன் தொடர்புடையவராயிருக்கின்றார்.

(2) இச்சட்டத்தின் இப்பாகத்தில் ஏதேனும் கம்பெனியில் ஏதேனும் நிரற் படுத்தப்பட்ட பிணையங்கள் தொடர்பில் ''உடனடியான பின் விளைவுகளை ஏற் படுத்தும் வெளியிடப்படாத விலை'' பற்றிய ஏதேனும் குறிப்பீடு—

(அ) எக்கம்பெனி (நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ) தொடர்பி லான அல்லது அதனோடு சம்பந்தமுள்ள குறித்த கருமங்கள் தொடர்பி லானதும் அதாவது அக்கம்பெனி தொடர்பிலான அல்லது அதனோடு சம்பந்தமுள்ள பொது இயல்பினதொன்றாகவல்லாததும்; அத்துடன்

(ஆ) அந்நிரற்படுத்தப்பட்ட பிணையங்களில் கையாளுவதில் பழக்கப்பட்ட வர்களான அல்லது அவற்றைக் கையாளும் சாத்தியமுள்ளவர்களாகக் கூடியவர்களான அவ்வாட்களால் பொதுவில் அறியப்படாததும், ஆனால் பொதுவில் அவர்களால் அறியவருமானால் அப்பிணைப்பொறுப் புக்களின் விலையைப் பொருளளவில் பாதிக்கக் கூடியதுமான,

தகவலைப் பற்றிய குறிப்பீடாகும்.

(3) இச்சட்டத்தின் இப்பாகத்தில் சந்தருப்பம் வேறு விதமாகத் தேவைப் படுத்திஞலன்றி—

''கம்பெனி'' என்பது இச்சட்டத்தின் கருத்தெல்லேக்குட்பட்ட ஒரு நிரற் படுத்தப்பட்ட பகிரங்கக் கம்பெனி என்று பொருளாகும்;

''சார்புடைய கம்பெனி'' என்பது ஏதேனும் கம்பெனியின் தொடர்பில் அக்கம்பெனியின் துணைநிலேக்கம்பெனியாக அல்லது கொளிக் கம் பெனியாக அல்லது அக்கம்பெனியுடைய கொளிக் கம்பெனியின் துணைநிலே அல்லது இணைக்கம்பெனியாகவிருக்கும் ஏதேனும் கூட் டிணைக்கப்பட்ட குழு என்று பொருளாகும்;

''கம்பெனி ஒன்றிற்கான கையேற்றல் முனைவு'' என்பது கம்பெனியில் பங்குகள் கொண்டிருக்கும் எல்லோருக்கும் (அல்லது முனைவைச் செய்யும் ஆளேயும் அவரது நியமத்தரையும் தவிர்ந்த பங்குதாரர்கள் எல்லோருக்கும்) அப்பங்குகளே அல்லது அவற்றில் குறித்துரைக்கப் பட்ட விகிதாசாரமொன்றைக் கொள்ளுமாறு அல்லது முனைவைச் செய்யும் ஆளேயும் அவரது நியமத்தவரையும் தவிர்ந்த அப்பங்கு களின் குறித்த ஒரு வகுப்பைச் சேர்ந்தவற்றின் பங்குதாரர்கள் எல்லோருக்கும், அவ்வகுப்பினவான பங்குகளே அல்லது அவற்றின் குறித்துரைக்கப்பட்ட விகிதாசாரத்தைக் கொள்ளுமாறு செய்யப் பட்ட ஒரு முனைவு என்று பொருளாகும்.

## பாகம் V

### நிதி

35. (1) பேரவையானது அதன் சொந்த நிதியத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(2) பின்வருவன நிதியத்துட் செலுத்தப்படுதல் வேண்டும்:—

(அ) பேரவையின் பயன்பாட்டுக்கென, பாராளுமன்றத்திஞல் காலத்துக்குக் காலம் வாக்களிக்கப்படக் கூடியவாருன அத்தகைய எல்லாப் பணத் தொகைகளும்;

(ஆ) பதினைந்தாம் பிரிவின் கீழும் 20 ஆம் பிரிவின் கீழும் கட்டணங்கள் என்ற வகையில் செலுத்தப்படக்கூடியவாருன எல்லாப் பணத் தொகை களும்;

(இ) இலங்கையிலோ இலங்கைக்கு வெளியிலோ எத்தகையதுமான எம் மூலத்திலிருந்தேனும் நன்கொடைகள் வகையாக அல்லது கொடைகள் வகையாக அல்லது மானியக் கொடைகள் வகையாகப் பேரவையால் பெற்றுக்கொள்ளப்படக்கூடியவாருன அத்தகைய எல்லாப் பணத் தொகைகளும்.

(3) பேரவையானது அதனது தத்துவங்களையும், பணிகளையும் கடமைகளையும், பிரயோகிப்பதிலும், நிறைவேற்றுவதிலும், புரிவதிலும் அதனால் உறப்படும் செலவினத்தை ஈடுசெய்வதற்குத் தேவையான அத்தகைய பணத்தொகைகள் எல்லாம் நிதியத்திலிருந்து செலுத்தப்படுதல் வேண்டும்.

36. பேரவையின் நிதியாண்டானது ஒவ்வோர் ஆண்டினதும் சனவரி மாதம் முதலாம் நாளில் தொடங்கும் பன்னிரண்டு மாதங்களைக் கொண்ட காலப்பகுதியாதல் வேண்டும்.

37. (1) பேரவையானது அதனது வரவு செலவு, சொத்துக்கள், பொறுப்புக்கள் பற்றியனவும், பேரவையின் மற்றெல்லாக் கொடுக்கல் வாங்கல்கள் பற்றியனவுமான முறையான கணக்குப் புத்தகங்களை வைத்திருக்கச் செய்வித்தல் வேண்டும்.

(2) பகிரங்கக் கூட்டுத்தாபனங்களின் கணக்குகள் கணக்காய்வு செய்யப்படுதல் தொடர்பிலான அரசியலமைப்பின் 154 ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகள், பேரவையின் கணக்குகள் கணக்காய்வு செய்யப்படுதல் தொடர்பில் ஏற்புடையனவாதல் வேண்டும்.

38. (1) எவரேனும் முதலீட்டாளர் தொடர்பில் உரிமம் பெற்ற பங்குத் தொகுதித் தரகரொருவர் அல்லது உரிமம் பெற்ற பங்குத்தொகுதி வியாபாரியொருவர் அவரது ஒப்பந்தக் கடப்பாடுகளை நிறைவேற்றத் தவறுகின்றமையால் எழுவதான பண இழப்பை உறும் அந்த முதலீட்டாளருக்கு நட்டஈடு வழங்கும் நோக்கத்துக்காக நட்டஈட்டு நிதியம் என அழைக்கப்படுவதான நிதியமொன்று தாபிக்கப்படுதல் வேண்டும்.

(2) நட்டஈட்டு நிதியமானது நிதியத்தின் நோக்கத்துக்கெனப் பாராளுமன்றத்தினால் வாக்களிக்கப்படக் கூடியவாறான அத்தகைய பணத்தொகைகளைக் கொண்டமைந்திருத்தல் வேண்டும்.

(3) நட்டஈட்டு நிதியத்திற்குச் சொந்தமான பணங்கள் பேரவையினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய முறையில் பேரவையினால் முதலீடு செய்யப்படலாம்.

39. (1) அமைச்சரானவர், பேரவை உறுப்பினர்கள் மத்தியிலிருந்து (இதனகத்து பின்னர் ''குழு'' எனக் குறிப்பீடு செய்யப்படும்) பேரவையின் நட்டஈட்டுக் குழுவாக அமையவேண்டியோரான மூன்று உறுப்பினர்களை நியமித்தல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவின் கீழ் நியமிக்கப்பட்ட குழுவானது, 40 ஆம் பிரிவின் கீழ் செய்யப்பட்ட ஏதேனும் விண்ணப்பம் தொடர்பிலான நட்டஈட்டை மதிப்பீடு செய்வதற்கும், அளிப்பதற்கும் பொறுப்பாயிருத்தல் வேண்டும் என்பதுடன், அத்தகைய ஏதேனும் மதிப்பீடு அல்லது அளிப்பின் மீதான அத்தகைய குழுவின் முடிவானது எல்லா நோக்கங்களுக்காகவும் இறுதியானதும் முடிவானதுமாதல் வேண்டும்.

40. (1) எவரேனும் முதலீட்டாளர் தொடர்பில் உரிமம் பெற்ற பங்குத் தொகுதித் தரகர் ஒருவர் அல்லது உரிமம் பெற்ற பங்குத்தொகுதி வியாபாரி ஒருவர் அவரது ஒப்பந்தக் கடப்பாடுகளை நிறைவேற்றத் தவறியமை காரணமாக அத்தகைய முதலீட்டாளர் பண இழப்பை உற்றிருக்குமிடத்து, அத்தகைய முதலீட்டாளர் அத்தகைய பண இழப்பை உற்ற தேதியிலிருந்து மூன்று மாதங்களுள் நட்டஈட்டு நிதியத்திலிருந்து நட்டஈடு கோரி விதித்துரைக்கப்பட்ட படிவத்தில் குழுவுக்கு விண்ணப்பமொன்றைச் செய்யலாம்.

(2) குழுவானது, விண்ணப்பதாரரொருவரது நட்டஈட்டு உரிமைக் கோரிக்கைக்கு ஆதாரமளிக்கும் ஆவணம் எதனையும் அல்லது வேறு சான்றினை முன் வைக்குமாறு காலத்துக்குக் காலம் அவரைத் தேவைப்படுத்தலாம். விண்ணப்பதாரர் அத்தகைய வேண்டுகோளுக்கு இணங்கியொழுகத் தவறுமிடத்து, குழு அவரது உரிமைக் கோரிக்கையை அனுமதிக்க மறுக்கலாம்.

(3) குழுவானது அவ்வாறு செய்தல் அவசியமெனக் கருதினால் எந்நேரத்திலும், விண்ணப்பதாரரின் உரிமைக் கோரிக்கை தொடர்பில் விசாரணையொன்றை நடாத்தலாம் என்பதுடன் அறிவித்தலில் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய தேதியிலும், அத்தகைய நேரத்திலும் இடத்திலும் சமுகமளிக்குமாறு எழுத்திலான அறிவித்தல் மூலம் விண்ணப்பதாரருக்கு அறிவித்தலும் வேண்டும். அறிவித்தலில் தரப்பட்டுள்ள தேதியன்று அத்தகைய விசாரணையில் தோன்றுவதற்கு விண்ணப்பதாரர் தவறுமிடத்து, குழு அவரது உரிமைக் கோரிக்கையை அனுமதிக்க மறுக்கலாம்.

41. (1) குழுவானது, விண்ணப்பதாரரொருவரது உரிமைக் கோரிக்கைக்கு ஆதாரமாக முன் வைக்கப்பட்ட ஆவணங்களை அல்லது வேறு சான்றினைப் பரிசோதித்த பின்னர், அல்லது விசாரணையொன்று நடாத்தப்பட்டதான எவ் விடயத்திலும் அத்தகைய விசாரணையின் முடிவின்மீது, நட்டஈட்டுக்கான அத்தகைய உரிமைக் கோரிக்கையை அனுமதிக்கலாம் அல்லது அனுமதிக்க மறுக்கலாம்.

(2) குழு ஏதேனும் உரிமைக் கோரிக்கையை அனுமதிக்குமிடத்து, செலுத்தப்படற்பாலதான நட்டஈட்டுத் தொகை பற்றிய பெறுமதி மதிப்பீடொன்றை அது செய்தல் வேண்டும் என்பதுடன், அது தொடர்பில் அளிப்பொன்றைச் செய்தலும் வேண்டும். அத்தகைய அளிப்பு பற்றிய அறிவித்தல் விண்ணப்பதாரருக்கு எழுத்தில் வழங்கப்படுதல் வேண்டும்.

(3) பேரவையானது செலுத்தப்படற்பாலதான நட்டஈட்டுப் பெறுமதி மதிப்பீடு பற்றிய விதிகளை ஆக்குதல் வேண்டும் என்பதுடன், (2) ஆம் உட்பிரிவின் கீழ் குழுவினால் செய்யப்படும் நட்டஈட்டுப் பெறுமதி மதிப்பீடு அத்தகைய விதிகளுக்கு இணங்கவிருத்தலும் வேண்டும்.

## பாகம் VI

### பொது

42. (1) அமைச்சரானவர், பேரவையுடனுன கலந்தாலோசனையுடன் அதன் பிரதான நிறைவேற்று அலுவலராக இருக்கவேண்டியவரான பேரவையின் பணிப்பாளர் தலைமையதிபதி ஒருவரை நியமித்தல் வேண்டும். பணிப்பாளர் தலைமையதிபதியின் ஊதியம் உட்பட, ஊழிய நிபந்தனைகள், அமைச்சரால் தீர்மானிக்கப்படுதல் வேண்டும்.

(2) பணிப்பாளர் தலைமையதிபதியானவர், பேரவையின் பொதுவான பணிப்புகளுக்கும் கட்டுப்பாட்டுக்கும் அமைவாக, பேரவையின் அலுவல்களையும் கொடுக்கல் வாங்கல்களையும் நெறிப்படுத்துவதற்கும், அதன் தத்துவங்களைப் பிரயோகிப்பதற்கும் பணிகளை நிறைவேற்றுவதற்கும், கடமைகளைப் புரிவதற்கும், அத்துடன் பேரவையின் ஊழியர்கள் தொடர்பான நிருவாகத்துக்கும் கட்டுப்பாட்டுக்கும் பொறுப்பானவராகவிருத்தல் வேண்டும்.

(3) பணிப்பாளர் தலைமையதிபதியானவர், பேரவையின் அங்கீகாரத்துடன், அவ்வாறு செய்தல் அவசியமென அவர் கருதும் போதெல்லாம் இச்சட்டத்தால் அவருக்கு வழங்கப்பட்ட அல்லது அவர்மீது சுமத்தப்பட்ட அல்லது அவருக்குக் குறித்தொதுக்கப்பட்ட ஏதேனும் தத்துவத்தை, பணியை அல்லது கடமையை எவரேனும் ஊழியருக்குக் கையளிக்கலாம் என்பதுடன், அத்தகைய ஊழியர், பணிப்பாளர் தலைமையதிபதியின் பொதுவான அல்லது சிறப்பான பணிப்புகளுக்கமைவாக அத்தகைய தத்துவத்தை, பணியை அல்லது கடமையைப் பிரயோகித்தலும் நிறைவேற்றுதலும் அத்துடன் புரிதலும் வேண்டும்.

(4) அமைச்சரானவர் (1) ஆம் உட்பிரிவின் கீழ் நியமிக்கப்பட்ட பணிப்பாளர் தலைமையதிபதியைப் பதவியகற்றலாம் என்பதுடன், அத்தகைய பதவியகற்றுகையானது எந்நீதிமன்றத்திலும் கேள்விகட்குட்படுத்தப்படுதலுமாகாது.

43. (1) பேரவையானது, அதனது பணிகளைத் திறமையாக நிறைவேற்றுவதற்கு அவசியமானதெனக் கருதும் அத்தகைய பிற அலுவலர்களையும் சேவையாளர்களையும் நியமிக்கலாம்.

(2) ஓராம் உட்பிரிவின் கீழ் நியமிக்கப்பட்ட அலுவலர்களுக்கும் சேவையாளர்களுக்கும், பேரவையால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய முறையிலும் அத்தகைய வீதங்களிலும் ஊதியமளிக்கப்படுதல் வேண்டுமென்பதுடன், அத்தகைய சேவை நிபந்தனைகளுக்கு அவர்கள் அமைவானவர்களாக இருத்தலும் வேண்டும்.

(3) பேரவையின் வேண்டுகோளின்பேரில், பகிரங்க சேவையிலுள்ள அலுவலர் எவரும், அவ்வலுவலரினதும், அரசாங்க நிருவாகம் என்னும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரின் அமைச்சுச் செயலாளரினதும் சம்மதத்துடன், அதனையொத்த சம்மதத்துடன் பேரவையால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய காலப்பகுதிக்குத் தற்காலிகமாகப் பேரவைக்கு நியமிக்கப்படலாம் அல்லது அத்தகைய பணியாட்டொகுதிக்கு நிரந்தரமாக நியமிக்கப்படலாம்.

(4) பகிரங்க சேவையிலுள்ள அலுவலர் எவரும் பேரவையின் பணியாட்டொகுதிக்குத் தற்காலிகமாக நியமிக்கப்படுமிடத்து, 1975 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, போக்குவரத்துச் சபைச் சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகள், ஏற்றமாற்றங்களுடன், அவருக்கும் அவர் தொடர்பாகவும் ஏற்புடையனவாதல் வேண்டும்.

(5) பகிரங்க சேவையிலுள்ள அலுவலர் எவரும் பேரவையின் பணியாட்டொகுதிக்கு நிரந்தரமாக நியமிக்கப்படுமிடத்து, 1978 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்கப் போக்குவரத்துச் சபைச் சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகள், ஏற்றமாற்றங்களுடன், அவருக்கும் அவர் தொடர்பாகவும் ஏற்புடையனவாதல் வேண்டும்.

(6) குறித்துரைக்கப்பட்டவொரு காலப்பகுதிக்கு அரசாங்கத்துக்குச் சேவை புரிவதற்கு உடன்பட்டுள்ள ஆளெவரையும் பேரவை ஊழியத்திலமர்த்துமிடத்து, அவ்வாளினல் பேரவைக்குச் செய்யப்படும் சேவைக் காலப்பகுதி எதுவும், அத்தகைய உடன்படிக்கையின் கடப்பாடுகளை நிறைவேற்றும் நோக்கத்திற்காக அரசாங்கத்திற்குச் செய்யப்பட்ட சேவை என்றுற்போன்று கருதப்படுதல் வேண்டும்.

(7) பேரவையின் வேண்டுகோளின்பேரில், உள்ளூராட்சிச் சேவையின் உறுப்பினர் எவரும் அல்லது ஓர் உள்ளூரதிகாரசபையின் வேறு எவரேனும் அலுவலர் அல்லது சேவையாளர், விடயத்திற்கேற்றுற்போன்று உள்ளூராட்சிச் சேவை ஆணைக்குழுவின் அல்லது உள்ளூரதிகார சபையின் அத்தகைய உறுப்பினரது அல்லது அலுவலரது அல்லது சேவையாளரது சம்மதத்துடன், பேரவையினல் தீர்மானிக்கப்படக்கூடியவாறுன அத்தகைய காலப்பகுதிக்கு அத்தகைய பணியாட்டொகுதிக்குத் தற்காலிகமாக நியமிக்கப்படலாம் அல்லது பேரவையினலும் உள்ளூராட்சிச் சேவை ஆணைக்குழுவினலும் அல்லது உள்ளூரதிகாரசபையினலும் உடன்படக்கூடியவாறுன ஒய்வூதிய அல்லது சகாய நிதிய உரிமைகள் தொடர்பான நியதி நிபந்தனை உள்ளடக்கிய அத்தகைய நியதிகளின் மீதும் நிபந்தனைகளின் மீதும் அத்தகைய பணியாட்டொகுதிக்கு நிரந்தரமாக நியமிக்கப்படலாம்.

(8) உள்ளூராட்சிச் சேவையின் உறுப்பினர் எவரும் அல்லது ஏதேனும் உள்ளூரதிகாரசபையின் அலுவலர் எவரும் அல்லது சேவையாளர் எவரும் (7) ஆம் உட்பிரிவின் கீழ்ப் பேரவையின் பணியாட்டொகுதிக்குத் தற்காலிகமாக நியமிக்கப்படுமிடத்து, அத்தகைய பணியாட்டொகுதியின் வேறு எவரேனும் உறுப்பினரைப் போன்ற அதே ஒழுக்காற்றுக் கட்டுப்பாட்டுக்கு அவர் அமைந்தொழுகுதல் வேண்டும்.

44. (1) பேரவையின் வேண்டுகோளின்பேரில், பகிரங்கக் கூட்டுத்தாபனமொன்றின் எவரேனும் அலுவலர் அல்லது எவரேனும் சேவையாளர் அத்தகைய அலுவலரின் அல்லது சேவையாளரின், அத்துடன் அத்தகைய கூட்டுத்தாபனத்தின் ஆளும் சபையின் சம்மதத்துடன் அதனையொத்த சம்மதத்துடன் பேரவையினல் தீர்மானிக்கப்படக்கூடியவாறுன அத்தகைய காலப்பகுதிக்குப் பேரவையின் பணியாட்டொகுதிக்குத் தற்காலிகமாக நியமிக்கப்படலாம் அல்லது அதனையொத்த சம்மதத்துடன் அக் கூட்டுத்தாபனத்தின் ஆளும் சபையினலும் பேரவையினலும் உடன்பட்டுக் கொள்ளப்படக்கூடியவாறுன, ஒய்வூதிய அல்லது சகாய நிதிய உரிமைகள் தொடர்பான நியதி நிபந்தனைகள் உள்ளடக்கிய அத்தகைய நியதிகளின் மீதும் நிபந்தனைகளின் மீதும் பேரவையின் பணியாட்டொகுதிக்கு நிரந்தரமாக நியமிக்கப்படலாம்.

(2) ஆளெவரும் (1) ஆம் உட்பிரிவின்கீழ்த் தற்காலிகமாக அல்லது நிரந்தரமாகப் பேரவையின் பணியாட்டொகுதிக்கு நியமிக்கப்படுமிடத்து, பணியாட்டொகுதியின் வேறு எவரேனும் உறுப்பினரைப் போன்ற அதே ஒழுக்காற்றுக் கட்டுப்பாட்டுக்கு அமைந்தவராதல் வேண்டும்.

45. (1) இச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின்கீழ் பேரவையானது அதனது எவையேனும் தத்துவங்களை, பணிகளை மற்றும் கடமைகளைப் பிரயோகிப்பதற்கு நிறைவேற்றுவதற்கு அத்துடன் புரிவதற்கு இயலச் செய்யும் நோக்கத்திற்கென, பேரவை அல்லது பேரவையினால் அதன் சார்பாக அதிகாரமளிக்கப்பட்டுள்ள எவரேனும் ஆள், எழுத்திலான அறிவித்தல் மூலம் ஆளெவரையும் பேரவைக்கு அல்லது அதிகாரமளிக்கப் பெற்றுள்ள ஆளுக்கு, அத்தகைய அறிவித்தலில் குறித்துரைக்கப்பட வேண்டியவாறான அத்தகைய எல்லா விபரத் திரட்டுக்களையும் அல்லது தகவலையும், அறிவித்தலில் குறித்துரைக்கப்படவேண்டியவாறான அத்தகைய காலப்பகுதிக்குள் கொடுத்துதவுமாறு தேவைப்படுத்தலாம்.

(2) ஓராம் உட்பிரிவின் கீழான அறிவித்தல் ஒன்றன் மூலம் ஏதேனும் விபரத் திரட்டை அல்லது தகவலைக் கொடுத்துதவுமாறு தேவைப்படுத்தப்பட்ட எவரேனும் ஆள், ஏதேனும். சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் அத்தகைய தகவலை வெளிவிடுவதிலிருந்து அல்லது அத்தகைய விபரத்திரட்டைச் செய்வதிலிருந்து அத்தகைய ஆள் தடுக்கப்பட்டுள்ளவிடத்துத் தவிர, அத்தகைய அறிவித்தலில் குறித்துரைக்கப்பட்ட காலத்துக்குள்ளாக அத்தகைய தேவைப்பாட்டுக்கு இணங்கியொழுகுதல் அத்தகைய ஆளின் கடமையாதல் வேண்டும்.

(3) பேரவை அல்லது அதன் எவரேனும் உறுப்பினர் அல்லது பேரவையின் எவரேனும் அலுவலர் அல்லது சேவையாளர், (1) ஆம் உட்பிரிவின் கீழ்ப் பெறப்பட்ட ஏதேனும் விபரத்திரட்டை அல்லது தகவலை நீதிமன்றமொன்றினால் அவ்வாறு செய்யும்படி தேவைப்படுத்தப்பட்டாலொழியப் பேரவையின் குறிக்கோள்களை எய்தும் நோக்கங்களுக்குத் தவிர எவரேனும் ஆளுக்கு வெளிவிடுதலோ அல்லது பயன்படுத்தலோ ஆகாது.

46. (1) உரிமமளிக்கப்பட்ட பங்குத்தொகுதிப் பரிவர்த்தனையொன்றில், நிரற்படுத்தப்பட்ட ஏதேனும் பகிரங்கக் கம்பெனியின் பங்குதாரர்களினால், அத்தகைய பங்குத்தொகுதிப் பரிவர்த்தனையின், அல்லது அத்தகைய பரிவர்த்தனையின் எவரேனும் உரிமமளிக்கப்பட்ட பங்குத்தொகுதித் தரகரின் அல்லது பங்குத்தொகுதி வியாபாரியின் உயர்தொழில்சார் நடத்தை அல்லது செயற்பாடு தொடர்பில் செய்யப்படும் முறைப்பாடுகளைக் கேட்டுத் தீர்மானிப்பதற்கெனப் பேரவையின் மூன்று உறுப்பினர்களைக் கொண்டமைந்த குழுவொன்றைப் பேரவை தாபிக்கலாம்.

(2) குழுவானது எவரேனும் பங்குதாரரினால் செய்யப்படும் ஏதேனும் எழுத்திலான முறைப்பாடு கிடைக்கப்பெற்றதன்மீது, அத்தகைய முறைப்பாட்டுக்கு ஆதாரமாக முன்வைக்கப்பட்ட ஆவணங்களும் வேறு சான்றும் ஏதேனும் இருப்பின் அவற்றைப் பரிசீலனை செய்யலாம் என்பதுடன், அத்தகைய உரிமமளிக்கப்பட்ட பங்குத் தொகுதிப் பரிவர்த்தனை அல்லது அத்தகைய பங்குத்தொகுதிப் பரிவர்த்தனையின் எவரேனும் பங்குத் தொகுதித் தரகர் அல்லது பங்குத்தொகுதி வியாபாரி இச்சட்டத்தின் ஏற்பாடுகள் எவற்றையும் அல்லது இச்சட்டத்தின்கீழ் ஆக்கப்பட்ட ஏதேனும் விதியை அல்லது ஒழுங்கு விதியை மீறியுள்ளதா அல்லது மீறியுள்ளாரா எனத் தீர்மானித்தல் வேண்டும்.

(3) உரிமமளிக்கப்பட்ட பங்குத்தொகுதிப் பரிவர்த்தனையொன்று அல்லது அத்தகைய பரிவர்த்தனையின் எவரேனும் உரிமமளிக்கப்பட்ட பங்குத்தொகுதித் தரகர் அல்லது பங்குத்தொகுதி வியாபாரி இச்சட்டத்தின் எவையேனும் ஏற்பாடு களை அல்லது இச்சட்டத்தின் கீழ் ஆக்கப்பட்ட ஏதேனும் விதியை அல்லது ஒழுங்கு விதியை மீறியுள்ளது அல்லது மீறியுள்ளார் எனக் குழு தீர்மானிக்கின்ற விடத்து, குழுவானது விடயத்திற்கேற்ப, அத்தகைய உரிமமளிக்கப்பட்ட பங்குத் தொகுதிப் பரிவர்த்தனைக்கு அல்லது எவரேனும் பங்குத்தொகுதித் தரகருக்கு அல்லது பங்குத்தொகுதி வியாபாரிக்கு எதிராக எடுக்கப்பட்ட நடவடிக்கையின் தன்மையைப் பேரவைக்கு விதந்துரைத்தல் வேண்டும்.

அத்தகைய தீர்மானம் எதுவும் அத்தகைய உரிமமளிக்கப்பட்ட பங்குத் தொகுதிப் பரிவர்த்தனைக்கு உரிமமளிக்கப்பட்ட பங்குத்தொகுதித் தரகருக்கு அல்லது பங்குத்தொகுதி வியாபாரிக்குத் தம் திறம்கூறச் சந்தர்ப்பமொன்றை அளிக்காது எடுக்கப்படுதலாகாது.

(4) பேரவையானது (3) ஆம் உட்பிரிவின் கீழ்க் குழுவினால் செய்யப்பட்ட அத்தகைய விதப்புரைகள் கிடைக்கப்பெற்றதன்மீது, இச்சட்டத்தின் ஏற்பாடு களுக்கு இணங்க, உகந்ததென அது கருதக்கூடியவாறான அத்தகைய நடவடிக் கையை எடுத்தல் வேண்டும்.

47. பேரவையின் எல்லா உறுப்பினர்களும் அலுவலர்களும் சேவையாளர் களும் தண்டனைச் சட்டக்கோவையின் கருத்தெல்லைக்குட்படவும், அதன் நோக்கங் களுக்காகவும், பகிரங்க சேவையாளர்களாகக் கருதப்படுதல் வேண்டும்.

48. பேரவையானது, இலஞ்சச் சட்டத்தின் கருத்தினுள், அட்டவணைப் படுத்தப்பட்ட நிறுவனம் ஒன்றாகக் கருதப்படல் வேண்டும் என்பதுடன், அச் சட்டத்தின் ஏற்பாடுகள் அதற்கிணங்கப் பொருள் கொள்ளப்படலும் வேண்டும்.

49. அமைச்சரானவர், விபரத்திரட்டுக்களையும் கணக்குகளையும் பேரவை யின் வேலை தொடர்பான வேறு தகவல்களையும் அவர் தேவைப்படுத்தக்கூடிய வாறான அத்தகைய படிவத்தில் கொடுத்துதவுமாறு பேரவையைக் காலத்துக்குக் காலம் பணிக்கலாம் என்பதுடன், அத்தகைய பணிப்பு எதனையும் பேரவை நிறைவேற்றுதலும் வேண்டும்.

50. (1) பேரவையின் எவரேனும் உறுப்பினருக்கெதிராக அல்லது பேரவை யின் அலுவலர்களுள் அல்லது சேவையாளர்களுள் எவருக்கேனும் எதிராக இச் சட்டத்தின் கீழ் அல்லது பேரவையின் பணிப்பின் மீது அத்தகைய ஆளினால் நல்லெண்ணத்துடன் செய்யப்பட்ட அல்லது செய்யப்பட்டதாகக் கொள்ளப்பட்ட ஏதேனும் செயலுக்காகத் துடர்ச்சி எதுவும் அல்லது குற்ற வழக்கு எதுவும் தொடரப்படுதலாகாது.

(2) ஏதேனும் நீதிமன்றத்தின் முன்னர் பேரவையால் அல்லது பேரவைக் கெதிராகக் கொண்டுவரப்பட்ட ஏதேனும் துடர்ச்சியில் அல்லது குற்ற வழக்கில் பேரவையினால் கூறப்பட்ட எவையேனும் செலவுகள் பேரவையின் நிதியத்தி லிருந்து செலுத்தப்படுதல் வேண்டும் என்பதுடன், அத்தகைய ஏதேனும் துடர்ச்சி யில் அல்லது குற்ற வழக்கில் பேரவைக்குச் செலுத்தப்பட்ட அல்லது பேரவையால் அறவிடப்பட்ட எவையேனும் செலவு தொகைகள் பேரவையின் நிதியத்துக்கு வரவு வைக்கப்படுதல் வேண்டும்.

(3) ஓராம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்படுகின்றவரான அத்தகைய எவரேனுமாளினால் இச்சட்டத்தின் கீழ் அல்லது பேரவையின் பணிப்பின் மேல் செய்யப்படும் அல்லது செய்யப்படுவதாகக் கொள்ளப்படும் ஏதேனும் செயல் தொடர்பில் ஏதேனும் நீதிமன்றத்தின் முன்னர் அவருக்கெதிராகக் கொணரப்படும் துடர்ச்சி அல்லது குற்ற வழக்கு எதிலும் அத்தகைய ஆளினால் உறப்படும் செலவுகள் எவையும், அத்தகைய செயல் நல்லெண்ணத்துடன் செய்யப்பட்டதென நீதிமன்றம் தீர்த்தால், அத்தகைய செலவுகள் அத்தகைய துடர்ச்சியில் அல்லது குற்ற வழக்கில் அவரால் அறவிடப்பட்டாலன்றி, பேரவையின் நிதியத்திலிருந்து செலுத்தப்படுதல் வேண்டும்.

51. (1) (அ) இச்சட்டத்தின் ஏற்பாடு எதனையும் அல்லது இச்சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் அல்லது அதன் கீழாக்கப்பட்ட ஏதேனும் ஒழுங்குவிதியின் கீழ் விதிக்கப்பட்ட தேவைப்பாடு எதனையும் மீறுகின்ற;

(ஆ) அவரது அறிவுக்கெட்டியவரை உண்மையற்றதாக அல்லது செம்மையற்றதாக உள்ள ஏதேனும் தகவலை, அல்லது அவரது அறிவுக்கெட்டியவரை உண்மையற்றதும் செம்மையற்றதுமான உள்ளடக்கங்களைக் கொண்டுள்ள ஏதேனும் விபரத்திரட்டை இச்சட்டத்தின் நோக்கங்களுக்காகக் கொடுக்கின்ற; அல்லது

(இ) பேரவையின் எவரேனும் உறுப்பினர் அல்லது பேரவையின் அலுவலர் ஒருவர் அல்லது சேவையாளர் ஒருவர் இச்சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழான அவரது கடமைகளைப் புரிகையில் அவரை வேண்டுமென்றே தடைசெய்கின்ற,

ஆளெவரும் இச்சட்டத்தின் கீழான தவறொன்றிற்குக் குற்றவாளியாதல் வேண்டும்.

(2) இச்சட்டத்தின் கீழ்த் தண்டம் எதுவும் வெளிப்படையாக ஏற்பாடு செய்யப்படாததால் இச்சட்டத்தின் கீழான தவறொன்றுக்குக் குற்றவாளியாகக் காணப்படும் ஆள் எவரும், நீதிவானொருவர் முன்னராகச் சுருக்கமுறை விளக்கத்தின் பின்னர் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல் ஐந்து ஆண்டுகளுக்கு மேற்படாதவொரு காலத்துக்கான இருவகையிலொருவகை மறியற்றண்டனைக்கு அல்லது நூறு இலட்சம் ரூபாவை விஞ்சாதவொரு குற்றப் பணத்துக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம் மறியற்றண்டனை ஆகிய இரண்டிற்கும் ஆளாதலும் வேண்டும்.

53. (1) அமைச்சரானவர், விதித்துரைக்கப்படுதல் வேண்டுமென இச்சட்டத்தினால் தேவைப்படுத்தப்பட்ட விடயங்கள் தொடர்பில் அல்லது எவ்விடயங்கள் தொடர்பில் ஒழுங்குவிதிகள் ஆக்கப்படுவதற்கு அதிகாரமளிக்கப்பட்டுள்ளதோ அவ்விடயங்கள் தொடர்பில் ஒழுங்குவிதிகளை ஆக்கலாம்.

(2) அமைச்சரினல் ஆக்கப்படும் ஒழுங்குவிதி ஒவ்வொன்றும் கசெற்றில் வெளியிடப்படுதல் வேண்டும் என்பதுடன், அத்தகைய வெளியீட்டுத் தேதியன்று அல்லது ஒழுங்குவிதியில் குறித்துரைக்கக்கூடியவாறுன அத்தகைய பிந்திய தேதி யன்று நடைமுறைக்கு வருதலும் வேண்டும்.

(3) அமைச்சரினல் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதி ஒவ்வொன்றும், அது கசெற்றில் வெளியிடப்பட்ட பின்னர் வசதியான அளவு விரைவாக, அங்கீகாரத்துக்கெனப் பாராளுமன்றத்தின் முன்னர் கொண்டுவரப்படல் வேண்டும். அவ்வாறு அங்கீகரிக் கப்படாத ஒழுங்குவிதி எதுவும் அதன் கீழ் முன்னர் செய்யப்பட்ட எதற்கும் பங்கமின்றி, அத்தகைய அங்கீகார மறுப்புத் தேதியிலிருந்து நீக்கப்பட்டதாகக் கருதப்படுதல் வேண்டும்.

(4) ஒழுங்குவிதி எதுவும் நீக்கப்பட்டதாகக் கருதப்படும் தேதி பற்றிய அறிவிப்பானது கசெற்றில் வெளியிடப்படுதல் வேண்டும்.

53. பதின்மூன்றும் பிரிவினல் அதற்கு அளிக்கப்பட்ட தத்துவங்களின் பொதுமைக்குப் பங்கமின்றி, பேரவையானது, பிணையங்களில் கிரமமாகவும், நியாயமாகவும் வியாபாரஞ் செய்தலை உறுதிப்படுத்தும் நோக்கத்துக்கும், முத லீட்டாளர்களின் நலன்களைப் பாதுகாப்பதற்கும் என காலத்திற்குக் காலம் தேவைப்படக்கூடியவாறுன பின்வரும் விதிகளை வகுத்தமைத்தல் வேண்டும்:—

(அ) உரிமமளிக்கப்பட்ட பங்குத்தொகுதிப் பரிவர்த்தனையொன்றில் பிணை யங்களை நிரற்படுத்தல்;

(ஆ) பிணையங்களைப் பெறும் அல்லது கையுதிர்க்கும் ஆட்களினல் செய்யப் படும் பங்குக் கொடுக்கல் வாங்கல் பற்றித் தரகர்களாலும் வியாபாரி களாலும் அத்துடன் பிணையக் கொடுக்கல் வாங்கல்கள் பற்றி உரிம மளிக்கப்பட்ட பங்குத் தொகுதிப் பரிவர்த்தனையொன்றினலும் செய் யப்படும் வெளிப்படுத்துதல்கள்;

(இ) உரிமமளிக்கப்பட்ட பங்குத் தொகுதிகளினலும் உரிமமளிக்கப்பட்ட பங்குத் தொகுதி வியாபாரிகளினலும் புத்தகங்கள், பதிலேடுகள், கணக்குகள் ஆகியன முறையாகப் பேணிவரப்படுதலும் கணக்காய்வுகள் செய்யப்படுதலும் அத்துடன் அத்தகைய உரிமமளிக்கப்பட்ட பங்குத் தொகுதித் தரகர்களும் உரிமமளிக்கப்பட்ட பங்குத் தொகுதி வியாபாரி களும் அவர்களது அலுவல்கள் பற்றிப் பேரவைக்குக் கிரமமாக அறி க்கையிடுதலும்.

54. ஆயிரத்துத் தொளாயிரத்து எண்பத்திரண்டாம் ஆண்டின் 17 ஆம் இலக்க, கம்பெனிகள் சட்டமானது அச்சட்டத்தின் 220 ஆம், 221 ஆம், 222 ஆம், 223 ஆம் பிரிவுகளை நீக்குவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

55. இச்சட்டத்தில், சந்தருப்பம் வேறு வகையாகத் தேவைப்படுத்தினு லொழிய—

''முதலீட்டாளர்'' என்பது உரிமமளிக்கப்பட்ட பங்குத் தொகுதிப் பரிவர்த் தனை நிலையமொன்றின் உரிமமளிக்கப்பட்ட பங்குத் தொகுதித்

தரகர் ஒருவருக்கூடாகக் கொள்வனவு செய்யப்பட்ட அல்லது கொடுக்கல் வாங்கல் செய்யப்பட்ட பிணையங்களில் முதலீடு செய்தவர் என்று பொருள்படும்;

''நிரற்படுத்தப்பட்ட பகிரங்கக் கம்பெனி'' என்பது அதன் பிணையங்கள் உரிமமளிக்கப்பட்ட பங்குத் தொகுதிப் பரிவர்த்தனையொன்றில், நிரற்படுத்தப்பட்ட அல்லது விலை கோரப்பட்ட ஏதேனும் பகிரங்கக் கம்பெனி என்று பொருளாகும்;

''நிரற்படுத்தப்பட்ட பிணையங்கள்'' என்பது ஏதேனும் நிரற்படுத்தப்பட்ட பகிரங்க கம்பெனியின் பிணையங்கள் என்று பொருளாகும்;

''பிணையங்கள்'' என்பது பகிரங்கக் கம்பெனியொன்றிலுள்ள அல்லது கூட்டுத்தாபனம் ஒன்றிலுள்ள கடனீட்டுப் பத்திரங்களும், பங்குத் தொகுதிகளும், பங்குகளும் எனவும்; அவை தொடர்பாக ஏதேனும் உரிமை அல்லது விருப்புத் தெரிவு உட்பட ஏதேனும் அரசாங்கத்தின் அல்லது ஏதேனும் கூட்டிணைக்கப்பட்ட அல்லது கூட்டிணைக்கப் படாத குழுவின் நிதியங்கள் அல்லது முறிகள் என்றும் அல்லது பங்குத் தொகுதி பரிவர்த்தனையில் வாங்கப்படும் அல்லது விற்கப் படும் வேறு ஏதேனும் சான்றிதழ் அல்லது வட்டி என்றும் பொருள் படும்;

''பங்குத் தொகுதிப் பரிவர்த்தனை'' என்பது பிணையங்கள் வழமையாக விற்பனைக்கு, கொள்வனைக்கு அல்லது பரிமாற்றத்திற்குக் கொடை முனையப்படும் ஒரு சந்தைப் பரிவர்த்தனை அல்லது வேறு இடம் என்று பொருள்படும்;

''பங்குத் தொகுதித் தரகர்'' என்பது தரகருக்காக முதலீட்டாளர்களின் சார்பில் பிணையங்கள் வாங்கும் அல்லது விற்கும் தொழிலில் ஈடு பட்டுள்ள எவரேனும் தனியாள் அல்லது கூட்டிணைக்கப்பட்ட குழு என்று பொருளாகும்;

''பங்குத் தொகுதி வியாபாரி'' என்பது பிணையங்கள் வாங்குதலையும் விற்றலையும் உள்ளடக்கிய தொழிலில் ஈடுபட்டுள்ள அல்லது பிணையங்கள் கையாளுகையில், வேலையில், வியாபாரத்தில் ஈடுபட்டுள்ள, பிணையங்கள் நட்டஈடு செய்வதில் அல்லது அவற்றில் சில்லறை வியாபாரம் செய்வதில் ஈடுபட்டுள்ள தனிப்பட்ட ஆள் அல்லது கூட்டிணைக்கப்பட்ட குழுவொன்று எனப் பொருள்படும்.

அட்டவணை

பகுதி I—பிரிவு 16

கூட்டிணைக்கப்பட்ட குழுவொன்றுக்குப் பங்குத் தொகுதிப் பரிவர்த்தனை யொன்றாக உரிமம் வழங்கும் நோக்கத்துக்குத் திருப்திப்படுத்தப்பட வேண்டிய தேவைப்பாடுகளும் நிபந்தனைகளும் பின்வருவனவாகும்:—

(அ) விண்ணப்பகாரர்—

(1) 1982 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க, கம்பெனிகள் சட்டத்தின் கீழ்க் கூட்டிணைக்கப்பட்ட பொறுப்பு வரையறுக்கப்பட்ட பகிரங்கக் கம்பெனியொன்றாகும்; அல்லது

(2) 1982 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க, கம்பெனிகள் சட்டத்தின் 21 ஆம் பிரிவின் கீழ்ப் பொறுப்பு வரையறுக்கப்பட்ட கம்பெனியொன்றாகப் பதிவு செய்யப்பட்ட கழகமொன்றாகும்.

(ஆ) பந்தி (அ) வில் குறிப்பீடு செய்யப்பட்ட விண்ணப்பகார கம்பெனியின் அமைப்பாக விதிகள் உறுப்பினர்களுக்கு இலாபங்களைப் பகிர்ந்தளித்தல் எதனையும் அனுமதிக்காது;

(இ) விண்ணப்பகாரக் கம்பெனியின் அமைப்பு விதிகள் பங்குத் தொகுதிப் பரிவர்த்தனையின் உறுப்பாண்மையைத் தரகர்களுக்கும் வியாபாரிகளுக்கும் மட்டுமே மட்டுப்படுத்தப்படுகின்றது.

(ஈ) விண்ணப்பகாரக் கம்பெனியின் குறைந்தது ஆறு உறுப்பினர்கள் தனித் தனியாகவும் ஒருவருக்கொருவர் போட்டியாகவும் பிணையங்களில் தரகுத் தொழில் கொண்டு நடாத்துபவர் என்பதுடன், குறைந்தது நான்கு உறுப்பினர்கள் கடந்த ஐந்து ஆண்டு காலத்தின்போது பிணையங்களில் தரகுத் தொழில் செய்யும் அனுபவம் உடையவராகவும் இருந்தனர்;

(உ) விண்ணப்பகார கம்பெனி பங்குத் தொகுதிப் பரிவர்த்தனையொன்றைத் தொழிற்படுத்தும் தொழிலில் முழுக்க முழுக்க ஈடுபட்டுள்ளது;

(ஊ) விண்ணப்பகார கம்பெனியின் பணிப்பாளர் சபையும் பிரதான நிறைவேற்று அலுவலர்களும் தொழில் நற்கீர்த்தி பெற்ற ஆட்களைக் கொண்டுள்ளது;

(எ) விண்ணப்பகார கம்பெனியின் பணிப்பாளர் சபையானது, தனிப்பட்ட பங்குத் தொகுதித் தரகர்களான அல்லது பங்குத் தொகுதி வியாபாரிகளான அல்லது பங்குத் தொகுதித் தரகராக அல்லது பங்குத் தொகுதி வியாபாரியாக உரிமமளிக்கப்பட்ட ஏதேனும் கம்பெனியின் பொது உறுப்பாண்மையால் தெரிவு செய்யப்பட்ட நியமத்தர்களாக ஐந்து உறுப்பினர்களைக் கொண்டுள்ளது;

(ஏ) விண்ணப்பகார கம்பெனியின் இடவமைவும் செயற்பாடுகளும் இலங்கையில் பிணையங்களுக்கு இன்னும் கிரமமானவொரு சந்தை உருவாக்கப்படுவதை இயலச் செய்யும்;

(ஐ) விண்ணப்பகார கம்பெனியின் நிதி நிலைமை திருப்திகரமானதாகவுள்ளது; அத்துடன்

(ஒ) விண்ணப்பகார கம்பெனியின் விதிகள் பின்வருவனவற்றிற்குத் திருப்திகரமான ஏற்பாடு செய்கின்றது:—

(i) உறுப்பினர்களைச் சேர்த்துக் கொள்ளுதல்;

(ii) நற்பண்பும், உயர்ந்த தொழில் நற்கீர்த்தியும் கொண்டவர்கள் அல்லாத ஆட்களை உறுப்பாண்மையிலிருந்து விலக்குதல்;

(iii) தொழில் கொடுக்கல் வாங்கலில் நியாயமானதும் ஒப்புரவானதுமான நெறிகளுக்கு ஒவ்வாத நடத்தைக்காக அல்லது பங்குத் தொகுதிப் பரிவர்த்தனையின் விதிகளை அல்லது இச்சட்டத்தின் ஏற்பாடுகளை மீறியமைக்காக அல்லது அவற்றுடன் இணங்கியொழுகத் தவறியமைக்காக உறுப்பினர்களை விலக்குதல், இடைநிறுத்துதல் அல்லது அவர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுத்தல்;

(iv) அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதிகளையும் எழுதுநர்களையும் நியமித்தல்;

(v) சந்தையில் விற்பனைக்கெனப் பிணையங்கள் எந்த நிபந்தனைகளின் கீழ் நிரற்படுத்தப்படலாமோ அந்த நிபந்தனைகள்;

(vi) குறிப்பிட்ட பிணையமொன்றின் நிரற்படுத்துகை எந்த நிபந்தனைகளின் கீழ் ஒழிக்கப்படலாமோ அந்த நிபந்தனைகள்;

(vii) பிணையங்கள் அதன் உறுப்பினர்களால் கையாளப்படுவதை எந்த நிபந்தனைகள் ஆளுகின்றனவோ அந்த நிபந்தனைகள்;

(viii) முதலீட்டாளர்கள் தகவல் கொடுக்கப்பட்ட முதலீட்டு முடிவுகளைச் செய்வதற்குத் தேவையான எல்லாப் பிரதான தகவலையும் நேரகாலத்துடனும் திட்டமாகவும் வெளியிடுதல்;

(ix) பிறழ்பகர்வு, பிழைவழி உய்க்கும் தகவல், மோசடி, ஏமாற்றம், மற்றும் பிணையங்களை வழங்குவதிலும் அதில் வியாபாரம் செய்வதிலுமான ஏனைய பாதக வழக்காறுகள்; அத்துடன் பொது மக்களுக்கு இன்னும் கிடைக்கத்தக்கனவாகச் செய்யப்படாத சிறப்புரிமை பெற்ற தகவல்கள், குறித்த சில ஆட்களினால் துர்ப்பிரயோகம் செய்யப்படுதல் ஆகியவற்றிலிருந்து பிணையங்களில் முதலீடு செய்பவர்களைப் பாதுகாத்தல்;

( x ) பிழையான விற்பனை, சந்தைவிலைகளை வேண்டுமென்றே ஏற்றி யிறக்கல் முதலியன உள்ளிட்ட ஏதேனும் வகையான பிணையச் சந்தை ஏய்ப்புக் கையாளுகைகளைத் தடைசெய்தல்;

( xi ) பிணையங்களிலான வியாபாரம் பற்றியும் பங்குத் தொகுதித் தரகர்களில் நிதிசார் கொடுக்கல் வாங்கல்கள் பற்றியும் புலனுய்வு செய்தலும், உறுப்பினர்கள் மீது எதிர்பாராக் கண்காணிப்புக் களைச் செய்தலும்;

( xii ) முதலீட்டாளர்களின் பாதுகாப்புக்கும் அல்லது கிரமமான நியாய விற்பனையை நடத்துவதற்கும் எனக் கொடுக்கப்பட்ட ஏதேனும் பிணையத்திலான விற்பனையை இடைநிறுத்தி வைத்தல்;

( xii ) பங்குத் தொகுதி வியாபாரிகளினதும், பங்குத் தொகுதித் தரகர் களினதும் பிணைய விற்பனையை நடாத்துதலும் கொடுக்கல் வாங் கல் தொடர்பிலான தகவல் பேணப்பட வேண்டிய முறையும்; அத்துடன்

(xiii) வாடிக்கையாளரின் நிதிகள், பிணைய தரகர்களின் அல்லது வியா பாரிகளின் ஏனைய தொழிலும் தனி வேருக வைத்திருக்கப்படு வதை உறுதிப்படுத்துதல்.

பாபம் II—பிரிவு 17

கூட்டிணைக்கப்பட்ட குழுவொன்ருக அல்லது பங்குத் தொகுதித் தரகர் ஒருவராக அல்லது பங்குத் தொகுதி வியாபாரி ஒருவராக உரிமம் ஒன்று வழங்கும் நோக்கத்துக்கு இணங்கியொழுகப்பட வேண்டிய நியதி நிபந்தனைகள்:—

(அ) விண்ணப்பகார கம்பெனி இச்சட்டத்தின் கீழ் உரிமமளிக்கப்பட்ட பங்குத் தொகுதிப் பரிவர்த்தனையொன்றின் ஓர் உறுப்பினராகும்;

(ஆ) விண்ணப்பகாரர் 1982 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்கக் கம்பெனிகள் சட்டத்தின் கீழ் கூட்டிணைக்கப்பட்ட கம்பெனியொன்ருகும்;

(இ) விண்ணப்பகார கம்பெனியின் பணிப்பாளர்கள்—

( i ) வங்கிமுறிந்தவர் என எப்பொழுதும் வெளிப்படுத்தப்பட்டிருக்க வில்லை;

( ii ) தமக்கு அல்லது கம்பெனியொன்றின் பணிப்பாளர்கள் என்ற வகையில் பங்குத் தொகுதி வியாபாரியொருவராக அல்லது பங் குத் தொகுதித் தரகரொருவராக உரிமம் வழங்க மறுக்கப்பட்டவ ராக எப்பொழுதும் இருந்திருக்கவில்லை; அல்லது

( iii ) தமக்கு அல்லது கம்பெனியொன்றின் பணிப்பாளர்கள் என்ற வகையில் பங்குத் தொகுதித் தரகரொருவராக அல்லது பங்குத் தொகுதி வியாபாரியொருவராக வழங்கப்பட்ட உரிமம்தோதான அதிகாரியினுல் அகற்றப்பட்டவராக இருந்திருக்கவில்லை;

(ஈ) குறைந்தது ஒரு பணிப்பாளரும், விண்ணப்பகார கம்பெனியின் பிரதான ஊழியரான ஓர் ஊழியரும் பங்குத் தொகுதிப் பரிவர்த்தனைத் தொழிற்பாட்டில் போதியளவு பயிற்சியளிக்கப்பட்டவரென இச்சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் உரிமமளிக்கப்பட்ட பங்குத் தொகுதிப் பரிவர்த்தனையொன்றினுல் அத்தாட்சிப்படுத்தப்பட்டிருக்க வேண்டும்; அத்துடன்

(உ) விண்ணப்பகார கம்பெனியானது, அத்தகைய கம்பெனியினுல் கொண்டு நடாத்தப்படும் சாத்தியங் கொண்ட கொடுக்கல் வாங்கல் பெறுமதியைக் கவனத்திற் கொண்டு அமைச்சரினுல் தீர்மானிக்கப்படக்கூடிய வாறுன அத்தகைய பணத்தொகையில் அல்லது வங்கி உத்தரவாதம் மூலமான சமமானவொரு தொகையில், இச்சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் உரிமம் அளிக்கப்பட்ட பங்குத் தொகுதிப் பரிவர்த்தனையொன்றில் பிணைப் பொறுப்பு அளித்திருத்தல் வேண்டும்.

பாகம் III—பிரிவு 18

தனியாள் ஒருவருக்குப் பங்குத் தொகுதி வியாபாரியொருவராக அல்லது பங்குத் தொகுதித் தரகராக உரிமம் வழங்கப்படும் நோக்கத்துக்கு இணங்கியொழுகப்பட வேண்டிய நியதி, நிபந்தனைகளாவன:—

விண்ணப்பகாரர்—

(அ) இலங்கைப் பிரசையாகவிருத்தல் வேண்டும்;

(ஆ) பொருத்தமானவரும் தகுந்தவருமான ஆள் ஆகவிருப்பதுடன், நிதி வளம் படைத்தவராக இருத்தல் வேண்டும்.

(இ) இச்சட்டத்தின் கீழ் உரிமமளிக்கப்பட்ட பங்குத் தொகுதிப் பரிவர்த்தனையொன்றின் உறுப்பினராகவிருப்பதுடன், பங்குத் தொகுதிப் பரிவர்த்தனைத் தொழிற்பாட்டில் போதியளவு பயிற்சி பெற்றவர் என அத்தகைய பங்குத் தொகுதிப் பரிவர்த்தனையினுல் அத்தாட்சிப்படுத்தப்பட்டவராக இருத்தல் வேண்டும்;

(ஈ) அத்தகைய விண்ணப்பகாரரால் கொண்டு நடாத்தப்படும் சாத்தியங் கொண்ட கொடுக்கல் வாங்கல்களின் பெறுமதியைக் கருத்தில் கொண்டு அமைச்சரினுல் தீர்மானிக்கப்படக் கூடியவாறுன அத்தகைய பணத் தொகையிலான, அல்லது இச்சட்டத்தின் கீழ் உரிமமளிக்கப்பட்ட பங்குத் தொகுதிப் பரிவர்த்தனைக்கான வங்கி உத்தரவாதமொன்றுக்குச் சமமான பிணைப்பொறுப்பை அளித்திருத்தல் வேண்டும்; அத்துடன்.

(உ) இச்சட்டத்தின் கீழ் உரிமமளிக்கப்பட்ட ஏதேனும் பங்குத் தொகுதிப் பரிவர்த்தனையின் உறுப்பாண்மையிலிருந்து வெளியேற்றப்பட்டவராக அல்லது தடுத்து வைக்கப்பட்டவராக இருந்திருத்தல் ஆகாது.

# 1987 ஆம் ஆண்டின் 51 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டம்

*[1987, திசெம்பர் மாதம் 30 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது]*

**1988 ஆம் நிதியாண்டின் சேவைக்கு ஏற்பாடு செய்வதற்கும், அத்தகைய சேவையின் நோக்கத்திற்காக இலங்கையிலோ அல்லது இலங்கைக்கு வெளியிலோ கடன்களைத் திரட்டுவதற்கு அதிகாரமளிப்பதற்கும், அந்நிதியாண்டின்போது அரசாங்கத்தின் குறித்த சில முயற்சிகள் தொடர்பில் நிதி ஏற்பாடு செய்வதற்கும், அத்தகைய முயற்சிகளின் செலவினத்திற்கு அந்நிதியாண்டின்போது தேவைப்படும் பணங்களைத் திரட்டு நிதியத்திலிருந்து அல்லது அதனிடமுள்ள வேறேதேனும் நிதியத்திலிருந்து அல்லது பணங்களிலிருந்து முற்பணமாகக் கொடுப்பதை இயலச்செய்வதற்கும், திரட்டுநிதியத்திற்கு அத்தகைய பணங்களை மீளளிப்பதற்கு ஏற்பாடு செய்வதற்கும், அத்துடன் மேற்சொல்லப்பட்ட கருமங்களுடன் தொடர்பான அல்லது அவற்றின் இடைநேர் விளைவான கருமங்களுக்கு ஏற்பாடு செய்வதற்குமான ஒரு சட்டம்.**

1. இச்சட்டம் 1987 ஆம் ஆண்டின் 51 ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

2. (1) இச்சட்டத்தில், ''நிதியாண்டான 1988 ஆம் ஆண்டு'' எனக் குறிப்பீடு செய்யப்படுவதும், 1988 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி தொடங்கி 1988 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் தேதியன்று முடிவடைவதுமான காலப்பகுதிக்கான சேவைக்காக ஆறுயிரத்து முந்நூற்றைம்பத்தேழு கோடி முப்பத்தாறு இலட்சத்து முப்பத்துநாலாயிரம் ரூபாவென மதிப்பிடப்படும் அரசாங்கத்தின் செலவினத் தொகையானது, செலவினம் எதற்கும் அதிகாரமளிக்கும் வேறு சட்டமெதற்கும், பங்கமின்றி—

(அ) திரட்டு நிதியத்திலிருந்து அல்லது அரசாங்கத்தின் அல்லது அதனிடமுள்ள வேறேதேனும் நிதியத்திலிருந்து அல்லது பணங்களிலிருந்து வழங்கப்பட வேண்டுமென இத்தால் அதிகாரமளிக்கப்பட்டுள்ள கொடுப்பனவுகளிலிருந்தும்; அத்துடன்

(ஆ) அரசாங்கத்துக்காகவும் அதன் சார்பிலும் இலங்கையிலோ, வெளிநாட்டிலோ திரட்டப்பட வேண்டுமென இத்தால் அதிகாரமளிக்கப்பட்டுள்ள கடன்களின் வரும்படியிலிருந்தும் பெறப்படல் வேண்டும்.

ஆகவே, எவ்வாறுயினும் அத்தகைய வரும்படியின் கூட்டு மொத்தத் தொகையானது மூவாயிரத்து எழுநூற்றுப் பன்னிரண்டு கோடி ரூபாவினை விஞ்சுதலாகாது.

இதன்கண், முன்னர் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள ஆறுயிரத்து முந்நூற்றைம்பத்தேழு கோடி முப்பத்தாறு இலட்சத்து முப்பத்து நாலாயிரம் ரூபா கொண்ட பணத்தொகை இச்சட்டத்திற்கான முதலாம் அட்டவணையிற் குறித்துரைக்கப்பட்டுள்ளவாறு செலவிடப்படலாம்.

(2) இப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகள், அரசாங்கத்துக்காகவும், அதன் சார்பிலும் கடன் திரட்டுவதற்கு அதிகாரமளிக்கும் எழுத்திலான வேறு ஏதேனும் சட்டத்தின் ஏற்பாடுகளுக்குப் பங்கமின்றி பயனுடையனவாதல் வேண்டும்.

3. (1) நிதியாண்டான 1988 ஆம் ஆண்டின்போது, இச்சட்டத்திற்கான இரண்டாம் அட்டவணையின் 1 ஆம் நிரையிற் குறித்துரைக்கப்பட்டுள்ள ஒவ்வொரு முயற்சியிலிருந்தும் அரசாங்கம் பெறும் பெறுகைகள், அத்தகைய முயற்சிகளின் கணக்கில் வரவு வைக்கப்படுதல் வேண்டும் என்பதுடன், அவ்வாறு வரவு வைக்கப்படும் பெறுகைகளின் கூட்டு மொத்தத் தொகையானது, அந்த அட்டவணையின் 111 ஆம் நிரையில் உள்ள நேரொத்த பதிவில் குறித்துரைக்கப்பட்டுள்ள ஆகக் குறைந்த எல்லையிலும் பார்க்கக் குறைந்ததாக இருத்தலுமாகாது. அத்தகைய முயற்சியின் தேறிய மேன் மிகை ஏதேனுமிருப்பின், அத்தேறிய மேன் மிகையானது நிதியாண்டான 1988 ஆம் ஆண்டு முடிவுற்ற பின்னர் ஆறு மாதங்கள் முடிவடைவதற்கு முன்னர், திரட்டு நிதியத்திற்குச் செலுத்தப்படுதல் வேண்டும்.

(2) ஒராம் உட்பிரிவின் கீழான தேறிய மேன்மிகையைத் தீர்மானிக்கும் நோக்கத்துக்காகப் பின்வரும் கட்டணங்கள், அவையாவன:—

(அ) முயற்சியினது வருமானத்திற்கு முறைப்படி பொறுப்பாக்கப்படற்பாலனவான, கொடுக்கப்பட்டனவாயினுஞ்சரி அல்லது சேர்மானமானவையாயினுஞ்சரி முயற்சியினது தொழிற்பாட்டு, தாபன, மற்றும் ஏனைய செலவுகள்; அத்துடன்

(ஆ) முயற்சியினது அசைவுள்ளனவும் அசைவற்றனவுமான, சொத்தினது தேய்மானத்தை மேவுவதற்கான ஏற்பாடு,

என்பன, ஒவ்வொரு முயற்சியின் வருமானத்திலும் எதிரீடு செய்யப்படல் வேண்டும்.

(3) நிதியாண்டான 1988 ஆம் ஆண்டின்போது, இச்சட்டத்திற்கான இரண்டாம் அட்டவணையின் 1 ஆம் நிரையிற் குறித்துரைக்கப்பட்டுள்ள ஒவ்வொரு முயற்சியின் பேரிலும், அரசாங்கத்தால் உறப்படும் செலவினம், அந்த நிதி ஆண்டின்போது அத்தகைய முயற்சியிலிருந்து அரசாங்கம் பெறும் வரவுகளிலிருந்து கொடுபடுதல் வேண்டும். ஆனல், அத்தகைய செலவினம் அந்த அட்டவணையின் 11 ஆம் நிரையிலுள்ள நேரொத்த பதிவில் குறித்துரைக்கப்பட்டுள்ள ஆகக் கூடிய எல்லைக்கு மேற்படலாகாது.

(4) நிதியாண்டான 1988 ஆம் ஆண்டின் முடிவில், இச்சட்டத்திற்கான இரண்டாம் அட்டவணையின் 1 ஆம் நிரையிற் குறித்துரைக்கப்பட்டுள்ள ஏதேனும் முயற்சியிலிருந்து நிலுவையாகவுள்ள பற்று மீதி, அந்த அட்டவணையின் IV ஆம் நிரையிலுள்ள நேரொத்த பதிவில் குறித்துரைக்கப்பட்டுள்ள ஆகக் கூடிய எல்லைக்கு மேற்படலாகாது. அத்துடன் அந்த நிதியாண்டின் முடிவில் அந்த முயற்சியின் மொத்தப் பொறுப்புகள், அந்த அட்டவணையின் V ஆம் நிரையிலுள்ள நேரொத்த பதிவில் குறித்துரைக்கப்பட்டுள்ள ஆகக் கூடிய எல்லைக்கு மேற்படலாகாது.

4. நிதியாண்டான 1988 ஆம் ஆண்டின்போது எப்போதேனும் இச் சட்டத்திற்கான இரண்டாம் அட்டவணையின் 1 ஆம் நிரையிற் குறித்துரைக்கப் பட்டுள்ள எவையேனும் முயற்சிகளிலிருந்து அரசாங்கம் பெறும் வரவுகள், அத் தகைய முயற்சியின்மீது அரசாங்கத்தினுல் உறப்பட்ட செலவினங்களுக்குப் போதி யனவாயிராவிடின், அமைச்சர், அத்தகைய செலவினத்திற்கு அவசியமெனக் கருதும் அத்தகைய தொகைகள் முற்பணங்களாகத் திரட்டு நிதியத்திலிருந்து அல்லது அரசாங்கத்துக்குச் சேர்ந்த அல்லது அதனிடமுள்ள வேறேதேனும் நிதி யத்திலிருந்து அல்லது பணங்களிலிருந்து கொடுபடுதல் வேண்டுமெனக் காலத்துக் குக் காலம் கட்டளைமூலம் பணிக்கலாம். எவ்வாருயினும், அவ்வாறு முற்பண மாகக் கொடுக்கப்படும் பணத்தொகைகளின் கூட்டு மொத்தத் தொகை, அந்த அட்டவணையின் 11 ஆம் நிரையிலுள்ள அதன் நேரொத்த பதிவில் குறித்துரைக் கப்பட்டுள்ள செலவினங்களின் ஆகக் கூடிய எல்லைக்கு மேற்படாமலிருத்தல் வேண்டும். அத்தகைய முயற்சி சம்பந்தமாக அவ்வாறு முற்பணமாகக் கொடுக்கப் பட்ட ஏதேனும் பணத் தொகை அமைச்சராற் கட்டளை மூலம் பணிக்கப்படக் கூடிய அத்தகைய முறையில் திரட்டு நிதியத்துக்கு மீண்டும் கொடுபடுதல் வேண்டும்.

5. (1) இச்சட்டத்திற்கான முதலாம் அட்டவணையின் ஏற்பாடுகளின் பய னுக, அட்டவணையில் குறித்துரைக்கப்பட்டுள்ள எந்தத் தலைப்பின் கீழும் தோன் றும் எந்த நிகழ்ச்சித் திட்டத்தின் கீழும், மீண்டுவரும் செலவினத்திற்குப் பகிர்ந் தளிக்கப்பட்டிருந்தது. ஆனுல் செலவு செய்யப்படாமலும் அல்லது செலவு செய்யப் படுதல் சாத்தியமில்லாமலும் இருக்கும் எவையேனும் பணங்கள், திறைசேரிச் செயலாளரின் அல்லது அவரால் அதிகாரமளிக்கப்பட்ட வேறெவரேனும் அலுவல ரின் கட்டளைமூலம் அந்நிகழ்ச்சித் திட்டத்திற்குட்பட்ட ஆக்கப்பொருட் செல வினத்திற்கெனச் செய்யும் பகிர்வுக்கு அல்லது அத்தலைப்பிற்குட்பட்ட வேறே தேனும் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் மீண்டுவருஞ் செலவினம் அல்லது ஆக்கப் பொருட் செலவினம் என்ற பகிர்வுக்கு மாற்றப்படலாம்.

(2) இச்சட்டத்திற்கான முதலாம் அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட ஏதேனும் தலைப்பின் கீழுள்ள நிகழ்ச்சித் திட்டமெதன் கீழும் ஆக்கப்பொருட் செலவுக்குப் பகிரப்பட்டுள்ள பணங்களெவையும் அப்பகிர்விலிருந்து வேறெதற்கும் மாற்றப்படல் ஆகாது.

6. (1) வரிகளிலிருந்தும் வேறு மூலங்களிலிருந்தும் பெறப்படும் வரவுகள், அதிகாரமளிக்கப்பட்ட செலவினங்களுக்கு நிதி வசதியளிப்பதற்கென எதிர்பார்க் கப்பட்ட பணத் தொகைகளையும் விடக் குறைவாயிருக்குமென; அல்லது

(2) ஒரு குறிப்பிட்ட நோக்கத்திற்கு அல்லது நோக்கங்களுக்கு முதலில் ஒதுக்கப்பட்ட பணத் தொகைகள் மேலும் தேவைப்படமாட்டாவென,

அமைச்சர் திருப்திப்படுமிடத்து, திரட்டு நிதியத்திலிருந்து அல்லது அரசாங் கத்திற்குச் சேர்ந்த அல்லது அதனிடமுள்ள வேறேதேனும் நிதியத்திலிருந்து அல்லது பணங்களிலிருந்து அவரால் வழங்கப்பட்ட ஆணைப்பத்திரத்தின் அதி காரத்தின் கீழான செலவினத்திற்காக முன்னர் வழங்கப்பட்ட எவையேனும் பணத் தொகைகளை அரசாங்கத்தின் அங்கீகாரத்துடன் முழுமையாக அல்லது பகுதியளவில் அவர் மீளப் பெறலாம்.

7. (அ) இச்சட்டத்திற்கான இரண்டாம் அட்டவணையின் 11 ஆம் நிரையிலும் IV ஆம் நிரையிலும் V ஆம் நிரையிலும் குறித்துரைக்கப்பட்டுள்ள ஆகக் கூடிய எல்லைகளுள் எதனையும்,

(ஆ) இச்சட்டத்திற்கான இரண்டாம் அட்டவணையின் 111 ஆம் நிரையில் குறித்துரைக்கப்பட்டுள்ள ஆகக் குறைந்த எல்லைக்குள் எதனையும்,

அமைச்சர் அரசாங்கத்தின் அங்கீகாரத்தோடு 1989 ஆம் ஆண்டு மே மாதம் 31 ஆம் தேதியன்று அல்லது அதற்கு முன்னர் கட்டளைமூலம் வேறுபடுத்தலாம் அல்லது மாற்றலாம்.

இப்பிரிவின் கீழ் ஆக்கப்படும் கட்டளை எதுவும் பாராளுமன்றத்தால் தீர்மானத்தின் மூலம் அங்கீகரிக்கப்பட்டிருந்தாலன்றிப் பயனுடையதாதலாகாது.

அத்தகைய கட்டளை எதுவும் அதன்கண் அவ்விதம் கூறப்பட்டிருந்தால், அதன்கண் குறிப்பிடப்பட்டிருக்கக்கூடியதும் அத்தகைய கட்டளை ஆக்கப்பட்ட தேதிக்கு முந்தியதுமான அத்தகைய தேதியிலிருந்து பயனுடையதாயிருந்ததாகக் கருதப்படல் வேண்டும்.

8. பாராளுமன்றமானது, தீர்மானத்தின் மூலம் இச்சட்டத்திற்கான இரண்டாம் அட்டவணையை, அட்டவணையின் தோதான நிரைகளுக்கு ஏதேனும் முயற்சியையும்—

(அ) அத்தகைய முயற்சி தொடர்பிலான எல்லா ஆகக் கூடிய எல்லைகளையும் அல்லது அவற்றுள் எவற்றையும்;

(ஆ) அத்தகைய முயற்சி தொடர்பிலான ஆகக் குறைந்த எல்லையையும்,

சேர்ப்பதன் மூலம் திருத்தலாம்.